

அருணாசல மாகாத்மிய வசனம்.

இஃது

அருணாசல நிவாஸ

ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகளால் அருளப்பெற்று

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது.

திருவண்ணாமலை.

 [விலை 0 12 0

சுவாமி சுத்தாநந்த பாரதியார்

இயற்றிய நூல்கள்.

1. அறநூல் (மூலமும் உரையும்).	0	12	0
2. ஷை மூலம்.	C	3	0
3. ராமகிருஷ்ணாமிருதம்.	0	6	0
4. வீரசிவாஜி விஜயம்.	0	3	0
5. புத்த விஜயம்.	0	4	0
6. ஜினனந்தம்.	0	8	0
7. ஏகநாதர் சரிதை.	0	6	0
8. ஜரதுஷ்டிரன்.	0	1	0
9. பாரத கீதம் (முதல்பாகம்).	0	2	0
10. ,, (இரண்டாம்பாகம்).	0	2	0
11. அறநூல் (ஆங்கிலம் அச்சில்).	0	4	0

அருணாசல மாகாத்மிய வசனம்

(சிவஞானபோதமும், மகான்களின் சரித்திர படங்களும் அடங்கியது).

இஃது

அருணாசல நிவாஸ
ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகளால்
இயற்றி யருளப்பெற்று

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயத்தாரால்
திருவண்ணாமலை நாகராஜா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு 1000 காபிகள்.

1928

 [விலை 0 12 0

விஷய ஸூசிகை. பக்கம்.

அட்டவணை முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
நூல்வரலாறு	2	மகாத்மிய	மாகாத்மிய
நான்முகம்	11	வைபு	வு
4	12	தூய்	தாய்
9	24	ஸூதி:	ஸ்ரூதி:
11	12	மையை	மை
16	27	தரிச்சி	தரிசித்
21	18	தொளிரும	தொளிரும்
30	8	வறியற்	வறியர்க்
34	5	மாந்தன்னை	மாமதனை
54	24	குணகள்	குகைகள்
99	26	உடுக்கைகக	உடுக்கைக
111	29	ஷடாக்ஷ	ஷடக்ஷர

அருணகிரி மான்மியம்.

1. கலையிலுங் கருத்திலுங் காணி லாததை
யிலையென தருளினி தியற்றிடும் உண்ணு
முலையருள் பழுத்திட முத்தி முற்றிடும்
மலையிதே யண்ணல்மா மலைக ளுக்கரோ!

2. அலைவுறு மனத்தினை யமர்த்தி மெய்த்தவ
மலையென நின்றிட வான வர்க்கரும்
மலையிது; சோதிமா மலை; அருட்சுடர்;
தலைபெறுங் காட்சியார் சாட்சி யிதரோ!

கிரிப்ரதட்சிணப் பெருமை.

வேறு.


3. வற்றி மாதவ மாற்றிடு மாந்தர்காள்!
சுற்று மோர்முறை சோண கிரிதனை
முற்றிற் றன்றுடன் முன்வினை! ஆங்கனே
நற்ற வக்கனி நாடிடு மும்மையே!

வேறு.

4. ஏதுபொருள்? எங்குள தெமக்கருகி லாமோ
சோதியென மூதுலகிற் றொண்டரலை கின்றார்
ஆதியரு ணாசல மமர்ந்துள மமர்ந்தால்
ஈதுபொரு ளீதுபொரு ளென்றுவகை யாவார்.

வேறு.

5. வாழ்வினை யுயர்த்திட, மனம் பழுத்திட
ஊழ்வினை தன்னையு முதிர்த்திங் குற்றவர்
ஆழ்வினைத் தவந்தரு மான்ம சக்தியே
சூழவர் வாழியிச் சோதி மாமலை.



அருணாசல நிவாஸ

ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள்.

அருணசல மான்மிய மியற்றிய

உயர்திரு ஈச்வர ஸ்வாமிகள் பெருமை.

ஓதவரும், உள்ளவரும், ஒண்கருணை யோங்கும்,
சோநிகிரி மான்மியந் துளக்கற வுரைத்தான்
ஆதிமறை யின்வடி வமர்ந்த ரமணேசன்
காதல்பெறும் ஈசுவர சுவாமிகழல் வாழி.

விருபாக்ஷி குகை.
திருவண்ணாமலை.

சுத்தானந்த பாரதி.
1—11—28.

சிறப்புப் பாயிரம்.

நூல் வரலாறு:— அன்பின்மிக்க அறிஞர்காள்! "ஸ்ரீ அருணசல மகாத்மிய வசனம்" என்னும் இவ்வரிய நூலை திருவருணைமாநகரில் எழுந்தருளியிருக்கும் எனது குருநாதரான ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள் என்னும் பெரியார் எமது வேண்டுகோட்குகந்து தென்மொழி வடமொழி காவியக்ரந்தங்களைக் கடைந்து திரட்டி பண்டித பாமரரனைவர்க்கும் உபயோகமாகும்படி செந்தமிழ் வசன நடையில் இயற்றித்தந்தார்கள்.

ஸ்வாமி ஈச்வர சரிதம்:— இப்பரத நாட்டின் நாயகமணியென விளங்கும் சோழமண்டலத்தின் வடக்கெல்லையாக ஓடிப்பாயும் தென் பெண்ணை நதியின் தென்கரையில் ஈரடியால் உலகனைத்தையும் அளந்த திரிவிக்ரமரும் அந்தகனை ஸம்ஹரித்த வீரட்டானேசரும் ஆலயங்கொண்டமர்ந்தொளிர்வது திருக்கோவிலூர்என்னும் க்ஷேத்திரம். இப்

பட்டணத்திற்குத் தென்பால் நீர்வளநிலவளம் நிறைந்ததும், எப்பொருட்கு மிறைவர் உமாபதி அர்த்தநாரீசராய் ஆலயங் கொண்டு வசிப்பதால், "இறைவாச நல்லூர்" எனத் திருப் பெயர் பூண்டதுமான நகரை சற்றேறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்குமுன் ஆண்டுவந்த தெய்விகராஜன் புத்திரப் பேறில்லாமல் அர்த்தநாரீசரை பக்திபண்ணிவர அக்கடவுள் கனவில்தோன்றி உரைத்தபடி ஹரித வாஸிஷ்ட பார்க்கவ கோத்திரத் தந்தணர்களுக்கு முந்நூற்றறுபது வீடுகள் கட்டி தானம் செய்து வருகையில் ஓரில்லத்திற்கு மாத்திரம் அந்தணர் கிட்டாது வருந்தி யிருந்தான். அக்காலையில் அர்த் தநாரீசர் ஹரித கோத்திரத் தந்தண தம்பதி வடிவாகி அர சன் முன் தோன்றி பாதி வீடு யாசித்துப்பெற்று, எல்லா வீடுகளிலும் பாதியென வழக்கிட்டுப் பாகம் பெற்றதால் கிராமார்த்தநாரீசுவரர் எனத் திருப்பெயர் புனைந்தமர்ந்தனர். அர்த்தநாரீசரே எதிர்வழக்கிட்டு தங்கள் வீட்டில் பாதி பகிர்ந்து கொண்டதால் அவரையே ஞாதியாகவும், அன்னை பிதா குரு தெய்வம் அனைத்துமாகவும் கொண்டவர்கள் அவ்வூரிலுள்ள அம்முக்குலத்தந்தணர்கள்.

அவ்வரித கோத்திரத் தந்தணர் மரபில் வந்த கிராம பூபதி தேவராஜ தீக்ஷிதர் குமாரர் கல்வி செல்வ மிக்க சிவ பக்தியிற் சிறந்த அன்னதான சிலரான அருணாசல தீக்ஷி தரின் அருந்தவப் புதல்வராய் ஸ்ரீபாலாம்பிகை என்னும் கற்புக்கரசியிடம் கலி 4981 விக்ரமஸூ கார்த்திகைமீ 9உ ஈசருக்குகந்த சோமவாரம் புஷ்ய நக்ஷத்திரம் கடகலக்னத் துதித்து போற்றுதற்கினிய ஈச்வர ரென்னும் திருநாமம் பூண்டு பருவமதியென வளர்ந்து திருக்கோவிலூர் ஆங்கில கலாசாலையில் கல்வி பயின்று கரகத்தில் நாட்டம் வைத்து கம்பத்தின் மீதாடும் கழைக்கூத்தன் போலவும், திருநீற்

றிடை தங்கும் கழற்சிக்காயெனவும் அருணாசலத்தில் நாட் டங்கொண்டு வீட்டுடன் பழகிவந்தார். தாய் தந்தையர் முதலிய பற்றுள்ள சுற்றம் யாவையும் காலக்ரமத்தில் தம் திருவடி நீழலிற் சேர்த்துக்கொண்ட அருணேசரின் திரு வருட் செயலுக்கு உளமகிழ்ந்து கலி 5011 சாதாரணஞு மாசிமீ சிவராத்ரியன்று திருவண்ணாமலைக்கு வந்து ஐய மற்ற அவதூதாச்ரமிகளாய் ஸ்வாமி ஈச்வர ரென்னும் தவப்பெயர் தாங்கி பவக்கடலுடன் கலைக்கடலையும் கடந்து சிவானுபூதிச் செல்வராய் அருணாசலத்தில் எழுந்தருளி யிருக்கின்றனர்.

நூற்பயன்:— ஸ்வாமிகள் இயற்றியருளிய ஸ்ரீ அரு ணாசல மாகாத்மியவசனம் என்னும் இம்மாபெரு நூலானது பந்தமாகிற ஊனுடல் பவபுரத்திலிருந்து முக்தியாகிற வானொ ளிர் சிவபுரத்தைச் சேரவிரும்பிய முமுக்ஷுக்களுக்குத் தானாகக் கிடைத்த புஷ்பகவிமானமே யாகும்.

திருவண்ணாமலை. S. நாராயணஸாமி.

அந்தரத் தமரர் போற்று மருணேசர் மான்மி யத்தை
முந்துறு கவிஞர் யாத்த மூதுரை களினுந் தீஞ்சொல்
சந்தசெந் தமிழால் ஞானத் தவத்தினர்க் கருள வெண்ணி
யெந்தமக் குகந்த ளித்த வீசனு ரடிகள் போற்றி.

திருவருணை. கன்னிகேசுவரன்.

—o✧o—

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

நூன்முகம்.

நூன்முகம் பயின்ற நான்மறை முடியில் வான்பதம் வைத்திலகும் அருணசலமாகாத்மியத்தை ஸ்காந்தம் மாகேச்வர கண்டத்தள் 2060 சுலோகங்கள் கொண்ட 37 அத்தியாயங்களாக வாதராயண முனிவர் வடமொழியில் வகுத்தனர். அரும் பெரும் புலவரான சைவ எல்லப்ப நாவலரும், சிதம்பரம் மறைஞான தேசிகரும் அருணசல புராணம், அருணகிரி புராணம் என்னும் அழகிய தமிழ் விருத்தப் பாக்களாலாகிய நூல்களை முறையே இயற்றினர். தவிர, சுதர்சனகிரி புராணம் என்னும் விஷ்ணுபரமான நூலும் இதற்குண்டு. இவையாவையும் நவரசம் ததும்பி பாடகரின் அறிவுக்கு விருந்தாய் அமைந்துள்ளன. திருவருணை மாநகரை அடுத்துள்ள இத்தெய்வ மலையை அயனரிகளுக்கு ஞானமருளிய சிவபெருமானுருவென்று சிவபக்தரும், தன் பக்தனுக்கிடரிழைத்த துருவாச முனிவர்மேல் மகாவிஷ்ணு கோபித்தேவிய சக்ரத்தாழ்வார் (சுதர்சன) கிரி என்று வைஷ்ணவரும், "ஸ்ரீ சக்ராக்ருதி சோணசைல வபு:" நாற்பத்து முக்கோண நாயகி தேவி திரிபுரசுந்தரி வடிவென்று சாக்தரும், காணபத கௌமார ஸௌர மதஸ்தர்களும், அக்னியே தெய்வம் ஜோதியே தெய்வம் என்னும் பற்பல சமயத்தினரும் என் தெய்வம் என் தெய்வமென்று வழிபடுகின்றனர். ஆயினும் இத்தலத்திற்கு சிவப்ரதானமான இதிகாசங்களே ஆதாரத்துடன் நிரம்பிக்கிடக்கின்றன. இந்நூல்களின் மெய்ப்பொருள் முழுவதும் திரண்டுருண்டு கற்றவரேயன்றி மற்றவரும் பயன்பெற நந்திமார்க்கண்டேய சம்வாதமாக **அருணசல மாகாத்மிய வசனம்** என்னும் பெயருருக்கொண் டெழுந்தது. "வாவிக் கமலத் திடைவைகும் மகரந்தத்தை உண்டுகளிக்கும் வண்டினம்" போல அன்பர் இந்நூலிடைவைகும் அருணசலம் என்னும் அருளமுதைப் பருகி நித்யானந்த போதமடைந்து நீடூழி வாழக்கடவர்.

திருவண்ணாமலை க்ஷேத்திர படம்







அருணசல ஸஹாயம்.

அருணசல மாகாத்மியம்.

அருணகிரியோகி ஸ்தோத்ரம்.

லலாடே த்ரைபுண்ட்ரீ நிடிலக்ருத கஸ்தூரிதிலக:
ஸ்புரந்மாலாதார: ஸ்புரிதகடி கௌபீன வஸந:||
ததாகோதுஸ்தாரம் சிரஸி பணிராஜம் சசிகலாம்
ப்ரதிப: ஸர்வேஷா மருணகிரியோகீவிஜயதே||

(இதன் பொருள்) நெற்றியில் மூன்று (விபூதி) ரேகைகளுடன் கஸ்தூரிப் பொட்டிட்டவனும், (மார்பில்) ப்ரகாசிக்கின்ற மாலைதரித்தவனும், இடையிலொளிர்கின்ற கோவணவுடை யுடையவனும், தரித்தற்கரிய சர்ப்பராஜனையும் சந்திரகலையையும் முடியிலணிந்தவனும், யாவர்க்கும் பெருஞ்சுடர் (ஞான) விளக்குமான அருணகிரியோகி எல்லார்க்குமேல் விளங்குகிருன்.

(இவர் எக்காலத்திலும் அண்ணுமலை வடமுடியில் வசிக்கின்ருர் என்பது.)

அஸ்யோத்தாஸ்மிந் சிகரே த்ருச்யதே வடபூருஹ:
ஸித்தவேஷ: ஸதைவாஸ்தே யஸ்யமூலே மகேச்வர:||
யஸ்யச்சாயா ஙிமஹதீ ஸர்வதா மண்டலாக்ருதி:
லக்ஷ்யதே விஸ்மயோபேதை: ஸர்வதா தேவமாநவை:||

[இதன் பொருள்] எதனுடைய நிழல் மிகவிரிந்து எப்பொழுதும் (சூரியகதியால் மாறாமல்) மண்டலாகாரமாய் (நிற்பதுகொண்டு) தேவராலும் மனிதராலும் எக்காலத்திலும் ஆச்சரியத்துடன் பார்க்கப்படுகின்றதோ, அத்தகைய ஆலமரம் இந்த (அண்ணாமலையின்) வடமுடியில் காணப்படுகிறது. அதனடியில் ஸித்த வேடம்பூண்ட பரமேசுவரன் (அருணகிரியோகி) எக்காலத்திலும் வசிக்கிறான். (ஸ்கா-அரு-மாகா-கௌதமமுனிவாக்கியம்.)

விபூதிருத்ராக்ஷ மகிமை.

"விபூதிர் பூதிரைச்வர்ய மணிமாதிக மஷ்டதா" என்பது வடமொழி நிகண்டு. "விபூதி, பூதி என்கிற ஐசுவரியம், அணிமா முதலிய எட்டு சித்தி வடிவங்களாக விருக்கும்"; என்பதிதன் பொருள். இத்தகைய அணிமா, மகிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என்கிற அஷ்டசித்தி மங்களவடிவ ஈசுவரஸம்பத்தான விபூதியை நித்தியம் பத்தியோடு அணிபவர் இகத்தில் இஷ்டசித்திகளைப் பெற்று சிவஸாரூப்ய மடைவர்.

ஈசுவரன் தன்னைத் தியானித் தடைந்தவர்க்குத் தன்னுருவான ஸாரூப்யந்தந்து, தியானிப்பவனுந்தானுமற்ற ஞானகாசவடிவாய் மிஞ்சுதல்போல, அக்கினியானது தன்னை யடைந்த கோமயத்தை (பசுவின் சாணத்தாலாகிய எருமுட்டையை) தன்னுருவான தணலாக்கிக்கொண்டு பிறகு இரண்டுமற்ற திருநீறாக மிஞ்சுகிறது. இக்காரணங் கொண்டே நமது திருஞான சம்பந்த சுவாமிகள் தமது திருநீற்றுப் பதிகத்தில் "உண்மையிலுள்ளது நீறு" என்று சிவத்தின் உண்மை ஸ்வரூபத்தையே திருநீறாக வைத்துக் கூறியுள்ளார்கள். இவ்வுண்மையையே நமது தாயுமானவப்

பெருந்தகையார் வைதிகசைவசமயத்தைப் பற்றிச் சொல்லுங்கால் "சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு சமயசங்கே தப்பொருளுந் தானொன் ருகப், பன்மார்க்க நெறிகளிலுங் கண்ட தில்லை" என்கின்றார்கள். நன்மார்க்க ஞானத்தின் பொருளும், பெருமைபெற்ற சைவசமய சங்கேதப்பொருள்களான விபூதி, ருத்திராக்ஷ முதலியவைகளின் தத்துவப் பொருளும் இச்சமயத்தில் ஒன்றுபட்டுக் காண்பது போல, மற்றெந்த சமயமார்க்கங்களிலும் [நான்] பார்த்ததில்லை என்பதிதன்பொருள். இத்தன்மை சிவஸ்வரூபமான "விபூதி, ருத்திராக்ஷ"ங்களை அன்புடன் அணிபவர் சிவஸ்வரூபமேயாவர் என்பதில் ஐயமில்லை.

ஒரு சீடன் ஞானசாரியரை யடைந்து, முக்தி அடைய உபாயமெது? என வினவ, ப்ரதி க்ஷணமும் மாணத்தை நினைத்திருப்பாயாகில் அதுவே முக்திக்குபாயம் என்றருளிச் செய்தனர். அரசனால் மாணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் மாணசிந்தையால் ஊணுறக்கமற்று உலகவின்பங்கள் எதிர்மறையாய்த் தோற்ற தண்டனையினின்று விடுபட அரசனருளை வேண்டிநிற்பதுபோலச் சீடன், கடவுளை நாடி முக்திபெறுவனென்பது ஆசாரியர் கருத்து. "பஸ்மாந்தம் ஶரீரம்" இந்தச்சரீரம் சாம்பலை முடிவாக வுடையது என்னும் உபநிஷத் வாக்கியப்படி, திருநீறணிதல் சரீரத்தின் முடிவையும், முன் ஆசாரியர் உபதேசித்தபடி சதா மரணத்தையும் நினைப்பூட்டி நித்தியமான முக்தியை அடைவிக்கும்.

சிவபெருமான் மகாப்ரளயத்தில் எல்லாவுலகுயிர்களையும் தன்னிலொடுக்கி, மறுபடி சிருஷ்டிக்காக பிராணிகளின் கன்மவாசனையாகிற விபூதியை அணிந்து தானொருவனே

சிதாகாச ஸ்வரூபனாகி நடிக்கின்றானாகையால் வினைவிநாசனாம் அப்பரமன் அணியும் விபூதியை நாம் அணிதல் வேண்டும்.

வெளியுடம்பாகிய சரீரம், உள்ளுடம்பாகிய பிராணன், மனது, இந்திரியங்கள் இவைகளில் சுத்தாசுத்தங்கள் ஒன்றையடைந்தால் மற்றொன்றையுமடையும். உடல் பிணியடைந்தால் மனது வேதனையடையும். மனதில் வேதனை மிஞ்சினால் உடல் பிணியடையும். இவ்விரண்டில் ஒன்றிருந்தாலும் ஈசனை தியானிக்க வியலாது. நமது சைவமதச் சின்னங்கள் வெளியுடம்பிற்குற்ற பற்பல பிணிகளையும் போக்கி, உள்ளுடம்பைத் தூய்தாக்கிச் சுகந்தரும் சக்தி வாய்ந்தன. பொன், வெள்ளி, இரும்பு, காந்தம் முதலிய தாதுப்பொருள்களை நெருப்பிலிட்டு பஸ்மமாக்கிய பிறகே பிணியாளர் கொள்ளுதல் வைத்திய நூன்முறை. எனவே, பரிசுத்தம் வாய்ந்த கோமயத்தை பஸ்மமாக்கி அணிவதில் வெளியுடம்பிற் குற்ற பற்பல நோய்கள் நீங்கப் பெறுவதால் மனது சுத்தமடையச் சுகமுண்டாகும் என்னும் ஆரோக்ய நூலின் அடிப்படையான தத்துவமும் அடங்கியிருக்கிறது. எம்மதத்தினராயினும் பயத்தினாலும் மனக்கலக்கத்தாலும் உண்டாகும் பல அரிஷ்டங்களுக்கு மந்திரித்து ரக்ஷையாக அணிவதும் திருநீறேயன்றி ஏனைய மதச் சின்னங்களன்று. இத்தகைய உடற்பிணியேயன்றி பவப் பிணியையும் போக்கவல்லதான விபூதியை நித்யம் பக்தியுடன் சிரத்திலும் நெற்றியிலும் உரத்திலும் கரத்திலும் நாம் தரித்தல்வேண்டும்,

மாசி மாசம் சிவராத்திரிக்கு முந்தி கோமய (பசுவின்சாண)த்தை பூமியில் விழாமல் சுத்தமான பாத்திரத்தில் ஏந்திப்

பிடித்துப் பிசைந்துருட்டி மத்தியில் துளையிட்டு கற்பாறை அல்லது மணைமீது நன்றாய் உலர்த்திய எருமுட்டைகளைக் கல் மண்ணில்லாத சுத்தமான நெற்பதராயினும் நெல்லுமி யாயினும் கீழ் பரப்பி, அதின்மேல் ஒன்றிலொன்று தட்டாமல் வரிசையுறவைத்து, மேன்மேலும் நாலுவிரல் கனம் உமிகொட்டி, எழெட்டுவரி அடுக்கி, அடுக்கிய எரு முட்டைகள் மறையப் பதர்கொட்டி, சிவராத்திரி சதுர்த்தசி யன்று சுத்தமான தர்ப்பைப்புல்லால் அக்கி மூட்டி எழு அல்லது ஐந்து தினங்கள் நெருப்பவியாமல் மேலுக்குமேல் உமி அல்லது பதர் கொட்டிவரவேண்டும். பிறகு சுமார் பதி னைந்து நாட்கள் கழித்து மூட்டத்தைக் கலைத்து, கருத் ததும் சிவந்ததுமான முட்டைகளை நீக்கி சுத்தமான வெண்மைநிறமுள்ள விபூதிமுட்டைகளைச் சேகரித்து வைத் துக்கொண்டு முறைப்படி பக்தியோடு நித்தியம் அணிந்துவர வேண்டும்.

ருத்ராக்ஷம்.

ருத்ர-அக்ஷம்= ருத்ராக்ஷ மாயிற்று. ஈசுவரனுடைய கண் என்பது பொருள். சிவ பெருமான் ஞான நேத்திரத்திலிருந் துண்டானமையால் இதற்கு இப்பெயர் வந்தது. உலகிற் சிறந்தவன் ஈசன். உறுப்பிற் சிறந்தது கண். அத்தகைய உலகிற்சிறந்த அகணிதகுணகணனும் ஒருவனுடைய உறுப் பிற்சிறந்த கண்ணாகிய ருத்திராக்ஷத்தை ஒருவன் ஆபரணங்க ளாக அணியும் பாக்கியம் பெற்றனேயாகில் காமாதிகள் நசிக்க உள்ளம் பரிசுத்தமாகி சிவனடியிற்சேர்வன். மேலும் நாம் ஸ்நாகம்செய்யும் நீர் ருத்திராக்ஷத்தின்மீது வழிந்து உட லிற் பாய்வதால் பல பிணிகள் நீங்கும் என்று ஆயுள்வேதி யர் கூறுவர். ஆகையால் மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் ருத்திராக்ஷ மணிதல் வேண்டும்.

விபூதி ருத்ராக்ஷ மகிமை முற்றிற்று.

சிவ ஞான போதம்.

அவதாரிகை:—இந்நூலில் விஷயம், அதிகாரி, சம்பந்தம், பிரயோஜனம் என்னும் அனுபந்த சதுஷ்டயத்தை முமுக்ஷுக்களின் பொருட்டு பன்னிரண்டு ஸூத்ரங்களால் விளக்குகின்றார்.

பதி நிச்சயம்.

சுலோகம்.

ஸ்த்ரீபுந்நபும்ஸகாதித்வாத் ஜகத: கார்யதர்சநாத்
அஸ்திகர்த்தா ஸஹ்ருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மாத் ப்ரபுர்ஹர:||

(கருத்துரை) பெண் ஆண் அலித்தன்மை முதலான (பேதங்களோடு கூடிய) உலகங்கள் காரியமாய் அதாவது கர்த்தா ஒருவனால் ஆக்கப்பட்டனவாய்க் காணப்படுவதால் இவைகளை ஒடுக்கி தன்னிடத்தினின்று மீண்டும் சிருஷ்டிக்கின்ற கர்த்தாவான ப்ரபு ஹரன் ஒருவன் உண்டு.

(விரிவுரை) ஆண்பெண்ணலிகளான தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலியவையும், மரம், கொடி, கல், மண் பேதங்களோடு கூடியவையுமான உலகங்கள் காரியரூபமாய் காணப்படுதலினாலே "மட்குடத்தைக் கண்டவிடத்து அதை வனைந்த குயவனொருவன் உண்டென்பது நிச்சயமேபோல" காரியரூபமான பிண்டாண்ட ப்ரபஞ்சத்திற்குக் காரணனானகர்த்தா என்னொன்றும் ஒருவன் உளனென்பது நிச்சயம். "சிலந்திப்பூச்சியானது தன்னிடத்திலிருந்து நூலை உண்டாக்கி தானுமதனுட்டங்கி தன்னிடத்திலேயே சுருக்கிக்கொள்ளுதல் போல" கர்த்தா கருவி கர்மம் மூன்றுந் தானேயாகி எவன் தன்னிடத்தே அகிலமுந் தோற்றுவித்துத் தானதனுள் நின்று நிலைபெறச்செய்து மீண்டும் தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளுகிறானோ அவனே எப்பொருட்கு மிறைவனும் கர்த்தாவான ப்ரபு ஹரன்.

ஜீவஸ்ருஷ்டி.

சுலோகம்.

அந்யஸ்ஸந் வ்யாப்யதோ நந்ய: கர்த்தா கர்மாநுஸாரத:
கரோதி ஸம்ஸ்ருதிம் பும்ஸாம் ஆஜ்ஞயா ஸமவேதயா||

(கருத்துரை) கர்த்தா (ஹரன்) அந்நியனாக நின்றும் வியாபகத்தால் அநந்நியனாகி ஆஜ்ஞையோடு கூடி வினை வழியே ஜீவர்களுக்கு (ஜனன மரண ப்ரவாக ரூபமான) சம்சாரத்தைச் செய்கிறான்.

(விரிவுரை) சூரியன் தனித்து நின்றும் ஒளியினால் வியாபகனாகி கண்ணொளியோடு அநந்யமாய்க் கலந்து சன்னிதி மாத்திரத்தில் தாமரையை மலர்த்தி ஆம்பலைக்கூப்பி பிராணிகளை விழிப்பித்து எல்லாத் தொழில்களையும் நடப்பித்து ரஸங்களை கிரகித்து மேகமாய்ப் பொழிவித்து ப்ரவகிப்பித்தல்போல ஹரன் செய்கிறானென்பது பொருள்.

ஜீவஸ்திதி.

சுலோகம்.

நேதிதோர் மமேதோத்ரேகா தக்ஷோபரதி போதத:
ஸ்வாபே நிர்போகதோ போதே போத்ருத்வா தஸ்ய்யணுஸ்தநௌ||

[கருத்துரை] இல்லையென்றுணர்தலாலும், எனதென்றெழுதலாலும், இந்திரியங்கள் உள்ளடங்கி ஓய்ந்து வெளிக்கிளம்பி அறிதலினாலும், தூக்கத்தில் வெளிவிஷய போகானுபவமின்மையாலும், விழித்தவுடன் அறிதலாலும் உடம்பில் அணுரூபனான ஜீவன் இருக்கிறான்.

ஜீவனின் அவஸ்தைகள்.

சுலோகம்.

ஆத்மாந்த: காணு தஸ்யோப யக்விதோ மந்த்ரி பூ'வத்
அவஸ்தா பஞ்சகஸ்தஸ்யாந் மலருத்த: ஸ்வத்ருக் க்ரிய:||

(கருத்துரை) ஜீவன் அந்தக்கரணத்தைக் காட்டிலும் அன்னியனாயினும் அரசனும் அமைச்சனும்போலச் சேர்ந்தவனாகி ஆணவ மலத்தால் தகையப்பட்டு தானே பார்க்கிறவனும் செய்கிறவனுமாகி ஐந்தவஸ்தைகளை அடைவன். (ஜீவனை அணுத்தன்மைப் படுத்தலால் ஆணவமல மெனப்படும். அது தண்டுலத்தில் முளை போலவும் செம்பிற் களிம்பு போலவும் அநாதியா யுடன்கலந்து ஜீவனைப்பற்றி நிற்கும்.)

ஜீவ சேஷ்டை.

சுலோகம்.

விதந்த்யக்ஷாணி பும்ஸார்த்தாந் நஸ்வயம் ஸோபிசம்புநா
தத்விகாரி சிவச்சேந்ந காந்தோ யவத் ஸதந்நயேத்||

(கருத்துரை) ஜீவனால், இந்திரியங்கள் விஷயங்களை அறிகின்றனவாயினும் தாமே அறிவதில்லை. அவனும் சம்புவால் அறிவிக்கப்பட அறிகின்றான். அதனால் சிவன் விகாரியாய் விடுவானோ வென்றால் ஆகமாட்டான். காந்தம் சன்னிதி மாத்திரத்தில் இரும்பை நடத்துவதுபோல அவனை நடத்துவான்.

சம்புவின் ஸ்வரூபஞானம்.

சுலோகம்.

அத்ருச்யஞ்சே தஸத்பாவோ த்ருச்யஞ்சேத் ஜடிமாபவேத்
சம்போஸ்தத் வ்யதிரேகேண ஜ்ஞேயம் ரூபம் விதுர்புதா:||

(கருத்துரை) காணப்படாமற் போமேயாகில் இல்லாத பொருளாய்விடும். காணப்படுமேயாகில் ஜடப்பொருளாக ஆய்விடும். ஆனதால், காண்பதற்கும் காணப்படாததற்கும் வேறாக சம்புவின்ரூபத்தை ஞானிகள் அறிகின்றார்கள். (அவ்வடிவம் தானுந் தனக்குள்ளேயே அகண்டதகராகாசமாய் இதயகமலத்தில் இலங்குகின்றது.)

தத்துவத்ரய நிர்ணயம்.

சுலோகம்.

காசித் சித்ஸந்நிதௌ வேத்தி நவித்கஸ்தே உபேமித:
ப்ரபஞ்ச சிவயோர் வேத்தா யஸ்ஸ ஆத்மா தயோ: ப்ருதக்||

(கருத்துரை) ஞானஸ்வரூபத்தின் முன்னிலையில் அஞ்ஞானம் அறியப்படுகிறதில்லை. அப்படியே ஒன்றின் முன்னிலையில் மற்றொன்று ஞானஞ்ஞானங்கள் அறியப்படுகின்றனவல்ல "காரிருளும் கதிரொளியும்போல". எவன் ப்ரபஞ்ச சிவங்களிரண்டையும் அறிகின்றானோ அந்தஜீவன் இருள் ஒளி ஸ்வரூபங்களான ப்ரபஞ்சசிவங்களைக் காட்டினும் வேறானவன்.

ஆசார்ய உபதேசம்.

சுலோகம்.

ஸ்தித்வா ஸஹேந்த்ரிய வ்யாதை: த்வாம் நவேத்ஸீதி போதித:
முக்த்வைதாந் குருணா நந்யோ தந்ய: ப்ராப்னோதி தத்பதம்||

(கருத்துரை) இந்திரிய வேடர்களுடன் கூடி உன்னை நீ அறிகின்றாயில்லை. என்றாசாரியனால் அறிவிக்கப்பட்டவனாய் (காணப்பட்ட) இவைகளைவிட்டு (சிவத்துடன்) அநந்நியமாகிற அந்தநிலையை தன்யன் அடைகிறான்.

ஞானானுபவம்; பஞ்சாக்ஷரத்யானம்.

சுலோகம்.

சித்த்ருசாத்மநி த்ருஷ்ட்வேசம் த்யக்த்வா வ்ருத்திம் மரீசிகாம்
லப்த்வா சிவபதச்சாயாம் த்யாயேத் பஞ்சாக்ஷரீம் ஸுதீ:||

(கருத்துரை) ஞானப் பார்வையால் தன்னிடத்தில் ஈசனைக் கண்டு, கானல் நீருக்குச்சமான விருத்தியை விட்டு

சிவபக்தசாயையை அடைந்து மிக்க அறிவுள்ளவன் பஞ்சாக்ஷரத்தை தியானிக்கக்கடவன்.

ஜீவன்முக்த லக்ஷணம்.

சுலோகம்.

சிவேனைக்யங் கதஸ்ஸித்த ஸ்தததீநஸ்வ வ்ருத்திக:
மலமாயாத்யஸம்ஸ்ப்ருஷ்டோ பவதிஸ்வாநுபூதிமாந்||

(கருத்துரை) சிவத்தோடு ஒன்றுபட்ட ஞானஸித்தன் அச்சிவத்தினுடைய அதீனப்பட்ட விருத்தியுடையவனாகி (அருள்வழிநின்று) மலமாயாதிகளால் தீண்டப்பெறாதவனாய் ஸ்வானுபூதிமானாகிறான்.

ஜீவன் அசுவதந்திரன், கர்த்தாசிவன்.

சுலோகம்.

த்ருசோர் தர்சயிதாசாத்மா தஸ்ய தர்சயிதாசிவ:
தஸ்மாத்தஸ்மிந் பராம் பக்திம் குர்யா தாத்மோபகாரகே||

(கருத்துரை) கண்ணுக்குக் காட்டுவிப்பவன் ஜீவன். ஜீவனுக்குக் காட்டுவிப்பவன் சிவன். ஆகையினால் தன்னுடைய உபகாரத்திற்காகவே அந்த (அந்தர்யாமியாம்) சிவனிடத்தில் பக்தி செய்யக்கடவன்.

முக்தி ஸாதனம்.

சுலோகம்.

முக்த்யை ப்ராப்ய ஸதஸ்தேஷாம் பஜேத் வேஷம் சிவாலயம்
ஏவம் வித்யாத் சிவஜ்ஞாந போதே சைவார்த்த நிர்ணயம்||

(கருத்துரை) இவ்வாறு ஜகஜீவ பரங்களின் நிச்சயமுணர்ந்தவன் முத்தியடையும் பொருட்டு சிவவேடம்பூண்ட சாதுக்களையும் சிவாலயத்தையும் அடைந்து பஜிக்கக்கடவன். இந்தவிதமாக "சிவஞானபோத"த்தில் சைவார்த்த நிர்ணயத்தை அறியக்கடவன்.

அத்தகைய சீரிய சிவாலயம் சிவனடியார்களால் சிறந்து விளங்குவதான அருட்சோதி சுயம்பு லிங்கம் திருக்கோயில்கொண் டமர்ந்தருளிய அருணாசல க்ஷேத்ரமே மூர்த்தி தலம் தீர்த்தங்களில் முற்பட்டு விளங்குவதால், நினைக்க முத்தி அளிக்கும் இந்த மெய்ஞ்ஞான க்ஷேத்ர மகிமையை மரணம்பிறப் பென்னும் மயக்கத்தை அகற்ற முயற்சிக்கும் முமுக்ஷுக்களின் முத்தி ஸாதனத்தின் பொருட்டு சொல்லப்படுகின்றது.



சிவஞானபோதம் முற்றிற்று.



உ

ஸ்ரீ அருணாசல மாகாத்மியம்.

காப்பு.

திருவருணை விநாயகர் துதி.

சந்த விருத்தம்.

முத்நிள நகையுமை பச்சுரு மடமயில்
முச்சக மருள்சிவை கலியாணி-
முக்கண னமதுயிர் வைப்பரு ணகிரியு
முற்பட வருளிய முதல்வோனே;
நித்தமு முனையித யத்திடை யுணர்வுற
நெக்கிட வுருகுத லபிடேகம்-
நிற்நில நிகர்துதி சித்திர மதுரதொ
னிக்கவி மலர்பணி மணியாரம்;
புத்தமு தடிசில்நெ யிக்குபர் கனிவகை
பொற்பென துயிர்மகிழ் மதிதீபம்-
பொய்த்துதி யிலைநின திட்டமொ டிவைகொடு
பொற்பத மிடர்கெட வருள்வாயே;
சித்திபு ணர்வுதரு புத்தியி ருபசிய
செப்புகி ளிமொழிக ளுடனுக-
சிட்டர்ப ரவருணை நித்தம னதுவிக
சிக்கந டனமொடு வருவாயே.



உ

குருஸ்துதி.

வெண்பா.

வானைத் திதய மலரு டருணேசன்
ஞானத் தவநிலையை நாட்டினன் — மோனத்
தரும்புண்ட ரீகத் தடிக்கென் னுலைநெஞ்
சிரும்புண்ட நீரா யிசைத்து.

தல மகிமை.

விருத்தம்.

கமலமி ருந்தெழு கடவுளர் தந்திடு கடலுவ கம்புடைசூ
ழிமகிரி தென்றிசை யிணையில ருந்தமி ழிதயமெ னுந்தனியூ
ருமையொரு பங்கின னுமவர் தம்பவ மொழியவொ டுங்கிரியர்
யமர்வத ருந்தவ ரனவர தம்பர வருணைவ ளம்பதியே.

(இதன்பொருள்) கமலோத்பவனான பிரமன் தந்தருளிய சமுத்திரத்தாலும் பூமியாலும் நாற்புறமும் சூழப்பட்ட இமயமலைக்குத் தென்றிசையில் ஒப்பற்ற தமிழுலகில் (மகேசன்) இதயத்தலம் என்று பெயர் பெற்றதும் உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்த சிவபெருமானே தன்னை நினைத்தவர்களுடைய பிறவிப்பிணியை வேரறக்களைய வேண்டி உயர்ந்த மலையுருவாய் அமர்ந்தருள்வதுமான தன்னிகரற்ற நகரமானது, அரிய தவத்தினையுடையவர் (ஞானயோகிகள்) இடைவிடாது இதயத்தில் வழிபடுகின்ற "அருணாசலம்" என்கின்ற வளம் பொருந்திய க்ஷேத்திரமேயாகும்.

நந்தி மார்க்கண்டேய சம்வாதம்.

அவதாரிகை:—திருமகள் பங்கன் பள்ளிகொள்ளும் பாற்கடலையும், கலைமகள் நாயகன் வீற்றிருக்கும் வெண்டாமரை மலரையும் சீறி வெளுத்துப் பரந்துயர்ந்து எழில் கொண்டு மலைமகள் பங்கனை முடிமேல் தாங்கி நிற்பதும், ஈரடியால் மண்ணையும் விண்ணையுமளந்த நெடுமாலையுமிஞ்சி ஓரடியாய் விண்ணையு மண்ணையு மளந்ததுமான கைலையங்கிரி சிகரத்தில் சந்திரகாந்தமணி மண்டபத்தில் விஷ்ணுப்ரம்மேந்திராதி தேவர் சபை நடுவில் நவமணி பீடத்தில் மரகதப் பசுங்கொடி படர்ந்த மாணிக்கமலையென பார்வதியுடன் கூடி நால்வர்க்கு மறைமுடி வுணர்த்திய பரமன் அமர்ந்தருள, ஆசார வாசலில் சுவர்ணபீடத்தில் இடையில் உடைவாள் பூண்டு கரத்தில் வேத்திரந்தாங்கி உடம்பெங்கும் விபூதி ஒளிர பரமன் ஆஞ்ஞையால் கைலையைக் காக்கும் சிலாதன் மைந்தனாகிய நந்தியெம்பெருமான் இரண்டாவது சம்புவென வீற்றிருந்தனன்.

ஸநகாதி நால்வர், நரநாராயணர், வசிஷ்டர், அகஸ்த்யர், ததீசி, பிருகு, ஜாபாலி, ஜமதக்நி, பரத்வாஜர், வியாசர், நார

தர், முதலிய தேவரிஷிகள் கூடிய சபைமத்தியில் மார்க்கண்டேய முனிவர் எழுந்து நந்தீசனை வணங்கி நின்று சுவாமி! பரமகுருவே! உம்முடைய கடாக்ஷத்தை அடைந்த என் அந்தக்கரணக்கண்ணாடியானது சிவபக்தி விபூதியால் துலக்கப்பெற்று மலினம் நீங்கியதால் எல்லா ஞானங்களும் அதில் நன்றாய் பிரதிபிம்பிக்கின்றன. மிசிரகருமத்தால்பூவுலகையும் புண்ணிய கருமத்தால் சுவர்க்கத்தையும் ஞானத்தால் முத்தியையும் அடைவர் என்று முந்தி உபதேசித்தீர். இவைகளில் முந்திய இரண்டுகதிகளும் நிலையற்று நசிப்பனவாகும். எனவே, ராட்டின உருளைபோற் சுற்றுகின்ற இம்முடியாப் பிறவியலைமோதும் ஆழ்பவக்கடல் கடந்து முக்தியங்கரையை யடைவதற்குரிய மார்க்கத்தை எல்லா அருந்தவ முனிவர்களும் கேட்க உபதேசித்தருளல் வேண்டும் சைவசமயப் பயிர்தழைத்தோங்கக் கருணைமழை பொழிமேகமே! என்று வேண்டி வினவினர்.

நந்தீசர் வாக்கியம்.

புண்ணிய தீர்த்தங்கள்:-மானச சரஸ்,கங்கை, யமுனை, ஸரஸ்வதி, சரயு, மணிகர்ணிகை, நர்மதை, சிப்ராநதி, கோதாவரி, கோமதி, சந்திரபாகா, சிந்து, பீமநதி, மதுமதி, கௌசிகை, கிருஷ்ணவேணி, பம்பை, துங்கபத்ரை, சுவர்ணமுகரி, மணிமுக்தாநதி, காவேரி, வேகவதி, பைரவி, தாமிரபர்ணி, ஐராவதி, கன்னிநதி, குமாரி, சராவதி முதலிய நதி தீர்த்தங்களில் பக்தியுடன் ஸ்நானம் செய்வதால் பாபம் நசிக்க உள்ளம் பரிசுத்தமடையும்; முக்தி சாதகமாம்.

சிவக்ஷேத்ரங்கள்:—கேதாரம், நரநாராயணர் பூஜித்த பதரி, ப்ரயாகை, கயை, நைமிசம், அமரேசம், ஓங்காரம், புஷ்கரம், ஆஷாடேசம், த்ரயம்பகம், குருக்ஷேத்ரம், ஜ்வாலா

முகி, கநகலம், ஜாலந்தரம், அட்டஹாஸம், மல்லிகார்ஜுநம், ஸ்ரீசைலம், கோகர்ணம், த்ரிபுராந்தகம், திருக்காளத்தி, திருச்செங்காடு, காஞ்சி, திருக்கழுக்குன்றம், அவிநாசி, விருத்தாசலம், திருக்கோவலூர், திருப்பாதிரிப்புலியூர், திருவதிகை, வேளூர், சீகாழி, சுவேதாரண்யம், திருமறைக்காடு, மாயூரம், திருவிடைமருதூர், கும்பகோணம், திருவாரூர்க்கா, திரிசிரபுரம், மதுரை, ராமேச்வரம், கந்தமாதனம் முதலிய முன் சொன்ன நதிக்கரைகளிலுள்ள சிவக்ஷேத்ரங்களுக்குச் சென்று ஸ்நானம் செய்து முறைப்படி திருத்தொண்டுகள் செய்வதாலும், பூஜித்து வணங்குவதாலும், விராட்புருஷன் மூலாதாரத் தலமாம் கமலாலயத்திற் பிறத்தலாலும், ஆஞ்ஞாஸ்தானத்தில் ப்ரகாசிக்கும் காசியில்இறத்தலாலும், அநாகதத்தலமாம் சிதம்பரத்தை தரிசித்தலாலும் சிவஞான மடைந்து முக்தி பெறலாம்.

மார்க்கண்டேயர்:— நல்லற மூர்த்தியாம் நந்திதேவனே! இப்பொழுது சொல்லிவந்த தீர்த்தங்க ளனைத்திலும் ஆடுவதும், தலங்களிற் சென்று பூஜித்தலும், பிறத்தலும், இறத்தலும், தரிசித்தலும், திருத்தொண்டுகள் அனைத்தையும் செய்து முடித்தலும் தேவர்சித்தர்முனிவர்களுக்கும் அரிதாயிருக்க நீர்க்குமிழிபோலவும் மேகத்திடை தோன்றி மறையும் மின்னல் போலவும் அற்ப வாழ்வினையுடைய மனிதர்க்கு எப்படி எளிதாகும்? ஆதலால் எல்லா தீர்த்தாடனங்களாலும் க்ஷேத்ர பூஜைகளாலும் அடையும் பலன்களனைத்தையும் சேதனுசேதனர்களான நெடுந்தூரத்தில் வசிப்பவர் பாமரர் அங்கவீனர் குருடர் செவிடர் விலங்கு பறவைகளும்கூட ஞானதிருஷ்டியால் ஈசனை தரிசித்தடைகிற முக்தியை அறிந்தோ அறியாமலோ எந்தத் தலத்தின் பெயரை நினைத்தமாத்திரத்தில் அடைவார்களோ அந்த

மகாதேவனமர்ந்தருளும் மகாஸ்தலமொன்றை அருளிச் செய்யும்படி வேண்டினர்.

அருணாசல க்ஷேத்ர ரஹஸ்யோபதேசம்.

நந்தி:—முனிகுமார! அற்பாயுளைப் பெற்றும் தவத்தால் சிவத்தைக்கண்டு யமனைஜயித்தநீயே இந்த ரகசியத்தை அறியத்தக்கவன்; சொல்லுகிறேன் கேள் என்று சொல்லத் தொடங்கி, புளகாங்கித மடைந்து கம்பனையுடன் சிரசின்மேல் கூப்பியகையராய், தியானத்தால் நிலைத்த விழிகளினின்றும் கண்ணீர் அருவியாய்ப் பெருக நெடுநேரம் மெய்மறந்து பரவசராகி ஒழிவற உள்ளத்துள்ளேஉறைபரஞ்சுடராம் அருணாசலத்தை அகத்தில் தரிசித்து அந்தரங்க சுகக்கடலுள் மூழ்கி ஒன்றையும் அறியாதவரானார். நீண்டகாலம் கடந்து முன்னிலையில் மார்க்கண்டேயரைக் கண்டு உரைதடுமாறி நாத்தழும்பேற சிவத்தைத் துதித்து அதிசயித்து வரன்முறையாகச் சொல்லுவார்.

தலம்:—ஆதிருமூல கனைத்திலுமுள்ள ஜீவராசிகளெல்லாம் நிலைக்காத பவக்கடலைக் கடந்து நினைத்தமாத்திரத்தில் முக்தி யடையத்தக்க அரியுமயனும் அறியாத அமலன் அமர்ந்தருளும் அதிசயத்தலம் ஒன்றுண்டு. அது இமயமலைக்குத் தெற்கில் வடவேங்கட மலைக்கும் தென்குமரிக்கும் இடையில் புகழ்மலிந்த தமிழ்நாட்டிலுள்ளது. † அருணா

---

† இத்தலம் வட ஆர்க்காடு ஜில்லாவில் தென்னிந்திய இருப்புப் பாதை விழுப்புரம் காட்டுப்பாடி மார்க்கமத்தியில் நீராவியந்திரவண்டித்தொடர் நிற்கப்பெற்ற திருவண்ணாமலை ஸ்டேஷனுக்கும்

சலமென்னும் திருப்பெயருடையது. மூன்றுயோசனை விஸ்தீர்ணமுள்ளது.

இத்தலத்திற்குரிய திருநாமங்கள்:— §அருணாசலம், அருணகிரி, அருணாத்ரி, சோணாசலம், சோணகிரி, சோணாத்ரி, சிவலோகம், சுத்தநகரம், கௌரிநகரம், ஞானநகரம், தக்ஷிணகைலாசம், தேசுநகரம், முத்திநகரம், வாயுநகரம், ஸ்தலேச்வரம், (அருணாபுரி, திருவருணை, * திருவண்ணாமலை) என்னும் இத்திருநாமங்கள் முத்தியடைய இச்சிப்பவர்கள் எக்காலத்திலும் இடைவிடாது சிந்திப்பதற்குரிய இனிய நாமங்களாம்.

மூர்த்திக்குரிய திருநாமங்கள்:— அருணாசலேசன், சோணாசலேசன், அருணகிரீசன், சோணாத்ரீசன், அம்ருதேசானன், பந்தபாச விமோசகன், முகாங்க்ரிபதி, ம்ருகமதேசுவரன், கௌரீசன், ஸ்படிகாசலன், ஞானசம்பந்தநாதன், வேதமூர்த்தி, ஸித்தராஜன், க்ஷமாரூபி, பாலமூர்த்தி, நிகம்பான், சர்வவித்யேச்வரன், அருணன், ப்ரதக்ஷிணப்ரியன், அக்ஷராக்ருதி, அநாதி, அந்தரகிதன், பக்தவாஞ்சிததாயகன், ஞானப்ரதன், ஆச்சர்யவைபவன், முக்திப்ரதன், சுவயம்பு, மரகதாசலன் என்பனவாதி நாமங்கள் ஒருநாமம் ஒருருவ மொன்றுமிலார்க்குரிய எண்ணிறந்த திருநாமங்களில் ஞானமடைய விரும்புமவர் அகத்தில்

§முதல் ஆறும் தலத்திற்கும் கிரிக்கும் பொதுப்பெயர்கள்.

* பண்டைய காலத்திய சாஸனங்களில் இம்மலை நாட்டுக்கு அண்ணாடு என்றும் மலைக்குத் திருவண்ணாமலை என்றும் பிறகு சோணாசலம், சோணாத்ரி என்றும், சாலிவாகனசகம் 1494-ல் அருணகிரி, அருணாசலம் என்றும் பெயர்கள்காணப்படுகின்றன. இப்பொழுது திருவண்ணாமலை என்று வழங்கப்படுகிறது. திருவண்ணாமலை என்றால் அரிஅயர்களுக்கு எட்டாத ஒன்று என்பதுபொருள்.

இடைவிடாது ஜபித்தற்குரிய சிந்தைக்கமுதெனவினிய அருணேசரது புனிதத் திருநாமங்களாம்.

தேவி:-|| அபீதகுசநாயகி (உண்ணாமுலையம்மை.)

ஸ்தல வ்ருக்ஷம்:— * வகுளம் [மகிழமரம்.]

தீர்த்த மகிமை:--தெற்கில் கருவுயிர்த்தசங்குமுத்துக்களைத்தனது நீண்ட திரைக்கைகளால் வீசும்தென்பெண்ணைநதி, வடக்கில் செய்யாறு, இடையில் கமலைநதி, சோணநதி, திருநதி, வேணிநதி, ஆலயத்துள் பிரமதீர்த்தம், சிவகங்கை, சன்னிதிமுன் சக்ரதீர்த்தம், அண்ணாமலையைச்சூழ எட்டுத்திசைகளிலும் இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்கின்ற அட்டதிக்குப் பாலகர் தீர்த்தங்கள், தென்கிழக்கில் பாண்டவ தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், தெற்கில் அகத்தியதீர்த்தம், வடக்கில் வசிஷ்டதீர்த்தமும் இருக்கின்றன. இவைதவிர கட்கதீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உண்டு. கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி முதலியபுண்ணியநதிகள்முன்சொன்ன தீர்த்தங்களின்உருத்தரித்து நின்று அருணாசலத்தை சேவிக்கின்றன; எனவே, இத்தீர்த்தங்கள் தம்முள் முறைப்படி பக்தியுடன் மூழ்குமவர் ஆகத்தைப் பற்றிநிற்கும் ஆணவ அழுக்கைக்கழுவி ஆவியைப் பரிசுத்தமாக்கி அமலவகண்ட சிவஞானனுபூதியை அடையச்செய்வனவாம்.

|| இளங்குமாரனை முருகனுக்குப் பால்கொடாமல் கைலையிலிருந்து இங்குவந்து தவமியற்றி அர்த்தபாகம் பெற்றமையால் இப்பெயர் வந்தது.

* இது அருணாசல மூலஸ்தானேசராலயத்திற்குத் தெற்கில் அடர்ந்துயர்ந்து கற்பக விருக்ஷம்போல் விளங்குகின்றது.

ஜோதிலிங்க மகிமை:—காசி முதலிய மற்றைய சிவத்தலங்கள் ஆரிடம்-இருடிகள் ப்ரதிஷ்டித்தது, தைவதம்-தேவர் ப்ரதிஷ்டித்தது, மானுடம்-மனிதர் ப்ரதிஷ்டித்தது, ஆசுரம்-அசுரர் ப்ரதிஷ்டித்தது, ராக்ஷதம்-அரக்கர் ப்ரதிஷ்டித்தது என்கின்ற லிங்கபேதங்களையுடையன; இத்தலமோ வென்றால், எண்குணத்தண்ணல் எமதாண்டவன் மஹாதேவனே அரியுமயனும் அடிமுடியறியாத வான்குடிபுகுந்த தண்ணளி சுரந்த ஜோதிமலையுருவாம் சுயம்புலிங்கமாகி பவானிக்குப் பாதியுருத்தந்து நினைப்பவர் வினைதீர அமர்ந்தருளும் தலமாகும்.

க்ஷேத்ர மகிமை:—அருணாசலத்தை நினைக்கமுக்தி; ஆதலால் எத்தலங்களினும் இத்தலம் சிறந்தது. இத்தலம் சிவபெருமானுக்கும் பூமண்டலத்திற்கும் இதயத்தானமாகும். அனேக அச்சுதர்களும், தொண்ணூற்றாறு ப்ரம்மர்களும், பற்பல தவசிகள், தேவர்கள், சித்தர்களும் பூஜித்து அணிமாதி அட்டசித்திகளையும் ஞானத்தையும் அடைந்த தெய்விகம் பொருந்தியது. பழையனவனைத்தினும் பழையது. புதியன வனைத்தினும் புதியது. கைலாசத்திலும் பெரியது. தொண்டர்களின் இசைத்தமிழ்க்கீத வேதநாதங்களால் எக்காலத்திலும் ஒப்பற்றது. வருந்திவந்தவர்க்குக் கொடுப்பவரும் நாடோறும் பசித்தவர்க்கு விருந்தளிப்பவருமான இல்வாழ்க்கையுடையவரால் நிறைந்தது. மெய்ஞ்ஞானத்தவத்தினரின் உள்ளத்திற் கிடந்தொளிர்வது. காசி முதலிய எழுமுக்தி நகரங்களும் இத்தலத்தின் முன் சூரியன் எதிரில் மின்மினிகளை ஒக்கும். விபூதியைக்காட்டிலும் ரக்ஷயில்லை. ருத்ராக்ஷத்தைக்காட்டிலும் ஆபரணமில்லை. சிவபக்தியைக்காட்டிலும் ஆசாரமில்லை. சதுருத்ரீயத்திற்கு மிஞ்சிய சுருதி இல்லை. விஷ்ணுவை மிஞ்சிய சிவபக்தரில்லை. தக்ஷிணாமூர்த்

நிலைக்காட்டிலும் குருவில்லை. வில்வத்திற்கு மிஞ்சியபத்ரமும், அன்பிற்குமேலான புஷ்பமும் இல்லை. ஞானத்திற்குமிஞ்சின சுகமும், முக்திக்கு மிஞ்சின பதமும் இல்லை. பஞ்சாக்ஷரத்திற்கு சமமான மந்திரமும், அருணாசலத்திற்குச் சமமான க்ஷேத்ரமும், அருணாசலேசருக்கு வேறான தெய்வமும் இல்லை. இத்தலத்திற்கு கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு திக்குகளிலிருக்கும் அர்க்கமலை, தெய்வமலை, அமரமலை, திரிசூலமலைகளில் முறையே இந்திரன், யமன், வருணன், குபேரன் என்கின்ற திக்குபாலகர்களும் மற்றைய நான்கு திசைகளிலுமுள்ள மலைகளில் அக்கினி, நிருதி, வாயு, ஈசானனென்கின்ற திக்குபாலகர்களும் நின்று காவல் புரிந்து வணங்குகின்றனர். வலப்புறத்தில் மணிகரளங்களை வீசுகின்ற தென்பெண்ணைநதியும் இடப்புறத்தில் செய்யாறும் மத்தியில் கமலை நதியும் ஓடி இத்தலத்தின் இடை பிங்கலை சுழுமுனைநாடிகளாய் விளங்குகின்றன. உலகின் இருளை ஒளியால் ஓட்டும் சூரியனைப்போல, ஜீவர்களின் அஞ்ஞான இருளை அகத்திலிருந்து ஓட்டி உளத்தொளிரும் ஞான சூரியன் அருட்சக்தியுடன் அமர்ந்தருளும் அற்புதத்தலமிதுவாகும். தேவர்களும் மனிதராய் வந்து அருணையை நினைத்துத் தவமியற்றி மும்மயக்கந்தீர்ந்து முக்தி பெறுவார்கள். இங்கு உள்ள சிலையெல்லாம் லிங்கமாகும். இத்தலத்தில் வசிப்பது சிவலோகவாசமாகும். அந்தரவாசிகளும் அருணாசலத்தில் ஒரு புழுவாயாகிலும் பிறக்கத் தவம் செய்வார்கள். அண்ணாமலையிலுள்ள தீர்த்தமெல்லாம் கங்கையாகும். தரித்திரர்க்குச் சேமநிதிபோலத் தவத்தினர்க்கு இத்தலம் அருள் நிதியாகும். மற்றைய தலங்களில் சிவபெருமான் எழுந்தருளி இருப்பது இரும்பில், செம்பில், வெள்ளியில் மாணிக்கமணி பதித்ததுபோலாம். இத்தலத்திலோவென்றால்பொற்றகட்டில் மாணிக்கமணி பதித்ததுபோலாகும். தேவர் முனிவர் யாவ

ரும் அர்த்த ஜாமத்தில் அருணாசலேசரைத் தினம்வந்து தரிசிக்கின்றனர். முகத்தில் கண்ணால் உடம்பெல்லாம் விளங்குதல்போல கண்ணிற் கருமணியாம் அருணாசலத்தால் மற்றையத் தலங்கள் விளங்கும். ஒருகொடியின் வேரில் நீர் வார்த்தால் அது பூ தளிர் இலைகளிலெல்லாம் பரவுவதுபோல சிவத்தலங்களுக்கு மூலமாம் அருணாசலத்தைப் பூசித்தால் எல்லாத்தலங்களையும் பூசித்ததாகும். பாலின்றி நெய்யில்லாததுபோலவும், கட்டையின்றிக் கனலில்லாதது போலவும், இத்தலமின்றி முத்தி இல்லை. இத்தலத்திற்கு மேலானதும், சமமானதுமான தலமுண்டென்று நினைத்தலும் சிவாபராதமாகும். அறுநி பரவத்துவாம் எமதாண்டவர் நினைக்குமவர் வினைப்பிறவியற அமிர்தசஞ்சிவிமலைவடிவாய் நிற்கின்ற இத்தலத்தில் செய்யும் அன்னதானம் முதலிய தானங்களும் திருத்தொண்டுகளும், நந்தவனம் வைத்தல், கிணறு குளங்கள் வெட்டிக் கட்டுவித்தல் ஆலயத்திருப்பணி செய்தல், தென்மொழி வடமொழி மறைகளோதுவித்தல் முதலிய கருமங்களைச் செய்தவர்கள் இம்மை மறுமைகளில் போக மோக்ஷ சுகங்களை அனுபவிப்பார்கள். நெய் கருப்பூரதீபமேற்றுபவர் உள்ளத்தில் ஞானதீபம் ஒளிரும். அட்டாங்க யோகிகளாயினும் இத்தலத்தை நினையாதவர்க்கு முத்தி கிட்டாது. மெய்ஞ்ஞானத் தவத்தினரின் இதயத்தில் வசிப்பதுபோல எக்காலத்திலும் இத்தலத்தில் பரமசிவன் குடிகொண்டுள்ளார்.

அருணகிரி மகிமை:-மாதவர் பரவும் மகாதேவர் எல்லையற்ற வான்குடி புகுந்த நீள்முடியுடைய சோதி மலையுருவாம் சுயம்புலிங்கமாய் இத்தலத்தைப்போல் உலகில் எத்தலத்திலும் அமர்ந்ததில்லை. கங்காதரர் உருவாம் இக்கிரியின் முடியினின்று எண்ணிறந்த அருவிகள் பெருகுவது

ஒருகங்கையல்ல, அனேக கங்கைகளைத் தரித்தவர் என்பதைக் காட்டுவதுபோ லிருக்கும். மாரிகாலத்தில் மலையடிவாரத்தில் வெண்மேகங்கள் தங்கிநிற்பது சந்த்ரசேகரர் வெள்விடைமேல் வீற்றிருப்பது போன்றிருக்கும். எண்ணிறந்த சர்ப்பங்கள் அடியிலும் முடியிலும் இடையிலும் தங்கி அரவாபரணர் என்பதை விளக்கி அனந்தன், தக்ஷன் முதலிய நாகராஜர்களைப் பழிக்கின்றன. எட்டுக் கோணங்களால் விளங்கு மருணாசலம் தான் அட்டமூர்த்தி என்பதை நன்றாய்க்காட்டும். சோணநதி, சக்திநதி, கமலநதி என்கின்ற அருவியாறுகள் த்ரிவேணியாகி கங்கை, யமுனை, ஸரஸ்வதி நதிகளைப் பொறாமையடையச் செய்கின்றன. மேகங்கள் அருணகிரி சிகரத்தையடைந்து திங்கள் கங்கைகளிலும் பெருமை கொள்கின்றன. குயில், கிளி, குழல்மூங்கில் இவைகள் இனிய கானசப்தத்தைச் செய்து கந்தர்வர்களிலும் தங்களை உயர்வாய் எண்ணுகின்றன. கிருஷ்ணபக்ஷத்து இரவில் மின்மினிகள் தங்கள் ஒளிகளால் தீபாராதனை செய்வனவாய்த் தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய பதத்தை அடைகின்றன. நீலமேகத்துடன் கூடிய மின்னல்கள் இடையூறின்றிச் சோணகிரியையடைந்து சௌபாக்கியகர்வத்தால் உமையையும் அவமதிக்கின்றன. மலையடிவாரங்களில்சஞ்சரிக்கின்ற மான்கூட்டங்கள் சிவபெருமான் கையிலிருக்கின்ற மானையும் பரிகசிக்கின்றன. இங்கு வசிக்கின்ற மலைவேடர்கள் தைத்தியராஜனையும் வெட்கச் செய்கின்றனர். பல பேசி என்ன? அருணாசலத்தின் மடியில் வசிக்கின்ற விலங்கு பறவைகளும் விருக்ஷங்களும்கூடப் பெருமைகொண்டு ஆனைமுகனையும் ஆறுமுகனையும் அவமதிக்கின்றன. கார்மேகங்கள் சிகரத்தில் தங்கிநிற்பது நீலகண்டன் என்பதைக் காட்டுவதுபோ லிருக்கும். இம்மேருவில்லிக்கு மலையரசர் மகளைத் தந்து அருணகிரீசரான மருமகன் நம்மினத்தவ

ராஜனென்று சமான சம்பந்தத்தினால் சந்தோஷிக்கின்றார். மேருகிரி இமயமலை கைலையங்கிரி விந்தியபர்வதம் முதலிய மலைகளிலிருந்து வந்த முனிவர்கள் இக்கிரியில் தவமியற்றி மேன்மையடைகின்றனர். வருடந்தோறும் இவ்வுயர்ஞானக் குன்றின்மேல் ஒளிரும் கார்த்திகை தீபம் பூமிதேவியின் கிரீடத்திற் பதித்த மாணிக்கமணிபோற் றோற்றும்.

இத்தலத்தில் அருணாசலத்தைப் பூசித்து சித்திபெற்றவர்கள்.

அயன் அரி:—பிரம விஷ்ணுக்கள் நான்பரம் நான் பரம் என்றுஅகங்கரித்துச் சண்டையிட்டு அருணாசலத்தின் முடியடிகளைத் தேடிக் காணமாட்டாதவர்களாய் அகங்காரம் நீங்கிப் பூசித்து ஞானமடைந்து தத்தம் காரியாதிகாரிக ளானார்கள்.

கௌதம முனி:—தேவேந்திரனுக்குக் கண்ணாயிரம் தந்த கௌதமமுனிவர் அருணாசலபாதமாகிற பவளக்குன்றின்மீது லிங்கப்ரதிட்டை செய்து அர்ச்சித்து பெறற்கரிய சித்திகளைப் பெற்று, இங்கு அர்த்தாங்கம்பெறத் தவத்திற்குவந்த பகவதி சங்கரிக்கு சோணாத்ரி மகிமையைச் சொல்லி தவத்திற்கு சகாயம் செய்து அருணாசலேசர் கட்டளையிட்டபடி சமீபத்தில் ஆச்ரமமமைத்துகொண்டு இத்தலத்திலேயே எக்காலத்திலும் தவமியற்றுகின்றனர்.

உமாதேவி:—முக்கட்கடவுளிடம் உத்திரவு பெற்று காஞ்சிபுரமார்க்கமாய் இத்தலத்திற்கு வந்து கௌதமமுனிவரால் அருணாசல மாகாத்மியத்தை யறிந்து அருணாசலபாத

மாகிய ‡ பவழக்குன்றில் கௌதமாச்ரமத்துக்கருகில் பர்ணசாலை அமைத்துத் தவமியற்றி வாமபாகம் பெற்று அரனும் அம்பிகையும் கலந்து ¶ அர்த்தநாரீச வடிவாயினர்.

அட்டதிக்குபாலகர்:—இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்கின்ற எட்டுதிக்குபாலகர்களும் மலையைச்சூழ எட்டு தீர்த்தங்களுண்டாக்கி லிங்கப்ரதிஷ்டை செய்து பூஜித்துக் காரியசித்தி பெற்றுக் காவல்ராளராயினர்.

அட்டவசுக்கள்:—தற்புகழ்ச்சியால் பிரமனுடைய சாபம் பெற்ற வசுக்கள் எண்மரும் அட்டமூர்த்தியாம் அருணாசலத்தைப் பூஜிக்க எட்டு முகங்களுடன் அனுக்கிரகித்த அருணேசரை வணங்கி எங்களுக்கு அருள் சுரந்த இவ்வெட்டு முகங்களுடன் எக்காலத்திலும் உலகத்தவர்க்கு தரிசனம் தரவேண்டுமென்று ப்ரார்த்தித்து சாபம் நீங்கினவர்களாய்த் தத்தம் பதம் பெற்றார்கள்.

---

‡ ஸ்கா-அரு-மாகா-கௌதமர் வாக்கியம்.
45 சுலோகம்- "அயம்சோண கிரே:பாத: ப்ரவாலா சலநாமவாந்"
47 " "மமாச்ரம சமீபேஸ்மிந் புண்யக்ஷேத்ர மிதம்மஹத்"
(இதன் பொருள்) இந்த சோணகிரியின் பாதமாகிற ப்ரவாளகிரி என்று பெயருடையதானது, என்னுடைய இந்த ஆச்ரமசமீபத்திலிருக்கும் பெரிய புண்ணிய ஸ்தலமாகும். (இதனால், கௌதமாச்ரமம் முன் பவழக்குன்றிற் கருகிலிருந்து பிறகு மலைக்கு மேல்புறம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.)

அருணாசலபுராணம்:—

"சோண பூதரமா மதன்குணபாற் பன்னசாலை புதிதமைப்பித்து"
"கோத மாச்சிர மந்தனிற் கோல்வளை
நீதி லாத்தவஞ் செய்தது செப்பினேன்" என்பதினாலுங்கொள்க.

¶ இம்மூர்த்தி பவழக்குன்றுச்சியில் தழுகிய ஆலயத்துள்விளங்குகிறது.

சூரியன்:—அசுரர்களால் உபத்திரவமடைந்து ஒளி இழந்த சூரியன் பிரமனிடம் உபதேசம் பெற்று அருணகிரியை நாடோறும் வலம் வந்து லிங்கம்வைத்துப் பூசித்து அருள்பெற்று அசுரரை ஜயித்து ஒளியுடையவனானன்.

பிரமன்:—திலோத்தமையினிடத்தில் மோகங்கொண்ட பிரமன் அவளைத்துரத்திவர அருணாசலத்தைச் சரண் புகலும் கிராத(வேட)னுகிபினுகந்தரித்து நான்குமறைகளையும் வேட்டைநாய்களாய்க் கொண்டு எதிர்நிற்கக்கண்டு அஞ்சிய பிரமன் பரமனென்றறிந்து அஞ்சி வணங்கி, காமக்குரோதங்களாகிற மிருகங்களையும் இந்திரியப் பறவைகளையும் வேட்டையாடுவதில் விருப்பங்கொண்டு இவ்வேடனுருவங்கொண்டனைபோலும் அண்ணலே! என்றிறைஞ்சி மலைக்குமேல்புறம் ஒருலிங்கத்தை வைத்துப் பூசித்தருள்பெற்றுப்பழிநீங்கினன்.

சந்திரன்:—தக்கனுடைய சாபத்தால் உடல்குன்றிய சந்திரன் அண்ணுமலையைப் பூசித்துச் சாபம் நீங்கினன்.

புளகன்:—புளகனென்னும் அசுரன் அருணேசரைப் பூசித்து இன்பவாசனை யுடையவனாய் நாவி வடிவங்கொண்டு அருணாசலத்தின்மேல் உலாவிப் பெருமைபெற்று தேவர்களையும் ஜயித்தான். பிறகு தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி அவனுக்குச் சிவபதமளிக்க என்னிடத்தினின்றுண்டாகும் ம்ருகமதத்தை எக்காலத்திலும்தரிக்கவேண்டுமென்று அவன் கேட்டுக்கொண்ட வரத்தின்படி அணிந்து ம்ருகமதேசுவரரென்னும் திருநாமம் பூண்டனர்.

பங்குமுனிவர்:—இருகாலுமில்லாத பங்குமுனிவர் கைக்குறடுகொண்டு ஊன்றி அருணாசலத்திற்கு நகர்ந்து

வந்து சோணதீர்த்தத்தில் தாகத்திற்குத் தண்ணீருந்தப் போகையில் ஒருயர்ந்த புருடன் கையில் தடியுடன் வந்து நொண்டியாவது அருணாசல க்ஷேத்திரத்திற்கு வாவாவது என்றதட்டி கைக்குறட்டைப் பிடுங்கிவீசி எறிந்து தண்டத்தை ஓங்க எழுந்து ஓடிப்போய் கால்வந்ததற்கு அதிசயித்துத் திரும்பிப் பார்க்க அத்தண்டதாரனைக் காணாமல் அருணேசரே இவ்வுருக்கொண்டு வந்தாரென்று ஆச்சரியமடைந்து பூஜித்துப்போனார்.

ப்ரதர்தனன்:—வடநாட்டரசன் கங்கைநீர்த் துறைவனான ப்ரதர்தனராஜன் சைனியங்களுடன் யாத்திரையாக வந்து அருணாசலேசரை தரிசிக்கையில், ஓர் கணிகைமாதின் மேற் காதல்கொள்ள, பார்த்தவர் நகைக்கும்படி குரங்கு முகமுடையவனானான். பிறகு தன்பிழையையுணர்ந்து தன்னுடைய சைனியங்களனைத்தையும் அருணேசருக்குத் தத்தஞ்செய்துபூஜித்து அவர்அனுக்கிரகத்தால் மானிடமுகம் பெற்றுத் தன்னாட்டை யடைந்தான்.

வச்சிராங்கத பாண்டியன்:— மலைமகளையே மகளாகப் பெற்ற மலயத்வஜபாண்டியன் மரபில், பொங்கரவம் பூண்ட எங்கள் சங்கரனாணையால் சுரேந்திரனே நரேந்திரனாக உதித்து வச்சிராங்கதனென்னும் உச்சநாமம்பூண்டு பொதிகை வெற்பிடை யுதித்த சந்தனமணத்துடன் செந்தமிழ் மணமுங் கலந்துலவப்பெற்றதும், சைவரும் புண்ணியதெய்வத்திருநதி வைகைநீர்பாவுவதுமான பாண்டியநாட்டை மதுரைமாநகரை ராஜதானியாகக்கொண்டு பரிபாலித்து வந்தான். தன்னிகரற்ற சிவபத்தியிற்சிறந்த தெய்விகம்பொருந்திய அம்மன்னவனரசாட்சியிலே, தரித்திரின்மையால் தனிகரில்லை, பாமரரில்லாமையால் பண்டிதரில்லை, குறும்பின்மையால் குற்றமில்லை,

குற்றமின்மையாற் றண்டனையில்லை. மீதூண்விருப்புமவரின் மையாற் பிணியாளரில்லை. பிணியாளரின்மையால் வைத்தி யரில்லை. காமக்குரோதங்களில்லாமையால் வழக்கும் போரு மில்லை. கற்புவழுவின்மையால் மழையின்மை இல்லை. செங் கோல் கோணாமையாற் பஞ்சமில்லை. இவையாவுமில்லாமை யால் தரித்திரமே தரித்திரப்படுவதும், மறியே அறிவற்றதும், கல்லே கடினமானதும், புனலே சிறைபடுவதும், பிணியே பிணிபடுவதும், செல்வமே கற்பிழந்ததும், நெற்கதிரே போர்படுவதும், பொய்யே பொய்படுவதும், பாம்பே வளை படுவதும், பஞ்சமே பஞ்சப்படுவதுமாயின. இவன் கீர்த்தி விண்ணளவும் வியாபித்தது. அரசனோர்நாள் ஊழ்வினை பிடர்பிடித்துந்த குதிரைமீதேறி வில்லம்புகளுடன் வனஞ் சென்று ஒரு கஸ்தூரிமிருகத்தைப் பின்தொடர்ந்தான். அது இம்மன்னவனைக் குதிரையுடன் நெடுந்தூரம் இழுத்துச் சென்று அருணாசலத்தை வலமாகச்சுற்றியோடியது. அது கண்ட அரசனும் வாகனத்துடன் பின்தொடரவே அந்த வாசனை மிருகம் அவன்கண்முன்னிலையிலேயே திட்டென விழுந்துபொட்டென மாண்டது. தெய்விகமாய் அரசனேறி யிருந்த குதிரையும் இடறி விழுந்திறந்தது. இரண்டு விலங் குகளும் ஆகாயத்தில் விமானத்திடையில் ஒளிர்கின்ற வித்தி யாதரராகி நின்று தரையில்விழுந்து தவிக்கின்ற தரணிபதி யைக் கூவி அரசே! நாங்கள் காந்திசாலி, கலாதரன் என்கின்ற இரு வித்தியாதர நண்பர். துருவாசமுனிவர் சாபத்தால் குதிரையும் நாவியுமானோம். இந்த மகிமைபொருந்திய அரு ணாசலத்தை வலம் வந்ததால் அச்சாபம் நீங்கிப் பழையவுரு வடைந்தோம். நீ இந்தப் பரம்பொருளுருவான கிரியை வாக னத்திலேறி வலம் வந்ததால் இடரடைந்தாய். அதுவும்அரு ணாசலேசரை அடக்கத்துடன்பாதசாரியாய் வலம்வந்து அர்ச் சித்து வணங்கினாற்போம் என்று சொல்லிப் பின்னும் இம்

மலைவலமகிமையைச் சொல்லத்தொடங்கி "மலையுருவான மகாதேவருக்கு முன்னொருகால் வருணதேவன் தந்த வாசனைகமழும் தேமாங்கனியை இளங்குமாரரான ஆனைமுகனும் ஆறுமுகனும் வருந்திக் கேட்க உலகமுழுதும் சுற்றி முந்திவந்தவனுக்கு இக்கனி சொந்தமானது என்று மொழிந்தனர். அம்மொழி முடியு முன்பே ஆறுமுகன் நீலமயிற் பரியேறி உலகை வலம்வர வேகமாய்ச் சென்றனன். ஆனைமுகனோ அகிலபுவனங்களுக்கும் ஆதாரனை உன்னையன்றி உலகம் வேறுளதோ? என்றத்தனைத்துதித்து அருணாசலத்தை வலம் வந்து மாங்கனியை வாங்கி யுண்டு களித்தனன். வேலாயுதந் தரித்த ஆறுமுகன் விரைவில் அகில வுலகையுஞ் சுற்றிவந்து பக்ஷிவாகனத்தினின்றிறங்கித் தந்தையை வணங்கிக் கனியைத் தரும்படி வேண்டினன். அதுகேட்ட எமதாண்டவர் புன்னகை புரிந்து இளங்குமரா! மூலகாரணமுணர்ந்த நின்முன்னவன் என்னுருவான அருணாசலத்தை வலம் வந்து மாங்கனியைப் பெற்றான். சிவந்தொளிரும் இக்கிரியைக் காலால் வலம் வருபவர் விஷ்ணுப்ரம்மேந்திராதி தேவர்களிலும் அதிகமானவர்; நினதன்னையிலும் உன்முன்னவனிலும் உன்னிலும் எனக்கிஷ்டமானவர்; பலபேசி என்ன? என்னைவிட எனக்கிஷ்டமானவர்; அவர்க்குச் செய்யும் பூஜை எனக்குச்செய்வதிலும் அதிக பயன்தரும் என்றனர். அதுகேட்டுமனமுவந்திருந்தனன் மயில்வாகனன். இவ்வரலாற்றை துருவாசமுனிவர் எமக்குரைத்தார்" என்று கிரிவலமகிமையைக்கூறி முடித்து இருவரும் அரசனிடம் விடைபெற்றுத் தேவலோகம் சென்றனர். அரசன் தன் மகன் ரத்தினங்கதபாண்டியனுக்குப் பட்டங்கட்டி முடிசூட்டி சிங்காதனத்திருத்தி மிகுந்த திரவியங்களுடன் அருணாசலத்திற்கு வந்து ஆலயத்திருப்பணிகள் செய்து பவளக்குன்றடியில் தவச்சாலை யமைத்து நெடுநாள் தவமியற்றி நாடோறும் கிரி

வலம் வந்துகொண்டிருக்கையில் வஞ்சமனத்தார்க்கெட்டாத அருணகிரீசர் வெள்விடைமேற் காட்சியளித்து முந்திய இந்திரபதமளித்துக் கைவல்லிய மளித்தனர்.

* வல்லாளராஜன்:--தன்னிகரில்லாவன்னிதன்குலத்தவன், ஈரமிகுந்த வீரதீரனும் சேரமான் மரபிலுதித்தவன், வில்விற் குமாரன், செல்வக்குபேரன், அரிவைக்கு மாரன், வறியற் குதாரன், பத்தியிற் சிறந்தவன், புத்தியிற் பரந்தவன், பரநாரி ஸோதரன், எளியார்த மாதரன், பிறர் பொருளிலிச்சையற்றவன், தருபொருளி லிச்சை யுற்றவன், தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையுங் காத்து நாற்குணங்களும் நாற்படையாகவும் நல்லறிவே சொல்லமைச்சனாகவும் வட்டமதி முகத்துப் பட்டத்தரசிகளான இருமாபையும் எழிலுறவிளக்கும் மல்லம்மை, சல்லம்மைகளுடன் வல்லாளனென்னு மரசன் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குமுன் அண்ணாட்டை திருவண்ணாமலையை ராஜதானியாகக்கொண்டு ஆஞ்ஞாசக்கரஞ் செலுத்தி அரசாண்டுவந்தான். அக்காலத்தில் அவனது அறநெறி வழுவாச் செங்கோல் பெருங்காற்று, பெருமழை, பெருவெள்ளம், தீப்பற்றல், இடிவிழுதல் முதலான உற்பாதங்கள் சிறிதுமின்றி சுகுணமான காற்றும், மிதமான வெள்ளமும், பருவமழையும் தவறாமல் உண்டாகும்படி செய்வித்துவந்தது. நாட்டுக்குற்றம் எட்டுமில்லாத அவன் ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே ருத்திரகணிகைகளும் தினத்திலொரு வரித்த கணவனையன்றி மற்றைய காளையரைக் கண்ணெடுத்தும் பாராக் கற்புவாய்ந்திருந்தனர். இம்மன்னவன் காமடந்தை பூமடந்தைகள் மருவ எல்லாப் பாக்கியங்களும் பெற்றி

---

* இச்சரிதம் வடமொழி ஸ்காந்தத்தி லில்லை தென்மொழி அருணாசல புராணத்தில் மட்டுமே காணப்படுகிறது.

ருந்தும் செந்துவர்வாய் மைந்தரின் எழிசை யாழினுமினிய மழலைச் சொற்களைக் கேட்டின்பமுறும் பாக்கிய மொன்று மாத்திரம் பெற்றானில்லை. ஓர் நாள் அத்தாணிமண்டபத் தாசிருக்கையில் மந்திரி சாமந்தர்கூடிய சபையில் நீங்கள் பெரியோருடன் கலந்து யோசித்து பிறவியேழும் பின் தொடரா ஞானமைந்தனைப் பெறுவதற்கு ஏதேனும் தந்திர முரைப்பீரென அவ்வண்ணமே அவர்கள் யோசித்துரைத்த படி, தவசிகள் பெரியார் சிவனடியார் யாவர்க்கும் கேட்ட பொருள்களை இல்லையென்னாமல் அள்ளிச்சொரிவேமென் னும் கொடைத்தம்பம் நாட்டி புகழ்க்கொடியுடன் வள்ளற் கொடியையுமுயர்த்தி வள்ளுவரைக் கொண்டு நாடெங்கும் பறையறைவித்தான். அவ்வாறே மாரிகாலத்துமேகம்போலச் சலியாது கொடுக்கத் தவசிகள் சித்தர் முத்தமிழ் வித்தகர் யாவரும் வேண்டியதைப் பெற்றுப்போயினர். கருணையார் பரமர் அருணாசலேசர் விரதசாலியான இவ்வரசனின் உதாரகுணத்தைச் சோதித்தருள வெண்ணி பிரமதகணங் களெல்லாம் ஜங்கமராய்வர தவத்தலைவர் வேடம்பூண்டு திரு வருணைநகரின் நாடகக் கணிகையர் வீதியிற்சென்று வீட் டிற்கொரு சிவனடியாராகப் பணயம் கொடுத்து வசிக்கச் செய்து மன்னனிடம் வந்து சத்திய விரதம் தவறாச் சற்குண வேந்தனே! மாரனை எதிர்த்துப் போர்புரிவதற்கு ஒரு கணி கைமாதைத் தருவாயாக என்றனர். அதுகேட்டமன்னவன் விலைமாதர் வீதியிற்சென்று தேடப் பரமனுடைய சோதனை யால் ஒரு மாதும் கிட்டாதொழியவே வருந்தினவனுய் தனது அரமனை திரும்பி விரதபங்கம்வந்ததே என்செய் வோமென்று கவலையுற்றுத் தன் தேவியரிடம் தெரிவித் தான். உத்தமபத்தினியாகிய சல்லமாதேவி கணவன் குறி ப்பறிந்து தமது ஆஞ்ஞையின்படி நடப்பேன் கவலையொழிக வென்று அரசனைத்தேற்றினள் அதுகேட்டு அகமகிழ்ந்த

மன்னன் தன்னில்லாளான சல்லமா தேவியை அத்துறவி வேந்தருக் களித்தான். அந்த போலித்துறவி பள்ளியறையிற் சென்று பூவணையின்மீது அறிதுயில் கொள்ளலும் தேவி, இனிய சைத்தியோபசாரங்களால் எழுந்திராமைகண்டு தனது தளிர்போன்ற மென்கரத்தால் திருமேனியைத் தீண்டலும் பாலசூரியன்போன் றழகிய குழந்தையாயினர். அது கண்டு தேவி அரசரைக் கூப்பிட இருவரும் ஆனந்த மடைந்து அக்குழவியை ஏந்தி முத்தமிட்டணைக்க மதலை மாயமாய் மறைந்தது. அதுகண்டு அரசரும் தேவியும் துக்கிக்க, அருணாசலேசர் வெள்விடைமேற்றோன்றி "உமக்கு யாமே புத்திரனாகி ஈமக்கடன்களை முடிப்போம் கவலையொழிக" என்றனுக்கிரகித்து மறைந்தருளினர். தம்பதிகள் சந்தோஷித்து அருணாசலேச ராலயத்துள் பல திருப்பணிகளைச்செய்து முடித்து சிவசாயுஜ்ஜிய மடைந்தனர்.

அருணாசல ரஹஸ்யம்.

சுலோகம்.

தர்சநா தப்ரஸதஸி ஜநநாத் கமலாலயே
காச்யாந்து மரணாந்முக்தி: ஸ்மரணா தருணாசலே||

(இதன்பொருள்) சிதம்பரத்திற் காண்பதாலும் கமலாலயத்திற் பிறப்பதாலும் காசியில் இறப்பதாலும் முக்தி; அருணாசலத்திலோ நினைத்தாலே முக்தியென்பதாம்.

(கருத்து) பிறத்தலும் இறத்தலும் ஒருவன் நினைத்தபடி முடியாது. சென்று தரிசித்தல் பாலர், அந்தர், பிணியாளர் முதலியவர்க் கியலாது. இருந்தபடி நினைத்தலே எல்லார்க்கு மெளிது. தைலதாரைபோல இடையறாச் சிந்தனையே இவ்வுடற் சிறை நீங்கி முத்தி பெறுவதற்கு இன்றியமையாச் சாதனம். எனவே, நினைக்கமுத்திதரும் தருணேந்து சிகாமணியுருவாம் அருணாசலமே அனைத்தினும் அதிகமென்பது ஆன்றோர் துணிபு.

தத்துவார்த்தம்:—அநாகதத் தலமாம் சிதம்பரத்தில் (ஞானாகாசத்தில்) தரிசித்தலாலும், அதாவது தனக்குள்ளேயே சிதம்பரரகசியத்தைக் காணாமற்கண்டிருத்தலாலும், இறந்து மறுபடி பிறப்பதற்கு முந்தியே † கமலாலயத்திற் பிறப்பதாலும், அதாவது மூலாதாரத்தலமாம் மூலகமலாலயத்தில் பிறப்பற பிறவாமற் பிறந்திருத்தலாலும், உடலைவிட்டு உயிர் ஓடுவதற்கு முந்தியே ஆஞ்ஞாத் தலந்தொளிரும் * காசியாம் சுழிமுனை தீபச்சுடரொளியில் இறப்பதாலும், அதாவது இறப்பற அங்கு இறவாம லிறந்திருப்பதாலும் முக்தி. இம்மூன்றிற்கும் மூலமாய் ஒன்றாகி ஓங்கி உயர்ந்தொளிரும் ஆதியுமந்தமுமில்லா அருட்பெருஞ்ஜோதிஸ்புரணமாத்திரமாம் அருணாசலத்திலோ வென்றால் நினைத்தமாத்திரத்தால் முக்தி. அதாவது அருண + அசல:=அருணாசல:. ‡ அருண என்றால் பந்தமற்ற, கடனற்ற (கர்த்தவ்ய மற்ற), ¶ செம்மையான, பௌன, ப்ரபாகர (ஒளி செய்கின்ற), || சிவ என்றும், § அசல: என்றால் சலிக்கா

---

† கமலாலயம்-திருவாரூர். * காசி-ஒளியுடையது.

‡ அருண —ருண-பந்தம், கடன் (கர்த்தவ்யம்) + அ-அற்ற=பந்தமற்ற, கடனற்ற. "ருணத்தி ஸர்வலோகேப்ய: பருஷம் பாபஸஞ்சயம்
ருணே நவித்யதே யஸ்மிந் த்ருஷ்டேதேநாருணாசல:" ||

(இ—ள்) கொடிய பாபக்கூட்டத்தால் பந்திக்கப்பட்டிருக்கின்ற எல்லா உலகங் [உயிர்] களும் (எதனால்) எதைப் பார்த்த மாத்திரத்தில் பந்தமும், கடனு [கர்த்தவ்யமு]ம் உள்ளதாகத் தோற்றுகிறதில்லையோ [மிஞ்சுகிறதில்லையோ] அதனால் அருணாசலம் என்றுபெயர். [ஸ்கா-அரு-மாகாத்மியம்.]

¶ அருண="சந்த்யா ராகோர்க்க சாரதௌ அவ்யக்தராகே நிச்சப்தே" என்று ப்ரதாபன்.


|| "அஸௌ யஸ்தாம்ரோ அருண உதபப்ரு: ஸுமங்கல:"
"நமஸ்தாம்ராயசாருணாயச" சுருதி.

§ சல:-அசைவு + அ-அற்றவன்=அசைவற்றவன்(து).

தது, நிலைத்தது என்றும் பொருள். எதைக்கண்டமாத்திரத்தில் பந்தமும், கர்த்தவ்யமும் இல்லையோ அந்த நிலை பெற்றொளிர்கின்ற மோனச்செம்பொருளாம் சிவத்தில் ஏனைய நினைப்புகளற ஒப்பிமாத்திரமாத்தன்னை நினையாமல் நினைத்திருத்தலால் மாத்திரம் முக்தி என்பது இதன் ஆழ்ந்த கருத்தும் நுண்ணிய மெய்ப்பொருளுமாம். "நாந்ய: பந்தா அயநாய வித்யதே" இதைத்தவிர முக்தி அடைவதற்கு வேறு மார்க்கமில்லை.



தலமகிமை முற்றிற்று.



ஸ்ரீ அருணாசலேசர் துதி.

சந்த விருத்தம்.

உமையு ணாமுலை அம்பிகை சங்கரி
அமுத நேர்நா தந்திரு கன்றனை
உலகை யாளப யந்தசு தந்தரி—சிவகாமி-
உயிரி தாமென பங்கினு றைந்தலர்
குவளை யாமிரு கண்களி ருந்துணை
உவகை வாரிதி சந்திர னென்றெழு—மருணேசா;

இமைக ணீர்திரு மஞ்சன மன்புகொள்
சமய பூஜையு ளஞ்சுயர் மந்திர
மௌனது யானெனல் கண்டமு திந்த்ரிய-மெழில்திபம்-
இடைய ருதிவை கொண்டுதி னந்தொழ
தகர வானிலி ரண்டற லின்புற
இதய பூவணை கொண்டுது யின்றிட—வருள்வாயே;

கமல நாபன யன்றன கந்தைகொள்
சமர வீதியி லங்கிகொ ழுந்துயர்
கனக மால்வரை கண்டுத ளர்ந்தடி—முடிதேடி-
கனவ ராகமொ டஞ்சமி ரண்டெனு
முருவ மாகிதி லந்தனி லுப்பரில்
கடுகி யோடிவ ருந்திய றிந்தில—ரகமேபோய்;

அமையு நாளிலெ திர்ந்தப ரஞ்சுடர்
நமனு தாய்பசி கண்டுவ ருந்திந
லமுத பானமி டுந்தயை கொண்டவ-னமையாளும்-
அறிவு ளேயரு ளெந்தைய ருங்குரு
பரம ஞானசு கந்தரு சங்கர
னருணை நாயக னென்றில குஞ்சிவ—பெருமானே.



மூர்த்தி மகிமை.

கட்டளைக் கலித்துறை.

அஞ்சக் கரச்சிறை வீசிப் பறந்துயர்ந் தாணவங்கோ
ளஞ்சக் கரத்தனுங் காணு திழிந்தய ராநநத்த
னஞ்சக் கரத்த வராக னறிவரு மாரடிய
‡ னஞ்சக் கரத்த னருள்சேர் வடிவரு ணுசலனே.

(கருத்துரை) சக்ராயுதங்கொண்ட வராகவடிவங் கொண்ட விஷ்ணுவால் அறிய முடியாத பாத முடையவரும், கமலத்தைக் கையில்தரித்த ஆணவங்கொண்ட பிரமரும் அன்னப்புள்ளாகி உநிர்க்ஷுகசிக்கின்ற சிறகுகளை வீசிப் பறந்து மேலெழுந்து காணமுடியாமல் அயர்ந்து இறங்கி விடும்படி (உயர்ந்த) முகத்தையுடையவரும், அருட்சக்தி கலந்த வடிவுள்ள பஞ்சாக்ஷரத்தையுடைய சிவசொரூபர் அருணாசலரே ஆவர்.

‡ அஞ்ச + க்ஷரச்சிறை, அஞ்சம் + கரத்தன், அம் + சக்கரத்த, அஞ்சு + அக்கரத்தன் எனப்பிரிக்க. அஞ்சக்கரம்-சிவாயநம:, அருணாசல:||

மார்க்கண்டேயர்:— தன்மகிமையைக் கேட்டு சிந்தை மகிழ்ந்தவராய் அந்தரங்க சுகசாகரத்தமுழ்ந்தி எழுந்து என்னை ஆண்டுகொண்ட பரமசிவம் இத்தலத்தில் அரணரு நாரணரு முடியடி யறியாச் சோதித்தம்பமாய் நிமிர்ந்து மலைவடிவாயமர்ந்த வரலாற்றையும் செவிக்கமுதெனக் கேட்டு சிந்தைமகிழும்படி அருளிச்செய்யவேண்டும் ஆசிரியரே! என்று வினயமாய் வினவினர்.

நந்திசர்:—ஆமோதித்து மூர்த்திமகிமையை முறையாய்ச் சொல்லத் தொடங்கினர்.

சிருட்டி சம்மாரக் கிரமம்:—ஒன்ருய் இரண்டற்றதாய் தனித்தொளிரும் சிவத்தினிடம் "சூரியனில் வெப்பம்போல" அபின்னமாய் பராசக்தி ஒளிர்வள். அச்சக்தியின் சன்னிதியில் "பஹுஸ்யாமிதி ஸங்கல்பாத்" நானவாய் விரிவேன் என்கிற சங்கற்பத்தால் நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், ருத்ரன், விஷ்ணு, பிரமன் என்னுமிவர்கள் முறையே தோன்றி சிருட்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களை அயன் முதல் ஐவருஞ் செய்வர். ஸர்வ ஸம்மாரகாலத்தில் சுழுத்தியைப்போல அனைத்தும் தோன்றிய முறையே ஒடுங்க, மறுபடி சிருஷ்டிக்காக அரி, அயன் முதலிய ஜீவர்களின் கன்ம வாசனுபீஜமாகிய விபூதியை அணிந்து ப்ரஜ்ஞான கனரூபமான வான்பொருள் சிவம் ஒன்றேயின்றி அப்பாலைக்கப்பாலாம் அம்மகா ஸ்மசான நிஷ்கள வெளியில் ஆனந்தமாய் நடம்புரியாநிற்கும். இப்படியே ஒவ்வொரு கற்பத்தின் ஆரம்பத்தில் சிருஷ்டியும், அந்தத்தில் பிரளயமும் நிகழும்.

அயன் அரிகளின் வாதப்போர்:—கமலாசனத்திலிருந்து நாமரூப உலகனைத்தையும் படைத்த வாணிபதியாகிய பிரமர், புத்தி வடிவாய் நின்று அகிலத்தையும் ரக்ஷிக்கும் ஸ்ரீதரனை விஷ்ணுவை அடுத்து வைரங்கொண்டு வாதப் போர் தொடர்ந்தார்.

பிரமன்:—ஹ்ருஷீகேச (இந்திரியாதிபதியே)! என்னுடைய படைப்பின் விசித்திர சித்திரசக்தியை யான் சொல்லக்கேட். டறிந்தாயாகில் ஆச்சரியப்படாமலிருக்கமாட்டாய்; சொல்வேன் கவனமாய்க்கேள்; விண்முதல் மண்வரையில் பஞ்சபூதங்களையும் அவற்றினிடையில் பஞ்சபூதாத்துமகமான தேவர் மனிதர் முதலிய நால்வகை யோனிகளையும் பல்கோடி வகையில் ஆண் பெண்ணென இரண்டாய் வகுத்து, அணுவினும் சிறிய ஜந்துக்களுக்குள்ளும் முகத்தால் ஒன்றினை ஒன்று அடையாளங்கண்டறியும்படி மாறுபட அமைத்து, முக்காலத்திலும் ஒன்றைப்போல மற்றொன்றில்லாமல் யாவரும் அதிசயிக்கும்படி சிருஷ்டித்து வருகிறேன்; இன்னுமிதிலும் ஆச்சரிய மொன்றுண்டு; அதாவது, உருவங்களில் எண்ணிறந்தபேதந் தோற்றப் படைத்ததுமன்றி அருவமான சத்தத்தில் அளவற்ற பேதங்களை அமைத்துப் படைத்துள்ளேன்; உதாரணமாக, மறைவிலிருந்து பேசுமவரை சப்தவேற்றுமைகொண்டு பகுத்தறியவும் வாக்கில் நானாவிதமான சித்திர சக்தியை வைத்திருக்கிறேன்; ஐயறிவுடைய ஜந்துக்களுக்குள்ளும் இளங்கன்றும் தாயும் பிரிந்து மறைந்துபோயினும் ஆயிரக்கணக்கான பசுக்களுக்கிடையில் ஒன்றினை ஒன்று சப்தத்தால் இருப்பிடமறிந்து கூடிக்குலவுகின்றது. அகாமுதலிய அக்ஷரங்களுடன் கூடிய பற்பல பாஷைகளின் சப்தஜால விசித்ரங்களையும்; எழிசைப்பண்களின் எண்ணற்ற புதிது

புதிதான இதாமிர்த ரசங்களையும் செவிவாயாற் பருகி இன்பமடையாதாரும் உளரோ? எனவே, ஒலியுருவங்களில் இத்தனை அற்புதபேதங்கள் தோற்ற அமைத்து உலகுயிரத்தனையும் படைத்த நானே முழுமுதற் கடவுள்.

விஷ்ணு:—என்னருமைக்குழந்தாய்! நீ இளம்பிள்ளையாகையால் என்னுடைய மாயாமன சங்கற்பசக்திப்ரபாவத்தை நன்கறியாமற் பேசினை; சத்தியலோகஞ் சென்று மீண்டு பாதலத்திற்புகுந்து உலகனைத்தையும் ஒரு நொடியிற் சுற்றிவரும் மனோவேகத்திற்குச் சமானவேகமுடையதொன்றை உன்னுடைய சிருஷ்டியிற் காட்டுவாயோ? சித்தசங்கற்பமே கனவில் எல்லாவுலகையும் ஆக்கி அளித்து அழிக்க வல்லது. கனவிற்காணும் காட்சிகளும் சிருஷ்டி விசித்திரங்களும் என்னால் ஆக்கப்பட்டவையன்றோ? சொப்பனத்தில் மனிதன் சிறகின்றிப் பறக்கிறான்; தன் தலையைவெட்டித் தானே கையிலேந்தி நடக்கிறான்; இவை போன்ற கூடாதவைகளைக்கூட்டிவைக்கும் பல அற்புதங்கள் நிகழ்கின்றன; என்னுடைய ஆத்தும மாயையால் பல அவதாரங்களாக என்னை நானே சிருஷ்டித்துக் கொள்கிறேன்; அன்றியும் உன்னையும் படைத்து உன்னால் படைக்கப்பட்டவை அனைத்தையும் ரக்ஷிக்கின்றேன்; நான் ரக்ஷிக்காவிட்டால் உன்படைப்பினால் யாது பயன்? "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" ஜகமெல்லாம் விஷ்ணுமயம் என்பர் உண்மையுணர்ந்தவர்; என்னிடமுள்ள அகம் இதம் விருத்தி ரூபமான சங்கற்ப சக்தியே அகிலமும் படைத்தளித்தழிக்கின்றது. சுவரின்றிச் சித்திரம் நில்லாததுபோல என்னுடைய விஞ்ஞானமின்றி உன்னுடைய நாமரூபப்ரபஞ்சம் எதனிடத்து நிற்கும்? அதனால் யான் பரம்.

பிரமன்:—நெடுமாலே! நீ சொல்வது விந்தையினும் விந்தையே; நான்படைக்காவிடில் நீ எதைரக்ஷிப்பாய்? நரசிங்

கஞகி தூணிற் பிறந்த உனக்கு அத்தூண் தந்தையாகுமா? அரணிக்கட்டையிலிருந் துண்டாகும் அக்கினிதேவனுக்கு அக்கட்டை தந்தையாகாததுபோல நீ எனக்குத் தந்தை யாகமாட்டாய்; என்னை சுயம்பு (தானே உண்டானவன்) என்றும், தேவர் முதல் யாவரும் பிதாமகன் (பாட்டன்) என்றும் அழைப்பார்கள்; உன்னுபிகமலம் எனதுபீடமாகும்; நாமரூபமாகக் காணப்படும் இருவகை சேதனுசேதனத் தோற்றங்கள், பராமுதல் வைகரி ஈருகவுள்ள அஜபை பிரணவமுதலிய வாக்குகளும் அவைகளின் பொருள்களுங் கூடிய என்னுடைய சக்தியினுலேயே நிலைபெறுகின்றன; இவ்வொலி யுருவங்களான நாமரூப ப்ரபஞ்சத்தை விட்டு உன்னுடைய சங்கற்பம் எதைப்பற்றி நிற்கும்? அதனுல் யான் பரம்.

ஜோதிர்லிங்க ஆவிர்பாவம்:—அஞ்ஞானநிமித்தால் கண்கள் இருண்டு, நானேபரம் நானேபரம் என்று அகங்காராந்தகார ரணகளத்தில் வாதச்சண்டையிட்டு கர்ஜிக்கின்ற பிரம விஷ்ணுக்கள் கண்ணொளிமழுங்கித் திடுக்கிட்டொதுங்கவும், தேவர் முதல் யாவரும் துன்பமொழிந்து களிக்கவும், தானே பரமாகிய மனோவாசாமகோசர அசல ஞானனந்த க்ருபைக்கடலாம் பரமசிவர் இவர்கள் அஞ்ஞான அகங்காரங்களைப்போக்கி மெய்ஞ்ஞான மளிக்கக்கருதி, திகந்தங்களிலுள்ள பேரிருட் கூட்டங்களைக் கிழித்தோடி ஒளிர்கின்ற நீண்ட தண்ணருட் செங்கிரண ஒளி பரப்பி பொறிகளைச் சிந்துகின்ற அக்கினித்தம்பமாம் அற்புதமூர்த்தியாகி, மெய்ஞ்ஞானத் தவத்தினரின் இதயமென ஆழ்ந்து அன்னவர்கைத் தானபலமெனத் தழைத்தோங்கி விண்ணையும் மண்ணையு மறைத்து ஞானக்கண்ணுக்கன்றி ஊனக் கண்களுக் கெட்டாத முடியடிகாட்டா முழுமுதலாகி

இடையில் நின்றருளினர். ப்ரம்மாண்டங்களைப் பேதித்து வளர்ந்தெழுந்த அத்தம்பத்தின் சோதியால் நீலவானம் செவ்வானமாயிற்று. கிரக நட்சத்திரங்கள் யாவும் சிவந்து அக்னி மலை சொரிந்த கைரிகதாதுக்கள் போலவும், தீப்பொரிகள் போலவும் இத்தம்பத்தின் இடையில்நின் றழகுசெய்தன. திக்குகள் அகன்று சிவந்தன. ஜ்வாலைகளின் வேகத்தால் கடல்கள் அலையடங்கி வடவானலத்தால் வியாபிக்கப் பட்டனபோல் இருந்தன. பருவதங்களெல்லாம் உதயாத்தமனகிரிகள்போல் செந்நிறமாயின. சமுத்திரஜலத்துள் நிறைந்த நிழல் பரப்பி நின்ற ஜோதித்தம்பத்தின் ஒளியிடைப் பட்ட திமி திமிங்கில முதலிய ஜலசரங்கள் யாவும் பத்மராகச் சிலைகளாலான உருவங்கள் போன்றிருந்தன. வனங்கள் உபவனங்களெல்லாம் செம்பவளக் கொத்துகள் தழைத் தடர்ந்து தொங்குவனபோல் காணப்பட்டன. வாவி நதி கூபங்களெல்லாம் செவ்வல்லி அலர்ந்தடர்ந் தொளிர்வன போன்றிருந்தன. பூமண்டலமெங்கும் குங்குமச் சேற்றால் மெழுகப்பட்டதுபோ லாயிற்று. பல பேசியென்ன? உலகிலுள்ள ஸ்தாவர ஜங்கமங்களெல்லாம் சிவந்ததுடன் பிரம விஷ்ணுக்களின் வெண்ணீலமேனிகளும் சிவந்தொளிர்ந்தன.

அரி அயன் அடிமுடி தேடல்:— † அம்போருக தம்போருகர்கள் இருவிழிகளும் நெற்றியிலேற அண்ணாந்து நோக்கி ஆச்சரியங்கொண்டு தங்களுக்குள்ள மாச்சரியங்களை விட்டு இப்படிச் சிந்திக்கலானார்கள். "இஃதென்ன? செஞ்சோதிப் பிழம்பொன்று தோன்றி பூமியினுதரத்தைப் பிளந்து அனந்தனின் சிரோமாணிக்கவொளியுடன் கலந்து மேல்நோக்கி வளர்ந்து அண்டகடாகத்திற்கப்பாலும் பெருவெளியை யூடுருவி நிற்கின்றது. கற்

† பிரம விஷ்ணுக்கள்.

பாகத்தில் உதிக்கின்ற துவாதசாதித்தரும் சுவர்க்கமத்திய பாதாளங்களில் ஏககாலத்தில் உதித்தார்களோ என்ன? அல்லது, அகன்ற ஆகாச மத்தியில் மேகக்கூட்டங்கள் ஒன்றோடொன்றுரைவதாலெழுந்த கண்ணொளியைக் கவர்கின்ற மின்னற்கூட்டங்கள் பூமியில் விழுந்தெழுந்து வளர்ந்தனவா? சிவபெருமான் நுதல்விழித்தீ சிதறிப் பூமியுனுட்சென்று பாதலத்தை எரித்து ஜ்வாலையுடன் மேலெழுந்ததா? இவ்வளவு தேஜஸுடன் கூடியிருந்தும் உஷ்ணமின்றி அதிசீதளகிரணங்களே வீசுகின்றன! இதனுடைய செங்கிரணவொளியால் உலகிலுள்ள சராசரங்களனைத்தும் சிவந்தனவேயன்றி மிகச்சமீபித்த ஜந்துக்களையும் நெருப்பைப்போல் எரிக்கவில்லை. பூமியிலிருக்கும் மேருமந்தரமலைகள் இத்தம்பத்தின் இரண்டு பாதங்கள் போல் விளங்குகின்றன. இது எங்கிருந்துதித்தது? எது மூலம்? எதனால் விளங்குகின்றது? இதன் எல்லை எது? கீழ்மேல் குறுக்களவுகள் எவ்வளவு? என்பவைகளை அநுமானப்ரமாணங்கொண்டும் அறிய முடியவில்லை. இதன் முடியடிகளை அறிய உற்சாக முண்டாகிறது" என்றிவ்வாறு தம்முள் பலவிதம் எண்ணிக்கொண்டிருக்கையில் அச்சோதித்தம்பத்தினின்றெழுந்த அசரீரிவாக்கின்படி அந்தாதியற்ற போதஜோதித்தம்பத்தின் அடியை விஷ்ணுவும் முடியை பிரமரும் காண யத்தனித்து யார் முன்பு கண்டாரோ அவரே பெரியவரென்று சபதஞ்செய்து மழலைக்குழந்தைகள் கண்ணாடியில் ப்ரதிபிம்பித்த சந்திரனைத் தேடுவது போலத் தேடலானார்கள்.

விஷ்ணு:—மூலத்தைக்காண முன்வந்த ஸ்ரீருஷீகேசர் மோகத்தால் இருண்டு பரந்த அகங்காரமென வராக வடிவுகொண்டு மேருமந்தரமென வளர்ந்து அதோமுகராய்,

போவாவின்றெழுந்த மனத்தின் எண்ணிறந்த சங்கற்ப ஜாலங்கள் போன்ற ரோமபந்திகளைச் சிலிர்த்து, கவுட்டத்தில் பிறையென நீண்டுவளைந்த கோரப்பற்களுடன்கூடிய தனது கூரிய மூக்கினால் பாதலத்தையும்பிளந்து, விற்பன விவேக கற்பனா சக்தி மிக்க கவிகளின் இதயமென ஆழ்ந்து, கணத்திற் காயிரம் காததூரம் கடுகிச்சென்று, சென்ற சென்ற விடந்தோறும் சோதிஸ்தம்பத்தையே முன்னணியிற் கண்டும் ஊக்கத்தை விடாமல் இதுபார்க்கப்பட்டது, இது பார்க்கப்பட்டது என்றனேத்தையுங்கடந்து, ஆதார சக்தியைத் தாண்டி அப்பாற் சென்றும் முன்போலவே சோதிஸ்தம்பம் முன்னிற்கக்கண்டு பின்னும் பலகாலம் அடியைத்தேடியும் காணமாட்டாதவராய் முகமும் கவைப் பற்களும் கழுந்தாகித் தேய்ந்து கட்டுகள்விட்டுக் களைத் தயர்ந்து தன்னை ஆய்ந்தமனமென ஒய்ந்து அகங்காரங் கழன்று இது நான்மறை முடிவிலிலங்கும் ஞானவடிவாம் பரம்பொருளென நிச்சயித்து, அகங்காரத்தால் இதனடியைக்காண எண்ணியவளவிலேயே கீழ்த்தரமான விலங்கானேனே, "தக்க இன்ன தகாதன இன்னவென், றொக்க உன்னல ராயின் உயர்ந்துள" தேவரும் விலங்கே அன்றோ? என்று வெட்கி மேலெழமாட்டாதவராய்ப் பரமசிவத்தைத் துதித்து அவரருள்கொண்டு மேலேறி உள்ளுக்குறுறை பரஞ்சோதியை அகத்தில் ஆராயத்தொடங்கி தியான யோகத்தழுந்தி நினைவயர்ந்து பூதவுடம்பின் மருவு கரணங்களு முயிருமுணர்வுமவிழ தேடிப்போன தன்னையுங் காணாதவராய்ச் சும்மாவிருந்தார்.

பிரமன்:—தன்னிழலைத்தாவிப்பிடிக்க முயற்சிப்பவர் போல, விருதுகூறி முடியைக்கண்டுபிடிக்க நிச்சயித்த நான்முகர் ஹம்சரூபியாகி நாதாந்தத்தொனிரும் போதாந்

தக்கடவுளை விளக்குவதற்கு ஆரவாரித்தெழுந்த ஆகமக் கலைகளென ஆகாரமற்ற ஆகாயத்திலலைந்து தேடவெண்ணி தனது பரந்துநீண்ட சிறகுகளை விரித்து உயரவெழுந்து நீண்ட கிரணரேகைகளைக் கண்டுகொண்டே பறந்து போனார். வாயுவேக மனோவேகங்களையும் கீழாக்கி நெடுந் தூரம் சென்றும் நேத்திரேந்திரியவிஷயத்திற்கு அப்பால் ஜோதித்தம்பம் முன்போலவே காணப்பட்டுக்கொண்டிருந் தது. அத்தம்பத்தருகே ஹம்ஸம் சென்றுகொண்டே காணப்படுவது அந்திச்செவ்வானத்திடையே காணப்படும் சந்திரகலைபோன்றிருந்தது. பக்ஷி ஸஞ்சாரமார்க்கம், மேக மண்டலம், வைமானிகர் மார்க்கம், நக்ஷத்திரமண்டலம், தேஜோமண்டலங்கள் ஒன்றிலொன்று எதுவெது உயர்ந் ததோ அவைகளையும் க்ரகமண்டலங்களையும் எவ்வளவுக் கெவ்வளவு கீழ்ப்படுத்துகின்றாரோ அவ்வளவுக் கவ்வளவு சோதித்தம்பம் உயர்ந்து காணப்பட்டுக்கொண்டே இருந் தது. ஸப்தமருத் மண்டலங்களையும் மும்மண்டலங்களையும் தாண்டி எண்ணிறந்தகாலம் முடுகிச்சென்று சிறகுகள் ஓய்ந் துநிர்ந்துபோக மேற்செல்லமாட்டாதவராய் நிமிர்ந்து நோக் கலும் ஊனக்கண்ணுக்கெட்டாது உயர்ந்து நின்றொளிரும் ஜோதித்தூணைக்கண்டு மனமயர்ந்து கண்கள்சுழன்றிரு ளடைய அந்தோ! வீணாக விஷ்ணுவுடன் வாதுபுரிந்து தீரயோசியாமல் சபதஞ்செய்தேனே; என்கதி என்ன வாகும்? அடியைக்காணச் சென்ற நாராயணர் இந்நேரம் கண்டிருப்பாரோ என்னவோ? என்று தலைகுனிந்து வியா குல சித்தராய் செம்பவளம்போன்ற முகம் வெள்ளாம்ப லென வெளுத்து துக்கமாகிற ஊஞ்சலிலிருந்தாடி அனலி டைமெழுகாயுருகி எண்ணமிட்டுக்கொண் டிருக்கையில் சந்திரகிரண ஒளிவீசக்கண்டு, மறுபடியும் அண்ணாந்துபார்க் கச் சமீபித்த தாழம்பூவைக்கண்டு இந்தக் காரணங்கொண்டு

சூழ்ச்சியால் விஷ்ணுவை ஜயிப்பேனென்றெண்ணினார். அக்காலையில் அத்தம்பத்தினின்றெழுந்த ஒளிமிகுந்த சித்த புருஷர்களுடைய இவ்வார்த்தைகள் பிரமன் செவியிற் பட்டன. "எந்த தேஜஸின் சிறிய அணுவினின்றும் இத்தகைய விஷ்ணு பிரமர்கள் கோடிக்கணக்காக உதித்தார்களோ அந்த தேஜஸின் முடியைக்காண இந்த பிரமர் முயற்சிக்கின்றார்;எவருடைய உண்மை ரூபத்தை வேதங்கள் அறியமாட்டாவோ அவரருளின்றி, இச்சோதியின் ஆதியந்தத்தை அறியமுடியாது. பிறவிக்குருடன் சூரியனைக்காண முடியாததுபோல அஞ்ஞானிகள் இச்சுயஞ்சோதியைக் காணமுடியாது. இவ்வருணசோதி சுயம்புலிங்கத்தை யோகிகள் ஞானக்கண்கொண்டு தமக்குள் காண்கிறார்கள். பாதாளத்திற் சென்று அடியைத் தேடிய விஷ்ணு காணமுடியாதயர்ந்து மேலேறமாட்டாமல் பரமசிவத்தைப் பஜித்து சந்தோஷிப்பித்து அவரால் மேலேற்றப்பட்டுத் தவம்புரிகின்றார். நானென்றகங்கரித்து இடர்ப்படுமவரைக் கருணையினால் நடுத்தாட்கொள்ளும் பரமர், பிரமருக்கும் அறிவுதந்து ரக்ஷிப்பார்"; இவைகளைக் கேட்டு விஷ்ணு அடியைக்காணவில்லை என்றறிந்து சந்தோஷித்த பிரமர் நல்லெண்ணமும் தீயவெண்ணமும் மனக்களத்தில் போராட அகங்காரம் தவிராதவராய்க் கீழிறங்கி விஷ்ணுவிடம் வந்து நான் இச்சுயஞ்ஜோதிலிங்கத்தின் முடியில் தாழம்பூ நின்றதுகண்டேன் என்று பொய்யுரைத்தார்.

விஷ்ணுவின் துதி:—சுயஞ்சோதி ஞானத்திரள் தாணுவாம் தேவரே! அணுவுக் கணுவும் மகத்துக்கு மகத்துமானவரே! நீரே அகிலத்தின் உள்ளும் புறமும் வியாபித்து நிற்கின்றீர். ப்ரபஞ்சம் உம்முடைய

பொன்னிற் பனிபோன்ற சிற்பவேலை. காற்று உம்முடைய சுவாசம். ஆகமங்கள் உமது திருவார்த்தைகள். அது நீ என்கிற ஆத்மஞானம் உம்முடையது. நீர் ஓங்கார ரூபர். யோகஸ்வரூபர். மேலான ஞானஸ்வரூபர். எது தான் நீர் அல்ல? நிற்பன, நடப்பன, ஆதி, மத்தி, அந்தம் அனைத்தும் நீரே. காலரூபராய் நின்று அனைத்தையும் விளங்கச்செய்பவர்; எல்லாவற்றிற்கும் உடையவர்; ஆஜ்ஞை செய்பவர்; அனுக்ரகிப்பவர்; சிவன்; எங்கும் கண் காது களை உடையவர்; வ்யோமகேசர்; உம்மருட்சக்திப்ரபாவத் தாலேயே பூமி கடலுள் மூழ்கவில்லை; ஜோதிர் மண்டலங் கள் அந்தரத்தில் சஞ்சரிக்கின்றன; அணிமாதி அட்ட சித்தி களும் உம்மைச்சூழ்ந்து சேவித்து ஏவல்கேட்டு நிற்கின்றன; பசுக்க (ஜீவர்க) ளாகிற நாங்கள் பதியாகிற உம்மை மோகத் தால் சம்பத்தில் மறக்கின்றோம்; ஆபத்தில் சரணடைகின் றோம்; அகங்கார கோபங்களை விட்டவர் உம்மை எப் போதும் பார்க்கின்றார். அவைகளைப் போக்குவதற்காகவே பக்குவமுடையவர்க்கு பக்தியை அளிக்கின்றீர்; யோகியர் உமது * காலை தியானித்து ஒன்றான பூரணத்தைக் கண்டதிசயிக்கின்றனர். மோகத்தையும் ஞானத்தையும் பந்தமோக்ஷங்களின் பொருட்டு வகுத்தீர். பக்தனாகிற எனக்குக் காலைக் காட்டாமல் மறைத்து எங்ஙனம் பிரம னுக்கு முடியைக் காட்டினீர்? எதிர்நின் றருளிச்செய்ய வேண்டும் கவலைநெருப்பைத் தணிக்கும் கருணைவெள்ளமே! என்றிறைஞ்சி வேண்டி நின்றனர்.

பரமசிவ தரிசனம்:—அக்கணமே அச்சோதித் தம்பம் பிளக்க உள்ளிருந்து உரையுணர் விறந்து தன்னை உணர்பவர் உணர்வினூடே கரையிலா வின்பவெள்ளம்

---

* கால்-நாலிலொருபாகம், பாதம்.

பொழியும் கருணைமுகிலாம் பரமர் செவ்வானத்திடையே வந்துதித்த சந்திரன் போல ஒளியுள் ளொளியாய்த் தோன்றி வெள்ளியங்கிரிபோன்ற வெள்விடைமீது செப்பவள வெற்பில் வெண்ணிலவை உருக்கி வார்த்தது போல உடம்பெங்கும் திருநீறொளிர நீல கண்டமும் நீள் திரிசூலமும், புலியதளாடையும் புனற் செஞ்சடையும், காமனைப் பொடித்த நெற்றி விழியும், காலனைக் கடிந்த சீல பாதமும், இடக்கையி லுடுக்கையும் கடுக்கை மாலையும், அரவாபரணமும் அபய கரமும், வரதக்கையும் வாண்மதி முடியும் ஒளிர, ஆரணரு நாரணரும் காண முப்புரமெரித்த நகைமுகத்துடன் எதிர் நின்றருளச் சமீபித்து வணங்கித் துதித்துக் களித்துநின்ற நாரணருக்கபயந்தந்து, விஷ்ணுவே! ஜயித்தீர்; ஆதலால் நீரே பெரியவர் என்றனுக்கிரகித்தனர். ஆதலால் அரிபரந்தாமர் அளப்பரிய ஆனந்தக் கடலுளமுழுந்தி தம்மை மறந்திருந்தனர்.

பிரமர் துதி:—தம்வினை தம்மைச்சுட பிழை புணர்த்த பிரமர் வெட்கிப் பயந்து தூரத்தில் நின்று வலம் வந்து வந்தித்தெழுந்து நான்கு முகங்களாலும் துதிக்கத் தொடங்கி கருணைக்கடலே! கோபந்தணிக; எந்நீர் நதிகளுக்கும் கதியான ‡ முந்நீர் வெந்நீராகிக் கொதித்தால் விளாவி ஆற்றுவதற்குத் தண்ணீருமுண்டோ? நும்மருட் சக்தியின் ஒருகலையால் அகிலாண்டங்களையும் தரித்து நிற்கின்றீர்; பசுபதியாகின்ற நீர் பசுக்களாகின்ற எங்களை பாசத்தாற் கட்டிவைக்கின்றீர், அருளால் அவிழ்த்துவிடுகின்றீர்; நும் முடியை அகங்காரத்தா லறியவெண்ணினேன் மனிதனிலும் கடைப்பட்ட அறிவிலாப் பறவையானேன்; எனக்கு இதைக்காட்டிலும் வேறு தண்டனை

‡ முந்நீர் - சமுத்திரம்.

யும் வேண்டுமோ? எந்த தேஜஸின் சன்னிதிமகிமையால் புத்தி, சூரியன் இவை உலகத்தை ஒளிர்விக்கின்றனவோ அந்த தேஜோரூபமான இந்த மூலலிங்கத்தை அத்தியாத்தமநேத்திர முடையவர் காண்கிறார்; உம்முடைய வைபவத்தைத் துதிக்கமாட்டாமல் வேதங்கள் தூரத்திலேயே அயர்ந்து நின்றுவிடுகின்றன; உயர்ந்தன வனைத்தினும் உயர்ந்த நும் வான்பதம் என்போல் நிமிர்ந்துயர்ந்தவருக்கு எட்டுவதில்லை; விஷ்ணுவைப்போல் தாழ்ந்து தலைகுனிந்து வணங்கினவருக்கே எட்டுகிறது; இது ஆச்சரியம்! உம் கருணைவெள்ளத்தின் திவலை அணுவுக்கணுவாயினும் எவனிடத்தில் தங்குகிறதோ அவன் மகத்துக்கு மகத்தாகிறான்; எனவே, உம்மைக்காட்டிலும் பெரியவரில்லை, உம்மையடைந்ததால் என்னைக்காட்டிலும் பெரியவனும் யாருமில்லை; அநந்நிய பக்தியோகிகளால் நும் அகண்டாநந்தஸ்வரூபம் உள்ளிலும் வெளியிலும் அநுபவிக்கப்படுகிறது; அகங்காரமென்னும் புரைச்சிரங்கால் வீங்கிய உடற்சுமைகொண்டவரை ரணவைத்தியன்போல இடர்ப்படுத்தி குணப்படுத்துகின்றீர் என்றிப்படி பலவாறுகப் பன்னி அடியேனை அடிமையாய்க் கொண்டு பிழைபொறுத்தாண்டருளும் ஆண்டவரே! என்று அடிக்கடி நமஸ்கரித்துக் கைகூப்பி வணங்கி நின்ற அவரையும் அழைத்து அருகிருத்திக் கருணைபாலித்து இருவர்க்குமொருவர் உபதேசிக்கத் தொடங்கினார்.

• பரமசிவ வாக்கியம்:—குமாரர்காள்! உங்கள் பக்திக்கு உளமகிழ்ந்தே இத்தலத்தில் உதித்தோம்; வேண்டிய வரங்களைக் கேளுங்கள்.

விஷ்ணு பிரமர்களின் பிரார்த்தனை:—அரி அயர்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்கிற தேவதானவ கந்தருவர்கள்

தடைபுறாதபடி இந்த தேஜஸ்தம்பத்தை உட்காந்து ஒரு குன்றுவடிவாகி சோணாசலம் என்கிற பெயருடன் இங்கு அமர்ந்தருளி பக்தர்களை அனுக்ரகித்துக் கொண்டிருக்க வேண்டும். அக்குன்றிற்குக் கிழப்புறம் நாங்கள் அபிஷேக ஆராதனை செய்து வணங்குதற்குரிய லிங்கவடிவாய் எழுந்தருளவேண்டும் எனலும், அவ்வாறே குன்றும் லிங்கமும் தோன்றக்கண்டு ஆனந்த மடைந்தார்கள்.

பரமசிவ உபதேசம்:—ஆரண காரணர்களே! கண்ணுக்குக் கண்ணாகவும் மனதுக்கு மனதாகவும் வாக்குக்கு வாக்காகவும் உயிருக்குயிராகவும் உணர்வுக்குணர்வாகவும் அணுவுக்கணுவாகவும் மகத்துக்கு மகத்தாகவும் நாமே நின்று உங்களையும் எல்லாஜீவராசிகளையும் நடத்தி, கட்டையிற் கனல்போலவும் பாலில் நெய்போலவும் இந்திரியங்களுக்கு அகோசரமாய் உட்புகுந்து எல்லாக்கருமங்களையும் செய்விக்கின்றோம். எனவே, உலகுயிர் பூத்துவிரிகின்ற வினைமுதலாகிய எம்மை அறிவாலறிந்து கர்த்ருத்வ அபிமான அகங்காரங்களை விட்டு உங்களுடைய ஆக்கல், அளித்தல் தொழில்களை நிரபேக்ஷகர்களாய் நடத்தி வருவீர்களாக. இருவிழிகளும் இரவியின்றி பயன்படாதது போல நும் இருவரின் வினைகள் யாமின்றி பயன்படமாட்டா. உலகில் சந்திரன் முதலிய ஒளிப்பொருள்கள் சூரியனிடத்தி லிருந்தே ஒளிபெறுதல்போல எல்லாத்தலங்களும் இவ்வருணாசலத்தினின்றே ஒளிபெறுவனவாம். இம்மலை சிவப்பு நிறமாயிருப்பதாலும் முத்தியைத் தடையறக் கொடுப்பதாலும் அருணாசலம் என்று பெயர் பெறும். பிறப்பிறப்பென்னும் மயக்க நோயை அகற்றுவதால் மலைமருந்து என்றும் பெயர். யுகாந்தத்திலும் நசிக்காத போககாரணமான தைஜஸலிங்கம் அருணகிரியே யாகும்.

எம்மைச்சூழ மூன்றுயோசனை தூரம் சுத்த பவித்திரமான ஞானத்தலமாகும். இச்சோதிமலையைக் கண்டவுடன் தீவினையனைத்தும் தம்மைச்சுடுமென்று பயந்து திகந்தங்களில் ஓடி ஒளிக்கும். அருணாசலமாம் எம்மை எண்ணலாலன்றி எண்ணிலாக் கல்வி கேள்விகளாலும் சூரிய மதியாலும் அறிய முடியாது. ஒன்றான கிரியுருவ சோதிலிங்கமாய் இப்பூவுலகில் இத்தலம் தவிர மற்றெத்தலத்திலும் அமர்ந்தோமில்லை. சோமசூரியாக்கினி முச்சுடரையும் மும்மறையையும் மும்மூர்த்தியையும் மூன்று கோணமாய்க் கொண்ட மனோகரமான மலையுருவாய் மூவுலகத்தையும் ரட்சிப்பதற்காக இத்தலத்தில் அமர்ந்தோம். முக்குற்றங்கடிந்து முக்குணங்கடந்த முனிவர்கள் முக்கரணங்களாலும் இக்கிரியை முக்காலத்திலும் வழிபடுவர். பஞ்சபூத பஞ்சகோச பஞ்சேந்திரிய பஞ்சப்பிராண பஞ்சாவத்தைகளின்மேல் அகாரத்தைப் பீடமாக ஏறிய பஞ்சாக்ஷர வடிவான அருணாசலம் என்கின்ற ஐந்தக்ஷரங்கொண்ட நாதாத்துமக சதாசிவரூபியாய் பிராணிகளுக்கு பஞ்சம கதியை அளிப்பதற்கு இங்கு எக்காலமும் தங்குகின்றோம். அருணாசலம் என்று ஒருதரம் உச்சரித்தால் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடி உச்சரித்த பலனுண்டாகும். அஷ்டாங்க யோகிகளாலும் அஷ்டசித்திகளாலும் சூழப்பெற்று அஷ்டகோண அஷ்டமூர்த்தி வடிவாகி, நினைப்பவர் இஷ்டத்தைத்தர கிரியுருவாய் நிற்கின்றோம். கிழக்கில் நின்று இந்திரன் கண்ணாயிரங்கொண்டு இமையா நாட்டத்துடன் இவ்வற்புத சோதிலிங்கத்தை என்றும் கண்டுகொண்டிருப்பன். கங்கையில் தினந்தோறும் மூழ்கினும் போகாத மும்மலவழுக்கு விண்ணவர் பணியும் இவ்வருணாசலத்தை நினைத்தால் நீங்கும். விண்முதல் ஐந்துபூதங்களும் கெட்டாலும் தான்கெடாது சலிப்பற்ற அருணாசலம் தன்னை

நினைத்தவரின் ஊன் உயிர் உள்ளம் உணர்வென்னு மிவை
களைக் கெடுத்துத் தானாக்கித்திர்க்கும். நேசித்தவர் நெஞ்
சில் கருப்பஞ்சாறெனத் தித்திக்கும் அருணகிரியை எப்
பிறப்பில் ஒருக்கால் கண்டவரும் அப்பிறப்பிலேயே சிவ
ஞானியாவர். அருணாசலத்தை எவன் ஒருதடவை கண்
குளிர தரிசித்தானோ அவனுக்கு இக்கரும உலகில் செய்ய
வேண்டிய கருமம் ஒன்றும் மிச்சமில்லை. இம்மலையை நினைந்
திருப்பவர் கருங்கடாவின் பிடரியிலேறிவரும் காலனையும்,
பிரமனையும் மதியார். இத்தலத்தில் பண்ணிய தவம்
பழுதறப் பலிக்கும். அன்பர் மனத்துணையாம் அருணை
மலையை நினைத்தவர் துட்டமனம் பின்னிட்டோடிக்
கெடும். அக்கினி தன்னை அடைந்தபொருளை அழுக்க
கற்றித் தன்னுருவாக்குதல் போல அருணாசலம் தன்னை
அடைந்தவரை ஆணவமலத்தைத் தீர்த்துத் தன்சொருப
மாக்கும். நேய நிமல வுருவாம் அருணாசலத்தை அந்தரங்
கத்தில் சிந்தித்தவர் கரதலாமலகம் போல ஞானக்கண்ணால்
எம்மைக் காண்பர். அமிர்தசஞ்சீவியாம் அருணாசலத்தின்
மேல் மோதிய காற்றானது எங்கெந்த திக்குகளைச்சென்
றடையுமோ அங்கங்குள்ள சராசர மனைத்தும் சிவஞான
முத்தி பெறும். எம்மிடம் அன்புகொண்டு கருதரிய தவத்
தைச்செய்த முனிவர்களை அத்தவத்தின் பயனாகச் சகடக்
கால்போலச் சுற்றிவரும் இருவினைகளைந்து இடும்பைப்
பிறவிநீக்கி முத்தியிற் சேர்ப்பதற்கு இத்தலத்தில் பிறக்கச்
செய்வோம். உணர்வு விழிகொண்டு இதயத்தில் எம்மைத்
தாமாக நாடும் ஞானத்தபோதனரை ஊசியைக் காந்தம்
போல இங்கு இழுத்துக் கொள்வோம். விருக்ஷம் வேண்
டியவர் வித்தினைக் கொள்ளுதல் போலவும், ஞானம்
வேண்டியவர் இதயத்தை அடைதல் போலவும், எம்மை
அடையவேண்டியவர் ஆராத வின்பம் அருளுமலையாம்

அருணாசலத்தை அடையக்கடவர். தென்றலை யடைந்தவர்க்கு விசிறி அவசிய மில்லாதது போல அருணாசலத்தை அடைந்தவர்க்கு ஆடம்பர கர்மம் அவசியமில்லை. இக்கிரியை வலம்வந்து வணங்குபவரின் விதியெழுத்தைத் துடைத்து போகஞான கல்விச் செல்வங்களை இம்மையில் தந்து மோக்ஷமளிப்போம். அருணகிரியை தூரத்தில் நின்று தரிசித்தவர் பாவிகளாயினும் புண்ணியவான்களாகி என் சமீபத்தில் எக்காலத்திலுமிருப்பர். தவத்தால் சித்திபெற வேண்டியவர் இத்தலத்திலிருந்து எங்கும் செல்லலாகாது. நீங்களிருவரும் விக்ரகரூபிகளாய் இத்தலத்தில் எந்நாளும் எம்முடன் வசிக்கக்கடவீர்கள். இங்கு எமதன்பர்களுக்கு செய்யப்படும் அன்னதானம் வஸ்திரதானம் வித்தியாதானம் முதலிய தருமங்களுக்கு ஒன்றுக்கு அனந்தபலனுண்டாகும். உங்களுக்கு ஞானம்பெற அருளிய மனோலய விளக்கின் மங்களஜோதியாய் உலகத்தவர் மோகவிருள்நீங்கி உணர்வடைந் துய்யும்வண்ணம் வருடந்தோறும் கார்த்திகைமீ கிருத்திகை நட்சத்திரத்தில் இம்மலை சிகரத்தில் தரிசனம் தந்தருள்வோம் அவ்விருஞ்சுடரைத் தரிசித்தவர் பாஞ்சுடரேயாவர்.

நாரண நான்முகர் வழிபாடு:—மலைக்குக்கீழ்ப்புறம் தோன்றிய சுயம்புலிங்கத்திற்கு அழகிய ஆலயம் சமைத்து தத்தம் பெயரால் தீர்த்தங்கள் உண்டாக்கி மூழ்கி காமிகாகம விதிப்படி அர்ச்சித்து வணங்கி அருணபுரி என்கின்ற நகரமும் நந்தனம்போன்ற சோலைகளும் நிருமாணஞ்செய்து எல்லாமந்திரங்களிலும் அதிகமான அருணாசலம் என்கின்ற மந்திரராஜத்தை இமைப்பொழுதும் இடைவிடாமல் அநேககாலம் அகமுறச் செபித்துத் தவம்புரிந்து அலையுமனக்கருக்கலுக்கு அவியா விளக்காம் கார்த்திகை

தீபத்தை ஆண்டுதோறும் தரிசித்து கிருதகிருத்தியராகி ஸ்ரீசவாகிசரிருவரும் கிரீசரிடம் விடைபெற்று அவராணையைச் சிரமேற்றாங்கிப் பறவைவாகனங்களின்மீதேறித் தத் தம் பதிகளுக்குப்போய் காரியாதிகாரிகளாயினர்.

கைலாசாதி மலைகளில் வசித்த சித்தர் முனிவர் யாவரும் அடியவர்க்கு விருந்தாம் அருணாசலத்தை அடைந்தனர். கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாம் இத்தலத்திற்கு வந்து குவிந்தன. தேவர், கந்தருவர், யக்ஷர், தானவர் முதலாயினோர் மானிட வுருவந்தாங்கி இந்நகரில் மறைந்து வசிப்பாரானார். சிவகணங்களெல்லாம் அன்பு கொண்ட அடியாராகி நர வேடங்கொண்டு இங்கு மலையிலும் நகரத்திலும் வசிக்கின்றனர். கௌபீன குண்டலங்களுடன் சித்தவேடங் கொண்ட பகவான் சங்கரர் கைலையங்கிரியில் விருப்பமற்று அருணகிரியோகி *என்ற திருநாமத்துடன் தீனதயாளுவாய் ஞானயோகிகளுடனே எக்காலத்திலும் அருணாசலத்தில் வசிக்கின்றார்.

கிரிப்பிரதக்ஷிண மகிமை:— காலகாலரான மகேசரை எக்காலத்திலும் பக்தியுடன் அர்ச்சித்து அவரருட் கடலிற் குளித்து மதிவலியால் விதியெழுத்தைத் துடைத்த மார்க்கண்டேய! இத்தலத்தில் கௌதம முனிவரின் தவத்திற் குகந்து அருணாசலேசரே எதிர்நின் றுபதேசித்த கிரிவல மகிமையைச் சொல்லுகிறேன் என்று நந்தீசர் உரைக்கலுற்றார்.

மகேசர் வாக்கியம்:— இந்திரனுக்கு இமையார நாட்டமாயிரந்தந்த கௌதமனே! சிந்தை திருந்திய அன்பர்

---

* முதற்பக்கம் பார்க்க.

மனமே கோயிலாக்கொண்ட நாம் சோணசைல ரூபமாய் அவனியில் ஒளிர்கின்றோம். தேவர் முனிவர் சித்தர் யாவ ரும் எம்மைச்சூழ்ந்து நின்று வந்திக்கின்றனர். முற்பிறப்பு களில் எந்தெந்த பாவங்கள் செய்யப்பட்டனவோ அவை யனைத்தும் கிரிவலம் வருபவர் அடிவைப்புதோறும் நசிக் கின்றன. குறைந்த ஜன்மகுணமுடையவனாயினும் நியம மின்றி சந்திரசேகர கிரியை வலம் வருவதால் பிரயாச மின்றியே சித்தியென்னும் பெரும்பேற்றை ஏன் அடைய மாட்டான்? ஓரடி வைப்பால் பூவுலக வின்பத்தையும், ஈரடி வைப்பால் சுவர்க்கலோக சுகத்தையும், மூவடிவைப்பால் சத்தியலோக ஆனந்தத்தையும் இக்கிரி வலத்தால் மனிதன் அடைகிறான். ஒன்று இரண்டு மூன்றடி வைப்புகளால் மனம் வாக்கு காயங்களால் செய்த பாபங்கள் முறையே நசிக்கின்றன. பிறவிப்பிணிக்கு அருமருந்தாம் இம்மலையை ஒரு முறை வலம்வருவதால் எல்லாப்பாதகங்களும் நசிக்கும்; இருமுறை வருவதால் எல்லாத் தவவிரத பலன்களும் கைகூடும்; மும்முறை வருவதால் பழமலப் பற்றொழிந்து சிவஞானம் சித்திக்கும். அருந்தவ முனிவர் சித்தர்களுடைய பர்ணசாலைகளும் தேவர்களுடைய இருப்பிடங்களும் எண் ணிறந்தவை இக்கிரியை சூழ்ந்துள்ளன; அவர்களால் பூஜிக்கப்பெற்று எல்லாம்வல்ல சித்தராஜராய் அவர்களி டையில் எக்காலத்திலும் இக்கிரியில் வசிக்கின்றோம். எம் மிடத்திலுள்ள குகைகள் ஞானயோகிகள் நிரந்தரம் வசிக் தற்குரியன. அக்கினித்தம்ப மயமான அருணாசலம் என்று ப்ரசித்திபெற்ற எம்முடைய பேருருவத்தை தியானத்தவ ராய் பையநடந்து வலம்வருக. அஷ்டமூர்த்திமயமான இந்த பேரொளித்தம்பத்தை தியானித்து வலம்வந்து பாவக் கூட்டங்களை எரிக்கக்கடவர். இதை வலம்வருபவர் மறுபடி யோனிவாய்ப் படாதவராய் அருணாசல ரூபத்தை யடைந்து

நித்தியத்துவத்தை நிச்சயம் அடைவர். எவன் அருணாசல ப்ரதக்ஷிணத்தில் ஓடியாவது வைப்பானோ அவனுடைய பாததூளியைத் தீண்டுவதால் உலகமே பரிசுத்தமாகிறது. முழுகிச் சுத்த உடையுடுத்தி பூதிகண்டிகைபூண்டு பஞ்சாக்ஷரத்தை ஜபித்து திக்குகள் தோறும் வணங்கி துதித்து தியானித்து கைகளைத் தொங்கவிடாமல் குவித்தவனாய் பத்துமாதத்திய கர்ப்பவதி நிறைகுடத்தைத் தலையில் வைத்து இருகாலிலும் தளைபூண்டு நடப்பதுபோல் காலடி சத்தப்படாமல் ஞானவானுயுள்ளவன் மெல்ல அடிவைக்கக்கடவன். ஸித்தரும் காற்றுருவான மருத்துக்களும் கண்ணுக்குப் படாமல் மறைந்து சுற்றுகின்ற இக்கிரியை வலம் வருகின்ற எண்ணற்ற தேவர் மனிதர்க்கு அனுகூலமாக வழிமறிக்காமல் பக்கனாகி ஒதுங்கி மெல்ல அடிவைத்து நடக்கவும். சுருதி லயத்தோ டுயர்ந்த பாடல்களுடனாவது, அன்றேல் சிவநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு பக்தர் குழாத்துடன் சிவார்த்தனம் பண்ணிக் கொண்டாகிலும், அலையாத மதியுடையவனாய் என்னுடைய மகிமையைக்கேட்பதனாலுண்டாகிற ஆனந்தானுபூதி ரஸாவேசத்தால் மயக்கமுற்றாகிலும் மெல்ல வலம்வருக. வேண்டிய வேண்டினார்க்குக் கொடுத்துக்கொண்டும், உபகாரச் செயல்களைச் செய்துகொண்டும் தயை நிறைந்தவனாய் ஆஸ்திக புத்தியுடன் ப்ரதக்ஷிணஞ்செய்க. என்னை அக்கினி, ரத்னம், சுவர்ணம், மாரகதம், ஸ்படிகம் இவைகளுள் ஒன்றாலான கிரிலிங்கமாகப் பாவித்து வலம்வருக. எவன் என்னை அப்ரமேயனாகவும், வாக்குமனங் கடந்தவனாகவும், நெருங்க முடியாத அக்கினிலிங்கமாகவும் எண்ணி வலம் வருகிறானோ அவனுக்கு யான் முன்னிற்பேன். அவனுடைய பாததூளி மாந்தரின் ஜராமரணங்களைப் போக்குவதற்குக் காரணமாய் நிற்கும். வலம் வருங்கால் என்னுடைய உண்மையான

ஜோதி தேஜோரூபத்தை மறவாமல் எவன் என்னுதிருனே அருணாசலப்ரதக்ஷிணஞ் செய்த அவன் தாளைச்சுமப்பதற்கு ஐராவதம், புஷ்பகம் முதலிய தேவவாகனங்கள் போட்டி போடுகின்றன; கற்பக தருக்கள் நிழலைத்தருவதற்கு இவன் வரவை எதிர்நோக்கி நிற்கின்றன. அருணாசலனும் என்னை வலம் வருபவரைத் தேவர் கந்தருவர் முதலியவர் கோடிக் கணக்கான விமானங்களில் ஆகாய வீதியில் வரிசையுற நின்று தரிசித்து வேண்டிய வரங்களைத்தாமே வழங்கு கின்றனர். அங்கப்ரதக்ஷிணஞ் செய்பவர் அசைக்கப் படாத வஜ்ரசரீரிகளாய் கணத்தில் என்னுடன் ஒன்றுவர். ஆதித்தியர் முதலிய நவக்கிரகர்கள் என்னை தினந்தோறும் வலம் வருவதால் விண்ணில் மண்டலாதிபராய் விளங்கி உலகை ஆள்கின்றனர். அருணகிரியை, ஆதிவாரத்தில்வலம் வருபவர் சூரியமண்டலத்தையும் பேதித்து சிவபதமடை ந்து முத்தராவர்; சோமவாரத்தில்...ஜராமரணமற்றவராய் சாந்தியடைந்து உலகில் எல்லாம் வல்ல சித்தராவர்; மங்கள வாரத்தில்...உடற்பிணி, வறுமைப்பிணி, பிறவிப்பிணிக ளற்றவராய் சலனமற்ற சார்வபௌமராவர்; புதவாரத்தில்... எல்லாக்கலைஞானங்களையு மறிந்து வாக்குவல்லவராய் ஞான பண்டிதராகி கைவல்லியமடைவர்; குருவாரத்தில்...தேவர் களால் வணங்கப்பெற்றவராகி மூவுலகிற்கும் ஞானசாரிய ராவர்; சுக்கிரவாரத்தில்...இகத்தில் திருமகள் விலாசமுடை யவராயிருந்து விஷ்ணுபதமடைவர்; சனிவாரத்தில்...துட்ட கிரகபீடைகளினின்றும் விடுபட்டவராய் எல்லாவுலகங் களையும் ஜயித்து மேன்மையடைவர்.

என்னை வலஞ்செய்வார்க்கு எல்லா கிரகங்களும் நாட் களும் நல்லனவாகி நற்பலனையே தருவனவாம். ப்ரதக்ஷிணம் என்பதில் ப்ர-என்பது எல்லாபாபங்களையும் நசிப்பிப்பது;

த; இஷ்டபலனைத்தருவது; க்ஷி, ஊழ்வினையையொழிப்பது; ணம், ஞானமுக்தியைத் தருவதென்று பொருள்படும். உடற் பிணியாலும் மனோவேதனையாலும் வருந்தியவர் இக்கிரிவலத் தால் அவற்றினின்றும் விடுபடுவர். ராஜ்யமிழந்த அரசர் பலர் என்னை வலம்வந்து மறுபடி அரசிருக்கையில் நிலைத்தனர். உத்தராயணத்திற்கு ரவி வருந்தினத்தில் மூவுலகமும் சுகப் படுவதற்காக ப்ரமதகணங்களுடன் என்னுருவான இந்த கிரியை நானே வலம் வருவேன். தேவர் முனிவர்க்கும் வலம்வர இச்சமயம் வாய்ப்பதரிது. பக்தியுடன் என்னை வலம் வரும் அரசரின் பகைவரை நானே முன்னின்று ஜயிக்கிறேன். சைவாசாரத்திலிருந்து வழுவியவராய் வாக னத்திலேறியும் குடை பாதரக்ஷைதரித்தும் அறிவுள்ளவர் ஒருக்காலும் கிரிவலம் செய்யக்கூடாது. முன்னொருக்கால் தர்மகேது என்கிற அரசன் குதிரையிலேறி என்னை வலம் வந்தான். அக்குதிரை அரசனைக் கீழ்வீழ்த்தி கணத்தில் கணநாதனாய் நிற்கக்கண்ட அவ்வரசன் அஞ்சி தானும் முறைப்படி நடந்து வலம்வந்து சிவகணாதிபனானான். அது முதல் விஷ்ணுப்ரம்மேந்திராதிதேவர்கள் எல்லாரும் வாகனங் களின்றி நடந்து வலம் வரலானார்கள். புண்ணியம் தேய்ந்து சுவர்க்கத்திலிருந்து இத்தலத்தில் விழுந்த சித்தனொருவன் அருணாசலத்தை வலம்வந்து சுவர்க்கத்திலேறி நிலைபெற்றான். என்னை வலம் வருவதாற் காலிற் கசியும் உதிரத்துளிகளை இந்திரனுடைய மவுலியிலணிந்திருக்கும் மந்தாரமாலையிலுள்ள கேசரங்கள் துடைக்கும். கௌதமப்பெயர்வாய்ந்த முனிக் கரசே! நெடுநாட்கழித்து உமாதேவி ஆச்சரியமான தவ மியற்றுவதற்கு இங்கு வருவாள். என்னிடமிருந்து கேட் டபடி அருணாசல மகிமையை அவளுக்கு உரைக்கக்கட வாய். பிறகு கௌரி அருந்தவமியற்றி கார்த்திகையில் உக்ரமான கிருத்திகை நட்சத்திரத்தன்று ப்ரதோஷ

ஸமயத்தில் என்னுடைய ஜோதியை வேண்டி தரிசித்து கிரிவலம்வந்து பரிசுத்தையாகி அபீதகுசாம்பிகை என்கிற திருநாமத்துடன் என்னுடன் கலந்திருப்பள். அக்காலத்தில் தேவ ரிஷி ஸித்த கந்தருவ யக்ஷ ரக்ஷ சாரண மானவரெல்லாரும் எல்லா ஜந்துக்களுடன் கூடி தரிசித்தானந்தமடைவர். மறுதினம் உலகத்தின் மங்களத்தின் பொருட்டு கௌரி சமேதனாக கிரிப்ரதக்ஷிணம் செய்வேன். அந்த தினத்தில் எம்முடன் வலம் வரல் அருந்தவமில்லாதவர்க்குக் கிடைத்தலரிது. மனம் வாக்கு காயமென்னும் முக்கரணங்களும் ஒருமித்தியற்றும் தொண்டாகிய எமக்குகந்த அருணகிரிப்ரதக்ஷிணத்தால் போகமோக்ஷமென்கிற உபயப்ரயோஜனமுண்டாம்.

கிரிவல உண்மை:—எந்த பரமான்மாவின் மகாசக்தி அருள் வெளிக்குள் பிண்டாண்ட ப்ரபஞ்சங்கள், மின்சார யந்திரசக்தியால் சுழற்றப்பெற்ற உருளைகளைப் போலச் சுழல்வனவாய் நிலைபெறுகின்றனவோ அந்த மூலப்பொருளை தன்னுள் கண்டறிந்து அதன் அருள் வசப்பட்டிருத்தலே கிரிவலஞ் செய்வோருக்குச் சேர்ந்தபயன்.

தத்துவார்த்தம்:— ஸுலோகம்.

ஸ ஏஷ ஜீவ: பரமாத்மஸம்ஜ்ஞக:
ப்ராணேந கோஷேண குஹாம் ப்ரவிஷ்ட: |
மநோமயம் ஸூக்ஷ்மமுபேத்யரூபம்
மாத்ரா ஸ்வரோ வர்ண இதி ஸ்தவிஷ்ட:||

(இ—ள்) அந்த பரமாத்மா என்னும் பெயருடையவர் (கிரணரூப) இந்தஜீவனாகி ஒலிக்கின்ற ப்ராணனுடன் (இதய) குகையுள் நுழைந்து மனோமயமான ஸூக்ஷ்மரூபத்தை யடைந்து மாத்திரை ஸ்வரம் எழுத்தென (ஆகி) மிகத்தடித்தனர்.

எனவே வாக்கு, மனது, ஜீவான்மா என்பதும் விசுவன், தைஜஸன், ப்ராஜ்ஞன் என்பதும் பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்பதும் பரமாத்தும துரிய சிவத்தின் கிரணங்களேயாகும். ரவிகிரணங்கள் சூரியமண்டலத்தை ப்ரவேசிக்காததுபோல, அஹங்காரத்தால் இரண்டாய்ப் பிரிந்து வாதுபுரிந்த விஜ்ஞானபதியாகிற விஷ்ணுவும், வாக்பதியான பிரமாவும் அதாவது அகங்காரத்துடன்கூடி ததித்த மனதும் வாக்கும் அந்த ஆதியந்த மில்லா அறிவு பரஞ்சுடரின் அடிமுடிகளை ப்ரவேசித்து அறிய முடியவில்லை என்பதே அருணசல மூர்த்தியின் முக்கிய தத்துவம். உந்திக்கமலத்துதித்து வாக்கை நாக்கில் தரித்த நான்முகர், சொல்லும் பொருளுமான நாமரூபாத்துமக பிரபஞ்சகர்த்தா நானென்றகங்கரித்தார். புந்திக்கமலத்துதித்து இந்திரியங்களை ஒளிர்விக்கிற செங்கமலையை மார்பில் தரித்த ஹ்ருஷிகேசர் (அதாவது இந்திரியங்களுக்கு அதிபதி, புத்தி வடிவினரான விஷ்ணு) சங்கற்பத்தில் நிலைபெற்று வளரும் பஞ்சபூத பஞ்சேந்திரியாத்துமக பிரபஞ்சரட்சகர் நானென்றகந்தை கொண்டார். இருவரின் வாதப்ரதிவாதங்களுக் கிடையில் இதய குகையில் தகராகாசமாய்த் தானாக நின்றொளிரும் வாக்கு மனங்கடந்த துரிய பரமசிவத்தின் முடியடிகளை இருவருள் முன்புகண்டவரே பெரியவர் என்று தம்முள் நிச்சயித்தனர். ததித்த அகங்காரத்தைத் தன்னுருவாய்க் கொண்ட வராகமாகிய ஹ்ருஷிகேசர் தமது கூரியமுகமாகிற ஆலோசனையுடன் கூடிய பாவனுயோகத்தால் உள்ளுக்குள் அந்தக்கரணத்தினடியில் ஆராயத்தொடங்கி, கண்டனவல்லவென்று கழித்துச்சென்று தேய்ந்து, கருவிகரணங்கள் ஓய்ந்து, அதீதமான பாவத்துவைக் காணும் வகையின்றி தன் முயற்சியற்று அகங்காரம் கழன்று சும்மாவிருந்தார். உணர்வை சொற்றொடராகக் கொண்

டெழவல்ல பராமுதல் வைகரியீறாகவுள்ள நான்கு முகங்களைக்கொண்ட வாக்குவடிவினரான பிரமர், அஜபை மந்திர ஹம்ஸ ரூபங்கொண்டு கேசரி முத்திரை யோகத்தால் ஆதாரசக்கரங்களைக் கடந்து மும்மண்டலங்களுக் கப்பாற் சென்று ஆஜ்ஞாத்தலமாகிற நந்தியொளி பூணும் லலாடத் தானத்தில், சுழிமுனைநாடியுள் தோன்றி மறையும் கேதகி புட்ப வடிவான சோதியைக்கண்டு அங்குறைந்த மண சாக்ஷி வடிவினரான சித்தர் காணவில்லையென் றுரைத்தும் கேளாமல் நான் முடியைக்கண்டேன் என்று பொய்யாய் அகங்கரித்தார். அறிவுக்கறிவாய், எண்ணும் எண்ணங் களனைத்திற்கும் ஆதாரராகி நின்று அவைகளால் அறியப் படாத அருணசலர் அவர் முன்னின்று சுத்த சத்துவமான மனதே ஞானேந்திரியங்கட்குத் தலைமையாய் நின்று அவை களை உள்ளடக்கி அகத்துள்ளாழ்ந்து தேடி நேதி செய்து ஆசங்கையும் அகங்காரமுங்கழன்று சும்மாவிருந்த விடத் தில் தலைவரை யறியுந் தன்மையுடையதாதலின் விஷ்ணுவே அறிந்தார் அவரே பெரியவர் என்றும், கருமேந்திரிய முதலாம் வாக்கிற்கு அறியுந்தரமில்லாமையால் பிரமர் காணவில்லை என்றும், "த்ருச்யஞ்சேத் ஜடமாபவேத்" காணப்படின் ஜடமாம் என்றபடி, கண்டது வத்து வாகாமையால் உரைத்தது பொய்யென்றும் அருளிச் செய்தனர். மோகத்தால் தலைவரை மறந்து நான்கருத்தா வென் றகங்கரிப்பதால் இடரே விளையுமென்பதும், மனது உள்ளுக்குள் ஆராயும் தன்மையுடையதாதலால் விஷ்ணு கீழ்நோக்கித் தேடிச் சென்றாரென்பதும், வாக்கு மேல் நோக்கி யெழுவதால் பிரமர் மேற்சென்று தேடினரெ ன்பதும், வாக்கு மனதுகள் தம்மில் மாறுபடாது மௌனத் தால் ஒன்றுபட்டு அகமுகமாகத் திரும்பி அகண்டசிவோ


கும் என்னும் அகங்கிரகோபாசனையால் உடல் நானென்னும் அஞ்ஞானக்கிரந்தியைப் பேதித்து சும்மாவிருந்தவிடத்தில் "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ" வாக்கு மனத்துடன் சேர்ந்து அடையமாட்டாமல் எதனின்றும் திரும்புகின்றனவோ என்னும் சுருதிப்பொருளான சுயஞ்ஜோதி அருணாசலம் குணம்குறியறத் தானாக பிரகாசிக்கும் என்பதும் இதன் மெய்ப்பொருள்.

தீபதரிசன உண்மை:—உடலே குன்று, உள்ளமே கொப்பரை, நேயமே வர்த்தி, இடையறாத்தியானமே நெய், பிராணனே கர்ப்பூரம், ஞானமே அக்னி, அஞ்ஞான னிருள்கெட இவைகளைப்பொருத்திக்காண்பதே தீபதரிசனம் செய்வதின் திரண்டபயனாகும்.



மூர்த்தி மகிமை

முற்றிற்று.



தேவி மாகாத்மியம்.

முதல் பிரகாணம்.

உண்ணாமுலை அம்மை துதி.

கட்டளைக்கலித்துறை.

கலைதரித் தாருயர் மூவர் களேபரக் கஞ்சுகிவிண்
ணிலைபெறு மூவுல காடரங் காய்நடி நாடகிபின்
மலையுரு வாமரு ணேசன் மகிழு மலைமகள்தண்
ணலையருட் பூரண சிந்து வபீத குசாம்பிகையே.

(கருத்துரை) உயர்ந்தொளிர்கின்ற மூன்றாம்பிறையைச் சிரத்தில்தரித்த சிவனுடையவும், பீதாம்பர வுடைதரித்த விஷ்ணுவுடையவும், சரசுவதியை நாவில் தரித்த பிரமனுடையவும், உடலென்னும் மூன்று வருணச்சட்டைகளை யணிந்து அதாவது இவர்களின் பிராணசத்தியாகி (அகன்ற)

‡கலை=பிறை, பீதாம்பரம், சரசுவதி.

ஆகாயத்திடையில் நிலைத்து நிற்கின்ற மூன்றுலகங்களையும் தனது நாடகமேடையாகக்கொண்டு நாடக நடிக்கின்றவ ரும், ஒளிபொருந்திய பருவதாகாரமான அருணசலேசுவரர் ஆனந்திக்கின்ற கிரிராஜ குமாரியும் குளிர்ச்சி பொருந்திய அலைகளை வீசுகின்ற நிறையருட்கடலான அபீதகுச நாயகி (உண்ணமுலை) யேயாம்.

மார்க்கண்டேயர்:— மனவாசகங்கடந்த வித்தக வேட விமலர் வானோர்க்கும் அரும்பெரும் பதமெனும் அருணசலமாய் அமர்ந்த மூர்த்தி மகிமையைக்கேட்டு பேரின்ப வெள்ளத்திற்குளித்து மகிழ்ந்து சிலாத புத்திரரை வணங்கி தேவி மாகாத்மியத்தை ஆதியோடந்தமாய் உரைத் தருள வேண்டுமென நந்தீசர் சொல்லலுற்றார்.

தாக்ஷாயணி:— பிரமனுடைய பிள்ளைகளுள் தக்ஷ னென்பவன் அரியதவத்தால் பராமாத்தா கிரியாசத்தியை மகளாகப் பெற்று ஸதி (தாக்ஷாயணி) எனத் திருநாமமிட்டு சிவருக்குத் தந்து அகந்தைகொண்டு பரமரை நிந்தித்து கருமமே பரமென்றெண்ணி காமத்தால் அநித்திய மான சுவர்க்கசுகத்தை விரும்பி ஓர் வேள்வி செய்தான். இதையறிந்த தாக்ஷாயணி பதியிடம் விடைபெற்று தந்தை யின் யாகத்திற்குச்சென்று பெற்றோரை வணங்கிநிற்க, பரம ரிடத்திலுள்ள பகையால் தன்னை அநாதரவு செய்யக்கண்டு 'உங்கள் யாகசாலை கொடிய பேய்கள் வாழும் சுடலையாகக் கடவது' என்று சாபமிட்டு யாகாக்கினியில் யோகசக்தி யால் மாயகாயத்தை மறைத்து தனது மூலகாரணமான சிவசொரூபத்தில் ஐக்கியமாயினள். இதுகண்ட தேவர் முனிவர் நடுக்கமடைந்தனர்.

தக்ஷயஜ்ஞவிநாசனம்:— இதையறிந்த சர்வஜ்ஞான முக்கட்கடவுளரின் கோபக்கனலே திரண்டுருண்டு வந்தாலென, நுதல்விழியினின்றும் தம்பத்தைப் பிளந்தெழுந்த உக்ரநரசிங்கத்தைச் சிதைப்பிளக்கும் ஆற்றலுடையவராய் அகோரவீரபத்திரர் உற்பவித்து தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்டு பூதகணங்கள் சூழ யாகசாலையுட்புகுந்து தக்ஷனுடைய சிகையைப்பற்றி கட்கத்தால் சிரத்தைக்கொய்து ஓமகுண்டத்துள் ஜ்வலிக்கின்ற அக்னியில் இட்டனர். வேள்விச்சாலையிலிருந்த ஹவிஸுகளையும், பொரிப்பாண்டங்களையும், நெய்க்குடங்களையும், புரோடாசங்களையும் பூதகணங்கள் எடுத்துத் தங்கள் உதராக்கினியில் ஆகுதிசெய்துகொண்டன. அங்கிருந்த தேவர்முனிவரெல்லாம் பயந்தோடி ஒளித்தனர். இதையறிந்த பிரமர் புத்திரசோகத்தால் பரமேசுவரரிடம் சென்று வணங்கித் தொழுது மகனை யாசித்தலும், யாகசாலைக்கெழுந்தருளி கருணையால் தக்ஷனுக்கு ஆட்டுத்தலையைத்தந்து உயிர்ப்பித்தனர். அவன் எழுந்து விநீதனாய்க் கைகூப்பி அழலிடை மெழுகாய் உருகி ருத்திரசமகங்களால் துதித்து குற்றமனைத்தும் குணமாக்கொள்ளும் கருணைக்கடலே! நஞ்சமும் அமுதாக்கொள்ளும் நாதரே! எத்தனை தீமைகள் இயற்றிடினும் பாசப்பிறவி வேரறுத்து என்னை ஆண்டருளும் ஒப்புயர்வில்லா உத்தமரே! என்று மூவுலகத்துக்கும் தண்ணிழல் தரும் பங்கயப்பாதங்களில் வந்தித்து நின்றனன்.

தக்ஷனுக்குப் பரமர் உபதேசம்:— தக்ஷனே! அற்பமனத்திலெழுந்த காமக்குரோதங்களை முன்னிட்டு நீ செய்த யஜ்ஞபலன் "பச்சை மட்குடத்தில்வைத்த நீர் போல" உன்னையே அழித்து பயன்படாதொழிந்தது. எந்த விப்பிரன் காமத்தால் பசுக்களை வதைத்து யாகம் செய்து புசிக்கிறானோ

அவனை லோகாந்தரத்தில் அந்தப் பசுக்கள் தமது வைரக் கொம்புகளால் குத்தி மாய்த்துப் புசிக்கின்றன. குணபே தங்களுடன்கூடிய கர்மம் அசத்தியமானது. பாமார்த்த ஏகதரிசனத்தில் இவை இல்லை, எங்கிருந்து காமக்குரோதங்கள் உதிக்கின்றவோ அது அவைகளற்றவிடம். செயல் மாண்டு சிந்தை மாண்டவர் உறையும் அந்த இடத்தை மற்ற முதலிய சப்தங்களும் அவைகளாலான கர்மங்களும் விளக்குகிறதில்லை. அங்கிருந்தே சப்தகருமங்கள் உதித்தன. ப்ரவிருத்திநிவிருத்திகள் அங்கு ஓய்ந்துவிடுகின்றன. அது கர்ம சக்கரத்தின் மத்தியில் அச்சுப்போல் தான் சுழலாமல் நின்று ஜீவபாவத்தால் உடலை நானென்றபிமானிக்கிற உன்னை நிற்கவும், இருக்கவும், நடக்கவும், படுக்கவும், உறங்கவும், விழிக்கவும், கருமங்களைச் செய்யவும் செய்கிறது. காணும் கரணங்களெல்லாம் கடந்த காரணமான சங்குல்பநலற்ற அந்த இடம் எமக்குச் சொந்தமானது. முக்கால முக்குணங்களே நெய்; சப்ததாதுக்களே பரிதிகள்; இந்திரியப்ராணமனங்களே இருபத்தொரு சமிதைகள்; நான் என்கிற புருஷனே பசு; எனதென்பதே ஹவிஸ்; இவைகளை உள்ளத்தெரளிர்கின்ற ஞானக்கினியில் ஆகுதிசெய்து கர்மபலமாகிற அவிர்பாகத்தை எமக்களித்து பந்த மற்றவனாய்விடு. ஆதியில் தேவர்கள் இந்த யாகத்தையே விஸ்தரித்தார்கள்; முக்திக்கு இதைத்தவிர வேறுமார்க்கமில்லை என்றருளிச்செய்து வீரபத்திரர் முதலிய கணத்தலைவருடன் பரமர் கைலைக்கெழுந்தருளினர்.

தக்ஷிணாமூர்த்தி:— பகவான் மகேசுவரர் கைலையிலிருந்து இமாசலத்தின் ஓர் பாலுள்ள கானுவனத்திடையில் வடவிருக்ஷத்தடியில் தென்முகம் நோக்கி வீராசனத்திருந்து இச்சையாதி மூன்று சக்திகளையும் உட்கரந்து வாக்குமனங்

கடந்த பூரணராகி ஞானநிட்டையில் அமர்ந்தருளினர். நான்முகருடைய மானச புத்திரரான ஸநக ஸநந்தன ஸநாதன ஸநத்குமாரரென்னும் நான்கு மகாமுனிவரும் எல்லாக் கலைகளையும் படித்தறிந்து அன்னியருக்கு உணர்த்தும் சக்தியைப்பெற்றிருந்தும், யோகசக்தியால் அணிமாவாதி சித்திகள் கைவரப்பெற்றும் மனச்சாந்தி அடையாதவராய் ஞானசாரியரைத் தேடி யலைகையில் காந்தச்சிலையால் கவரப்பெற்ற ஊசிகளென தக்ஷிணாமூர்த்தி சன்னிதி அடைந்து பற்றற்றதன்மையும் பரந்தஞானமும்,நீறுபூண கோலமும் நீள் கோவணமும், புலித்தோலுடையும் புன்சிரிப் பிதழும்,மதிமுக வெழிலும் மலர்ந்த கண்களும், ஒன்றே பொருளென உணர்த்து முறுதியும்கொண்ட ஆலமர்கடவுளை தரிசித்து ஞானதேஜஸின் அரியசக்தியால் அடிமைகொள்ளப் பெற்று காலனையும் கமலத்தையும் வென்ற பாதங்களில் வந்தித்து ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய தத்வத்தை அறிவித்தருளல்வேண்டும் பரமஞானகுருவே! என்று வேண்டி வினவினர். முக்கண் முதல்வர் தொல்லைவினைகெடப் பாசமகல என்பெலாமுருகக் கடாக்ஷித்து சக்ஷுர்தீக்ஷை செய்து உபதேசித்தருளினர்.

ஸநகாதிகளுக்குபதேசம்:— பரமர், முனிபுங்கவரே! ஒரே அக்னி கட்டைகளின் உருவான கனலாவது போல நம்முடைய ப்ரக்ருதிசக்தி மகாப்ராணபீஜரூபியாய் ஆங்காங்கு க்ஷேத்திரங்களில் நானாவிதமாய்த் தாவி பசுவாகி இந்திரிய பலத்தால் விகற்பமுடையதாயிற்று; சத்துவ ரஜஸ் தமமென்கிற குணமுப்புரிகொண்ட நெடிய ஸூத்ரத்தை முதலாவதான நான் என்கிற வல்லமைபெற்ற ஜீவனாகச் சொல்லப்படுகிறது. உள்ளது, இல்லதென்கின்ற இரண்டிற்கும் அப்பாற்பட்ட நமது மகாசக்தியே கர்த்தா, புத்தி,

இச்சை, பொருள், வினை, வினைப்பயன் என்பனவாதி நானாவாய் விரிந்தது. "தீச்சிகை கனலுள் நுழையாதது"போல, ப்ரக்ருதி சக்தியால் விரிந்த ஜீவன், மனது, வாக்கு, கண், ப்ராணவாயு, இந்திரியங்க ளென்னுமிவைகள் நமது ஸ்வரூபத்தை பிரவேசிக்கமாட்டா. மறைகளும்கூட எதனின்று வாக்குகள் நிவ்ருத்தியாகின்றனவோ என்று போதிக்கும் தம்மையே நிந்தித்து வேறானவற்றை நேதிசெய்து நீக்கி எதனுடைய ப்ரபாவமின்றி இதல்லவென்று நீக்குதலும் கூட சித்திக்கமாட்டாதோ என்று தமது மூலத்தை அர்த்தாபத்தியால் அறிவித்து ஓய்ந்தன. அந்தமேலான ஞானாத்மா பிறக்காது. இறக்காது. வளராது. குறையாது. எங்கும் எக்காலத்திலும் நிறைந்து நிற்கும் தன்மையுடையது. எது தோற்றம், இருப்பு, ஒடுக்கம் என்னும் இவைகளுக்குக் காரணமாயிருந்தும் காரண மற்றதோ? எந்த ஒன்று நிலையற்ற நனவு, கனவு, சுழுத்திகளைத் தொடர்ந்தறிவதாய் வெளியிலும் உள்ளிலும் தானாக நிலைத்துநிற்கின்றதோ? எதனிடத்து உயிர்ப்பிச்சை ஏற்று தேகேந்திரியங்களில் எண்ணங்களுலவுகின்றனவோ? முனீந்திரரே! அது நமது மேலான மௌனஸ்வரூபம் என்றறியுங்கள். இந்திரிய மனங்களுடன் கூடிய ஜீவன் மெலிந்து அழுந்தியநித்திரையில் எவ்விடத்தில் சுகித்து வெளிவருகின்றானோ? அவ்விடம் நமது இடைவிடாத சிந்தனைக்குரியது. மனவாசகங்கடந்த அது நமதிருப்பிடம். எதனிடமிருந்து இந்த தேகாதி ப்ரபஞ்சபேதங்கள் உதித்தனவோ அது அபேதமாய் சலிப்பற ஞப்திமாத்திரமாய் நிற்பது; ஸர்வாத்ம பாவத்தால் அடையத்தக்கது; "நாடகக்காரரையும் பார்ப்பவரையும் ஒளிர்வித்து அவரில்லாதபோது தான் மாத்திரம் ஒளிரும் நாடகசாலை தீபம்" போல எது உலகையும், காண்கிறேன் கேட்கிறேன் புசிக்கிறேன் சுவைக்கிறேன் என்னும் அகங்கார இந்திரியங்களையும் ஒளிர்விப்பதாகி

அவைகளின் ஒடுக்கத்தில் தான் மாத்திரம் ஒளிர்கின்றதோ, அந்த நமது மேலானஸ்வரூபத்தில் உடல்நாடி, உரைநாடி, உயிர்நாடி, உளம்நாடி, உணர்வுநாடி, நாணுடி மௌனுனு பவ முற்று சும்மாவிருக்க என்றருளிச் செய்த பரம ஞான குரவருடைய உபதேசத்தைக் கேட்டும் சிந்தை தெளியாதவராய் சங்கித்துக் கொண்டிருந்த முனிவர்பால் இரக்க முற்று, "எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டி" சொல்லாமற் சொல்லும் மவுன முத்திரைதரித்து துரியபரசின்மாத்திரராய் மிஞ்சி தன்னிலையில் அமர்ந்தருளினர். அதனால் முனிவர் வாக்குமனமடங்கி சன்னிதியில் நீண்டகாலம் நிஷ்டை கூடியவராய் ஐயம் திரிபு அறியாமைகளகன்று உணர்வு பெற்று ஆசாரியர் அடிகளில் வணங்கி விடைபெற்று தமதிருப்பிடஞ் சென்றனர்.

பார்வதிதேவி அவதாரம்:— மேருமந்தர முதலிய பருவதங்களுக்கரசனும் ‡ இமவானும், அவன் பத்தினியாகிய மேனகையும் சர்வஞ்ஞான சப்புவின் ஞான சக்தியை புத்திரியாகப் பெறுவதற்கு அருந்தவம் செய்து கொண்டிருக்கையில் அம்பிகை அவர்களிடையில் கோடி சூரியபிரகாசமான குழந்தையாய்த் தோன்றினள். அது கண்டு அக்குழந்தையை வாரியெடுத்து உச்சிமோந்து உள்ளங்குளிர்ந்து நாளொருமேனியாய் வளர்த்துவந்தனர். எந்த மகாசக்தியின் அருள்வெளியில் அண்டகோடிகளத்தனையும் அந்தரத்திற் பம்பரம்போற் சுற்றுகின்றனவோ உலகினுக்குயிராம் அவ்வம்மை பருவமதிபோல் வளர்ந்து அரைவடக் கிண்கிணிகளணிந்து சிற்றுடை யுடுத்திச் சிறுமிகள்போல அம்மானை, சொக்கட்டான், கழங்கு, பந்து முதலியன விளை

‡ இமவான் என்றது இமாசலத்தின் அதிட்டான தெய்வம். இப்படியே மற்ற மலைகளுக்கும் கொள்க.

யாடி, ஆகமமுதலிய நூல்கள் பயின்று, வாகனங்களிலேறி அஸ்திர சஸ்திர வித்தைகள் அப்பியசித்து தாய்தந்தையரை மகிழ்வித்தனள்.

தேவி தவத்திற்கேகல்:— கடலை நாடிய நதியெனப் பரமசிவரையே பதியாக அடையக்கருதிய தேவி பார்வதி பட்டாடை களைந்து மாவுரி உடுத்தி, கருத்தடர்ந்து இடையினும் தாழ்ந்த கூந்தலை வகிர்ந்து தாழ்சடையாக்கி அழகிய நெற்றியில் கஸ்தூரிப் பொட்டழித்துத் திருவெண்ணீறணிந்து, சுவர்ணரத்தின ஆரங்களைக்களைந்து அக்கவடம் பூண்டு, பெற்றோரிடம் சென்று கன்னலனைய கிள்ளைமொழியால் தானும் மகேசருடன் தாணுவனத்தில் தவமியற்றப் போவதாய் அறிவித்தனள். அது கேட்ட தாய் மேனகை மெத்தவருந்தினவளாய், என்னருமைக் குழந்தாய்! அரிய தவஞ்செய்து பெற்ற உன்னைப்பிரிந்து நாங்கள் எப்படி உயிர்தரித்திருப்போம்? உன்னுடைய அதிகோமளமான சரீரம் தவத்திற் கடுத்ததன்று. நீ வனத்திற் சென்று கஷ்டங்களை எவ்வாறு சகிப்பாய்? நீ குழந்தையானதால் வனத்தில் தனித்துத் தவஞ்செய்வதால் வருந்துன்பங்களை அறியமாட்டாய். உ — குழந்தாய், மா — தவம் வேண்டாம் என்றனள். அதனால் பார்வதிக்கு **உமா** என்று பெயர்வந்தது. என்ன சொல்லியும் உறுதி மாறாமல் தவத்திற்குப் புறப்பட்ட தேவியுடன் தந்தை இமவானும் தாணுவனத்திற்குச் சென்று தட்சிணாமூர்த்தியாய் சித்தர்கணஞ்சூழ ஞான நிஷ்டையி லமர்ந்தருளும் பகவான் சங்கரர் சன்னிதியடைந்து வந்தித்து நின்று எனது குமாரி தம்மையே கதியெனநாடி தம்முடன் தவம்புரிவதற்கு இங்கு வந்திருக்கிறுள்; அங்கீகரித்தருளவேண்டும் என்று விண்ணப்பித்து நின்றனன்.

சங்கரர்:— தேவி பார்வதியைக் கண்விழித்து நோக்கி பெண்கள் நாயகமே! சுகுமாரமான ¶ப்ரகிருதிரூப இளம் பருவ மங்கையர் தவசிகளுடன் வசித்தல் அழகன்று; தந்தையுடன் வீட்டிற்குச்சென்று விரதம் அனுட்டித்துக் கொண்டிரு என்றனர்.

பார்வதி:— உம்முடைய தவசக்தியும் பிரகிருதி மயம் தானே; அச்சக்தியினாலன்றோ நீர் இங்கு தவம்புரிகின்றீர். அப்படிப்பட்ட வுமக்கு இந்த யோசனை எதற்கு? நீர் யார்? சூக்ஷ்மரூபமான இந்த பிரகிருதி யாவள்? இவைகளை ஆழ்ந்து யோசிக்கவேண்டும்.

சங்கரர்:— மகத்தான தவத்தினால் பிரகிருதியை நாசஞ்செய்து பிரகிருதியற்றவனாய் வசிக்கிறேன்; அதனால் பிரகிருதிரூபியான நீ இங்கு அணுகக்கூடாது.

பார்வதி:— நீர் இப்பொழுது பேசினீரே; பிரகிருதியை சம்பந்திக்காமல் எப்படிப்பேசினீர்? எதனால் பார்க்கிறீரோ? எதனால் கேட்கிறீரோ? எதனால் புசிக்கிறீரோ? எந்த சக்தியால் நிலைத்து தவம்புரிகின்றீரோ? அவைகளெல்லாம் பிரகிருதி சம்பந்தமன்றோ? நான் அவைகளைக்கடந்து நிற்கின்றேன் என்று நீர் சொல்லுவது "நான் ஊமை" என்று ஒருவன் சொல்லுவதை ஒக்கும்; இவைகளனைத்தும் பிரகிருதி காரியமாகையால் வஞ்சகவார்த்தையால் பிரயோஜன மில்லை; பிரகிருதியைக்கடந்த நீர் இந்த வனத்தினடுவில் யாருக்காக எதன்பொருட்டு தவமியற்றுகின்றீர்? உம்மை அறியாமலே பிரகிருதி உமதுள்ளத்திற் குடிபுகுந்து உம்முடன் கலந்திருப்பதை நீர் அறியவில்லை; அனேகமான வாக்கு

¶ ப்ரகிருதி — மாயாசக்தி.

வாதங்களால் என்ன பிரயோஜனம்? நீர் பிரகிருதியைக் கடந்துநிற்பது உண்மையானால், இங்கு இப்பொழுது என்னிடத்தில் உமக்கு பயமிருக்கவேண்டிய அவசியம் இல்லையே என்றனள்.

சங்கரர்:-- அதுகேட்டு புன்சிரிப்புடன் தேவியை நோக்கி இங்கிதமுணர்ந்த அதிசாதுரிய மதுரவசனி! தினந்தோறும் இங்கு என்னைசேவைசெய்துகொண்டு தவமியற்று என்றருளிச்செய்து இமவானுக்கு விடைதந்தனுப்பி இருவரும் தவஞ்செய்திருந்தனர்.

காமதகனம்:— தூமகேது வெனத்தோன்றி தேவர் முதல் யாவராலும் சாகாவரம் பெற்று உலகத்தை வருத்துகின்ற தாரகாசுரனுடைய துன்பத்தை நீக்குவதற்கு இந்திரன் சுரகுருவை யோசனை கேட்க, பார்வதிபரமரிடம் உதிக்கப்போகின்ற குமாரக்கடவுளாலன்றி மற்றவரால் அவ்வசுரன் சாகமாட்டான் என்று மொழிந்தனர். அது கேட்ட தேவராஜன் மன்மதனை அழைத்து பகவான் சங்கரர் பகவதி சங்கரியுடன் தானுவனத்தில் தவமியற்றுகின்றார்; அவருக்கு மோகத்தைத் தந்து பார்வதிதேவியை மணமுடிக்கச் செய்யவேண்டும் என்றனன். இவ்வார்த்தையைக்கேட்டு மாரன் இடியோசைகேட்ட விடநாகம்போல் நடுங்கினனாயினும் எதிர் சொல்லஅஞ்சி முடிச்துத்தருவதாய் வாக்களித்து வசந்தனைப் பின்வரச்செய்து தான்மாத்திரம் சென்று அணுரூபனாகி இதயகோணத்திடையில் ஒளித்திருந்தனன். சித்திரைமீ பூர்ணிமை நிலவில் தேவி பரமரைப் பூஜிக்க வந்து பலமூலங்களை நிவேதனம் செய்து மணமரு மந்தாரமாலையை இறைவர் காளகண்டத்தில் சூட்டினள். அதனால் ஞான குரு முக்கட்கடவுள் கண்விழித்து நோக்க, ஸத்துவ ரஜஸ்

தமோகுணங்களை முன்னிட்டு முத்தொழிலையும் செய்கின்ற ஒன்று சேதனரூபியாய் எதிர்நிற்கக்கண்டு க்ஷணநேரம் தன்னை மறந்திருந்தனர். அக்காலையில் மாரனும் போருக்கெழுந்து தேவியின் கடாக்ஷம்போன்ற இந்தீவரமலர்க்கணையை வளைந்த புருவத்தை நிகர்த்த கருப்புவில்லிற் கோத்து தனது உயிரையுங்கூட்டி சத்திய ஞானக்கினியால் ஜ்வலிக்கின்ற பரமாத வச்சிரகவாடம்போன்ற மார்பகத்தில் விட்டனன். "குளிர்ந்த பாறையானது மற்றொன்றால் தாக்கப்பட்டவுடன் நெருப்பைக்கக்குவதுபோல" சம்மோகனக்கணையால் தாக்குண்ட சங்கரர் அதிசய கோபங்கொண்டு இது யாருடையது? எங்கெழுந்து வந்தது? என ஞானக்கண்ணால் நோக்கிய அக்கணத்திலேயே எதிர்பட்ட மன்மதன் ஞானக்னி ஜ்வாலை மாலையால் சூழப்பெற்றவனாகி "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனும் காத்தல் அரி"தாக உருவழிந்தனன். உடனே அங்கிருந்து மறைந்து கைலையங்கடவுள் வெள்ளியங்கிரியை அடைந்தனர்.

உமாதேவியின் தவம்:— தேவி பார்வதி அங்கு ப்ரலாபித்திருந்த ரதிக்கு மாரனை எழுப்பித்தருவதாய்த்தேற்றி விஜயை, ஜயை, மாதவி, ஸுலோசனை என்கிற சேடியருடன் காமாச்ரமத்தில் மன்மதன் உடலழிந்த இடத்திலேயே தவச்சாலை அமைத்து, அழுக்குமனத்தை அலம்பிக்குளித்து, விலங்கு பறவைகளுடன் விளையாடிக்களித்து, மலர்க்கொடி மரங்களை நீர் ஊற்றிவளர்த்து, இலைசருகுகளைப் புசித்து, அவைகளையும் தள்ளி தவம்புரிந்திருந்தா ளாகையால் தேவிக்கு அபர்ணா (இலையையும் புசியாதவள்) என்கிற மற்றொரு பெயர் வந்தது. பரமர் மாரனை எரித்து மறைந்ததையும், உமாதேவி மாத்திரம் தனித்து தவம் புரிவதையும்

அறிந்த மேனகை பாங்கிகளுடன் வந்து கோடையில் வாடி மெலிந்த பச்சிளங்கொடியெனக் கடுந்தவத்தால் மெலிந்திருந்த தன்னருமைக் குமாரியைக் கண்டு வருந்தி வீட்டிற்கு அழைத்தனள். தேவி, காமத்தின் வசப்பட்டு பஞ்சேந்திரியங்களுக்கு விருந்தூட்டி குடும்பபாசத்தாற் கட்டுண்டிருப்பவருக்கு காமசத்துருவான என்னுடைய பிராணபதி வசப்படமாட்டார்; அவர் என்தவத்திற் கிரங்கி மானை எழுப்பித் தன் மலர்க்கரம் தந்து மகிழ்விப்பதாய் வரந்தரும் வரையில் நான் வீடுதிரும்பமாட்டேன்; "தீந்தேனருவி நிகழ்கயிலை வாழ்பரம, வேங்தென் தவத்தை விரும்பியே-காந்தமதி, லன்பி னுயிர்த்தலைவ ராதரவாய் வந்து கலந், தின்பந் தருவா ரெனக்கு" என்றனள்.

அதுகேட்ட தாய் இரங்கி உரைத்தல்:—

1. ஆமக ளேயென தாருயி ரேயழ கானன
மேயனமே
காமுகி போலடை காயிலை யுண்கிலை கண்களு
றங்கிலையால்
மாமத னுநடல் மாயவி ழித்திடு மாதவ
னேடமனி
நீமரு வற்குநி னைந்திடி லேயிது நேருவ
தெப்படியோ?

2. வாரிமு டிக்கிலை வாசமு கந்திலை வால்வளை
சிந்தினையால்
வேரிதழ் மாலைவி லக்கினை யுட்பொரு வேதனை
விட்டிலையால்
நாரியர் கண்டுந கைத்திட நச்சிய நாயக
னுடுமவ
ரீரியல் விட்டிடு காறுமெ திர்ந்தில னின்றிது
வேதுறுமோ?

3. பாகல மொன்றிய பாடல்வி ரும்பிலே பாயல்வி
ரித்திலையால்
கோகல மொன்றிய கோலம்வி ழைத்திலே கோதிமு
டித்திலையால்
நானல வென்றுந யந்துரை பேசிந கைத்துளொ
ளித்திடுவா
னேனவன் மேல்விழை வீதுரை யாயடி என்னிரு
கண்மணியே!

4. ஆரம ணிந்திலே ஆடல்பு ரிந்திலே ஆகம
றந்தனையால்
நேரம றிந்திலே நீரில மூழ்கிலே நேயம
றந்தனையால்
பாறநி றெய்பரு காய்மது சர்க்கரை பாலன
முண்கிலையா
லூரில றிந்திடி லோமலி தற்கொரு பாயம
றிந்திலனே.

5. தோகையர் பற்பலர் சூழவி ருப்பினுந் தோய்வில
னறிவே
னைகயி னலநி லாவது மொன்றிலே ஆணலி
போனுமவன்
சாகைகள். போயுயர் சாரலி ருப்பவன் சாதிகு
ணங்களிலான்
பாகைநி கர்த்தெழு பண்மொழி யேமயல் பாசமொ
ழிந்திடவே.

6. மாமயி லேயெழில் மாதர சேயவன் வானுரு
வாய்நிறைவான்

நேமமு டன்பல நாளவ ரேடுநெ ருங்கிய
திந்துளரால்
நாமவ னேப்பல நாளுந யப்பினு நாடுவ
தென்பதிலை
சோமனை யொத்தொளிர் சுந்தரி யேயிது சோதனை
போலுமடி.

7. ஆசுக விச்சிக ளாடல்சு மர்த்திக ளாயிர
மாயிரமாம்
தேசம்வி டுத்துடல் தேசும ழுங்கிநி கைப்பவ
ராயிரமாம்
கூசும்வி ழிக்கொளி கோகந தப்பணி கோதைய
ராயிரமாம்
நீசுக மொன்றநி னேந்திடி லேயவ னேருவ
ஞேநினையே.

8. ஆயுமி டத்தனை யத்தன வர்க்குற வாரென
யாமறியேம்
பேயும ழைக்குளிர் பேணுவ தற்கிலம் பேசிடு
தற்குமிலை
நாய்நரி வாழ்சுடு காடுறை பேயொடு நாடக
மாடிடுவான்
நீயெநி னைலவ னேயம்வி ழைந்தனை நீடிய
பூங்குயிலே!

9. பஞ்சர மேவிடு மஞ்சுக மேமலர் பங்கஜ
லோசனமே!
அஞ்சின னுவிய யர்ந்துடல் வெம்பினே யாவது
மேதறியேன்
மிஞ்சிடு மென்னுயிர் மேலுல கெய்திடு மெய்விர
தப்பயனே

சஞ்சல மாகிச லிக்கும னத்தைத டுத்ருளி
ருத்தடியோ.

10. மாதவர் தோய்தரு மாமலர் மேவிடு மானத
சாபகிலே
ஒநிம முண்டத னேடுரை யாடுன துள்ளளி
மாலைகொடு
தூதுவி டுத்திடு சோகமொ ழிந்திடு தோகையர்
மாமணியே!
ஏதக மேவியி ருந்தப டிக்கிரு இன்பம
தெய்துவையே.

என்று பலவிதமாக வருந்தி யழைத்தும் ஒரே உறுதியுடன் தவத்தில் நின்று விடுதிரும்பாத கௌரியை விட்டு மேரு வின் குமாரியான மேனகை பாங்கிகளுடன் வீடு திருப்பி னள். பிறகு பகவதி சேடியரைக் காவலாக்கி இயமநியமங் களைக் கைக்கொண்டு, அஹிம்ஸா தர்மத்தை அனுஷ்டித்து யோகாசனத்தமர்ந்து நாசிநுனியில் நாட்டம்வைத்து, பிரா ணவாயுவின் கதியாம் இந்துகதிர்க்கலைகளை மாத்திரைக் கிரம மாய் மாற்றி அங்கிக்கலையுள் அமர்த்தி நிறுத்தி, அஜபையு டன் உட்சென்று மூலவனலை ஜ்வலிப்பித்து அங்கு வட்ட மிட்டுறங்கும் குண்டலி சக்தியை விழிப்பித்தெழுப்பி, ஆதார சக்கரங்களை முறையே அர்ச்சித்து மேற்சென்று, சுழிமுனை யைத் திறந்து ஆஜ்ஞாசக்ரத்தை பேதித்து ஆவரண இருளை ஓட்டி லலாடமத்தியில் நந்தி ஒளியை தரிசித்து, துவாத சாந்தத்தில் ஸஹஸ்ரார சக்கரத்திடையில் சிவந்தொளிரும் கலைமதிமண்டலத்தில் மூலவனல் முட்டுவதால் உருகிப் பொழியும் சந்திராமிர்தத்தைப் பருகி மெய்யகத்தே இன்பம் பெருக இளைப்பாறி என்புகள் உருகிநைந்து உடல் தாம ரைத்தண்டுபோலாக யோகசித்திபெற்று, ஞானநாயகரி

டத்து நாட்டங்கொண்டு பஞ்சேந்திரியங்களையும் ஆமையின் செயல்போலகக்கடக்கி பஞ்சாக்ஷரத்தை இதயத்தில் நியாணித்து கருத்தை யிருத்தி பஞ்சகோசங்களைக் களைந்து இடையறு மலையருவி வீழ்ச்சிபோன்ற அகங்கிரகோபாசனையால் அகண்டசிவோகம் பாவித்து இதயக்ரந்தியை பேதித்து உளக்கமலத்தொளிரும் ப்ராணகாந்தரின் ககனமேனியைக் காணுமற்கண்டு பேச்சுமூச்சற்று சித்திரம்போல நிச்சல சமாதியி லிருந்தனள்.

உமாதேவியின் தவச்சோதனை:— விஷ்ணு ப்ரம் மேந்திரர்களை முன்னிட்டுக்கொண்டு தேவர் யாவரும் கைலையங்கிரிக்கு வந்து மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்து குமாரனைத்தந்து தாரகனை வதைக்க வரமருளவேண்டும் என்று முக்கட்கடவுளை வணங்கி யாசித்தனர். பகவான், இமவான் குமாரி பார்வதியின் தளிர்க்கரம்பற்றி மன்மதனை எழுப்பித் தருவோம்; அவள்பால் குமாரனைத்தந்து தாரகனை மாய்க் கச்செய்வோம்; அஞ்சன்மின் என்று அபயந்தந்தனுப்பி, தேவியின் தவத்தைச்சோதித்தருள வெண்ணி, அக்னிஜ்வாலை போன்று சிவந்த ஜடாடவியும், நெற்றியில் திலகமும் நீள் திரி புண்டரமும், அலர்ந்த கண்களும் அதிசயநோக்கும், அகன்றமார்பும் அருள்செறி நெஞ்சும், கனககுண்டலங்களும் கமண்டலக் கரமும்,கடிகௌ பீநமும் கலைத்தோலுடையும், வேதபா துகைகளும் வெற்றிவேள் வடிவுங்கொண்ட பிரம்மசாரி முனிவேடந்தாங்கி இருள்செறிந்த தாணுவன மத்தியில் காமவேதியின் மீது நீருண்ட கார்மேகக் கூட்டத்திடையில் நிலைபெற்ற மின்னற்கொடியை நிகர்த்து தவத்தாலொளிரும் அமுதனைய தலைவியைக்கண்டு தனக்குள் மகிழ்ந்து சமீபித்து நின்று விஜயை முதலிய சேடியரைப் பார்த்துப் பகருவார்.

மாயமுனிவர்:— சேடியர்காள்! இந்த வனிதாங்கி யாவள்? எவருடைய புதல்வி? யாருடைய தலைவி? எதன் பொருட்டு இங்கு தவமியற்றுகின்றனள்? அறிவிப்பீர்களா என்று வினவினர்.

சேடிகள்:— முனிகுமார! இவ்வரசிளங்குமரி அருந் தவம்புரிந்த மலையரசன் இமவான், சதிமேனகை இவர்களிடையில் தெய்விகமாய் உதித்தவள்; தேவிபார்வதி யென்னும் திருநாமம் பூண்டவள்; பிரம்மசாரிணி; பகவான் சங்கரரை பிராணகாந்தராக அடையக்கருதி தாய்தந்தையர் தடுத்தும் கேளாமல் ஒரே உறுதியாய் கடுந்தவமியற்றுகின்றனள்; இதுதான் எங்கள் தலைவி வரலாறு.

மாயமுனிவர்:— கௌரியை நோக்கி எள்ளி நகையாடிப்பேதாய்! உன் அறியாமையை என்னென்பது? இளம்பருவத்துக்குரிய ஆசையால் அந்த குணமில்லாதவனுடைய வரலாற்றை நன்கறியாமல் மோகித்து கடுந் தவத்தால் அழகிய உன்னுடம்பினைத்தளே; அவனுடைய அவகுண மனைத்தையும் நானறிவேன் சொல்லக்கேள்:- ஆண் பெண்ணலி யென்னும் அடையாளமற்றவன்; நினைப்பவரிட்டமே யன்றித் தனக்கென ஒருருவமில்லாதவன்; புத்தியில்லாரகத்தில் அல்லும்பகலும் கால்தலை தெரியாமல் கூத்தாடுபவன்; பாலைவனம் போன்று குணமற்ற பாழ்வெளியில் வசிப்பவன்; தேய்ந்த வெள்ளைமதி யுடையவன்; சுடலையே அவனுடைய உயர்ந்தமாளிகை; பயங்கரமான பூத ப்ரேத பைசாசங்களே அவனுடைய பரிவாரங்கள்; புலித்தோலும் யானையுரியுமே அந்தச் சுடலையாடிக்குப் பட்டாடையும் உத்தரீயமும்; வெள்ளெலும்பும் தலைமாலைகளுமே சுவர்ணநவமணி யாரங்கள்; கொடுவிடப்பாம்பு

களே ரத்னகடக கங்கண குண்டலங்கள்; ஏழை யெருது ஒன்றும் இரந்துண்ணும் மண்டையோடுமே அவனுக்குரிய குபேரச் செல்வம்; ஜன்மத்திலும் அன்னங்கண்டறியாத வன்; தாய் தந்தை சுற்றமற்றவன்; பித்தன் பேயன் பால னெனத் திரிபவன்; தனக்கென ஒன்றைவைத்துப் பிழைக்க அறியாதவன்; தன்னை இசைபாடுவா ரில்லந்தோறும் ஏவல் கேட்டுத் திரிபவன்; உலகந்தூற்றுவதை மதியாதவன்; அடிமைகளுக் கெல்லாமடிமை; விருப்பு வெறுப்பற்றவன்; திரிபுரத்தையும் காமனையும் கொளுத்திய கொள்ளிக்கண் ணன்; அறையி லிருப்பவரை அம்பலத்திலிழுத்து விடுபவன்; தன்பெருமை தானறியாத் தன்மை வாய்ந்தவன்; குணக் கேட்டின் களஞ்சியமான அவனுடைய கரைகடந்த அவகு ணங்கள் எண்ணிறந்தன; எனவே, அவனைநீக்கி குலம், பலம், கல்வி, செல்வம், ரூபம், குணம் முதலியவைகளால் சிறந்து யர்ந்த பல தேவர்கள் இருக்கின்றனர். தவத்தை விடுத்து தாய்தந்தையரிடம் சென்று அவரனுமதிபெற்று உன் மனதுக்குகந்த எந்த தேவனையாகிலும் மணந்துகொண்டு சுகமாயிரு; உனக்கு இதை அறிவிப்பதற்காகவே இங்கு வந்தேன் என்றனர் முனிவர்.

தேவி பார்வதி:— இதுகேட்டு மனம் நொந்து செவ் விதழ் துடிக்க கண்ணாடிபோன்ற கபோலங்கள் மாணிக்க மணியெனச் சிவந்தொளிர மாரனுடைய முறிந்தவில்லை நிகர்த்த புருவங்கள் ஒன்றுசேர நெரித்து குளிர்காலத்துப் பூரணசந்திரன் போலிருந்த வதனமண்டலம் கொதித் தெழுந்த கோபத்தால் வேனிற் பருவத்து இளஞ்சூரிய னெனக் கனல விஜயை முதலிய சேடியரை நோக்கி இந்த வஞ்சகத் தாபதவேடம்பூண்ட சிவநிந்தகனை தூர்த்தனை

கணநேரம் கூடத்தாமதியாது வெளியேற்றுங்கள் என்று சம்பிரமாய் மொழிந்தனள்.

பரமர் வரமீதல்:— சந்திரசேகரர் தன் ப்ராணகாந்தையின் கோபசுந்தரவதனத்தைக்கண்டு முகத்தழகை முதிரச்செய்கின்ற வெகுளியை வளர்த்து, அதனால் சிவப்பேறிய கடைக்கட்கனலில் குளிர்காய்ந்து மனமகிழ்ந்து மாயமுனி வேடத்தைமாற்றி இளநிலவொளிரும் புன்னகைபூத்த முகத்தராய் நிஜவடிவத்துடன் எதிர் நின்றனர். அதுகண்டு நாணத்தால் தலைவணங்கி நிற்கும் தேவியைக்கண்டு மனதிரக்கங்கொண்டு இருமரபையும் ஒளிர்விக்க உதித்த சோடசகலைமதியே! அருந்தவத்தால் வருந்தினை; அன்றியும் என் கொடுஞ்சொற்கள்உன்னுளத்தைச்சுட்டனபோலும்என்றுபசரித்து உனது அவமில்லாத்தவத்தால் ஜயமடைந்தாய்; லலிதாங்கி! நீஎனதுரிமை;திருமண முறையை உலகிற்குணர்த்த தானே வந்துன் தளிர்க்கரம் பற்றி உயிர்த்துணைவி யாக்கிக் கொள்கிறேன்; இனி இங்கு பரிசிரமப்படாமல் உன்பெற்றோருடன் மகிழ்ந்திரு என்று வரமருளி பித்தர் மனதிற்றோன்றி மறையும் தற்போதம் போலச் சட்டென மறைந்தருளினர். பார்வதிதேவி, தன் பிராணகாந்தரின் அருள்வாக்கியத்தை கர்ணாமிர்தமெனப் பருகி அளப்பரிய ஆனந்தவாரிதியுட்டிளைத்து சேடியருடன் முல்லை நிலவொளிரும் மூரல்மதி முகத்தினளாய் தாய்தந்தையரிடம் வந்து நமஸ்கரித்து நடந்ததை அறிவித்துப் பரமர் திருவருளை இரவும் பகலும் இடைவிடாது அந்தரங்கத்தில் சிந்தித்தவளாய் அமர்ந்திருந்தனள்.

தத்துவார்த்தம்:— முக்குணங்கடந்த முக்கட்சடைவன் கர்மமே பரமெனக் கருதிய தக்ஷனை அடக்கி அதற்கு

வென்று அவனுக்குணர்த்தி இச்சை உருவான காமனை உருவழித்து ஞானமே பரமென குருபாராகி உலகுக் குணர்த்தினர். மனோபவன் — மனதிலுதித்தவன், அநங்ய ஜன்—தன்னிடத்துண்டானவன், என்பனவாதி மன்மத னுடைய பெயராகவிருப்பதால் மனத்திலெழுகின்ற காமமே காமன். கண்ணிலாக் காமநோயும் மானக்கொதிப்பும் தாபமு மென்றிவை யெல்லாம் தாணுயொளிரும் ஞானம் நின்ற விடத்து நில்லாதழியு மென்பதையும், தவத்திற்குத் தீராப் பகையாம் காமசங்கற்பத்தை திருந்திய சிந்தையுடைய யோகிகள் ஞானப்பார்வையால் அதாவது உதித்தவிடத்தை உற்றுநோக்கலால் அழித்துவிடவேண்டு மென்பதையும், ஜிதகாமத்துவமே தவத்துக்கு இன்றியமையாச் சாதனமென் பதையும் ஞானகுரு தட்சிணாமூர்த்தி பரமர் உலகத்தவர் தவத்தால் உய்யவேண்டி விளக்கி யருளினர்.



தேவி மாகாத்மியம்

முதல் பிரகரணம் முற்றிற்று.



தேவி மாகாத்மியம்.

இரண்டாம் பிரகரணம்.

பார்வதி கலியாணம்:— நந்திசர் மார்க்கண்டேயருக்கு உமாதேவியின் திருக்கலியாண வைபவத்தை உரைக்கலுற்றார். கருணைக்கடலான சிவபெருமான் ஞானகுரு தக்ஷிணாமூர்த்தியாகி பிரம புத்திரரான சனகாதி முனிவருக் குபதேசஞ்செய்யும் நிமித்தமாக தன்னை யடைய விரும்பும் உத்தமாதிகாரிகளுக்கு ஞானநிஷ்டையை உணர்த்தியருளி உமாதேவியாரின் அருந்தவத்திற்கிரங்கி அன்று வரமருளியபடி சப்தரிஷிகளை பருவதசக்ரவர்த்தியிட மனுப்பி தேவியின் திருக்கலியாணத்திற்கு வேண்டிய யத்தனங்களைச் செய்யும்படி ஆஜ்ஞாபித்தனர். இமவான் அளவற்ற ஆனந்தமடைந்தவனாய் ஆணையைச் சிரமேற்றாங்கி தெய்வஞ்ஞராகிய மகரிஷிகளைக் கொண்டு நல்லநாள் கண்டு மங்களவதுவை நிச்சயித்து விண்டலத்தவர், மண்டலத்தவர் யாவர்க்கும் முறைப்படி சாரணர்மூலம் திருமண வோலைகள் அனுப்பி, விசுவகர்மனைக்கொண்டு நகரை அமராவதியும் நாண அலங்கரிக்கச்செய்து திருக்கலியாணத்திற்கு வேண்டியவைகளைச் செய்து கொண்டிருந்தனன். லோகநாயகரின் திருமணவோலையைக் கண்ட விஷ்ணுப்ரம்மேந்திராதி தேவ ரிஷி யக்ஷ ரக்ஷ கந்தர்வ சித்த வித்யாதர குஹ்யக சாரண பன்னக

பிசாச கின்னர கிம்புருட மானவர் யாவரும், சமுத்திர தேவதைகள், மந்தாகினி முதலிய நதிதேவதைகள் பலேச்சிற்றரசர்களும், திருமகள் கலைமகள் இந்திராணி முதலிய தேவிமாரும் சர்வாலங்கார பூஷிதராய் அவரவர் வாகனங்களிலேறி கைலையங்கிரி சென்று முக்கட்கடவுளை வெள்விடையில் ஆரோகணிக்கச்செய்து இமாலயத்தை யடைய இமவான் மஹரிஷிகளுடன் பூர்ண கும்பங்களேந்தி மங்கல வாத்திய கோஷங்களுடன் எதிர்கொண்டழைத்துவந்து அவரவர்க்குரிய மாளிகைகளில் அமர்வித்து ப்ரமதகணங்களுடன் பரமரை நவமணிகளால் அலங்கரிக்கப்பெற்ற வைஜயந்தம் போன்ற மாளிகையில் எழுந்தருளச் செய்தனன். வேலையும் வென்ற வித்தகவேடங்கொண்ட சங்கரரை பூர்ண கலாநிதியை களங்கத்தால் அலங்கரிப்பது போல பிரமன் ஆபரணங்களால் அலங்கரித்தலும் திருமாலும் குபேரனும் கைகொடுத்து அழைத்துவர நவமணிப் பசும்பொற்பீடத்தில் வந்தமர்ந்தனர்.

அழகிற் காதாரமாம் அம்பிகையை ஆபரணங்களால் மறைக்கின்றோமென்றறியாத இந்திராணியால் அலங்கரிக்கப்பெற்ற உமாதேவி திருமகள் கலைமகள் இருபுறத்திலும் பாங்கியராய் வர கமலினி அநிந்திதை வெண்சாமரம் வீச விஜயை ஜயை பாதசேவை செய்ய இசையெழு நூபுரகனகத்தண்டைசெஞ்சதங்கைகள் பங்கயப் பாதங்களில் மதனுகமங்களை ஒலிக்க, கமல முகத்தில் முத்தென நிலவுகின்ற புன்னகை செம்பவள இதழ்களிற் றவழ இளம்பிடியென நடந்துவந்து காவியை வென்ற கடைக்கண்ணால் மன்மதனை வென்ற சின்மய சிவத்தின் ஆனந்தாம்ருத ரூபத்தைப் பருகியவளாய் கார்மேகத்தைக்கண்ட கலாபமயிலென களிபேருவகையிலாழ்ந்து பரமருடைய அர்த்தாசனத்தில் இந்திரநீலப்

பதுமையென இருந்தனள். லோகநாயகரின் திருமணக் கோல வைபவத்தைக்கண்ட இந்திராதி தேவர்கள் இமையா நாட்டம்பெற்ற பயனை இன்றடைந்தோமென்றுனந்தித் தவர்களாய் வந்தித்து மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்தருள வேண்டும் என வேண்டிநிற்க விநவசமொழிக்கும் விமலர் அவ்வண்ணமே அனுக்கிரகித்தலும் ரதிபதி அங்குரித்தெழுந்து பரமருளத்தை நண்ணி இணங்கிநின்றான். பிரமன் முதலிய ரிஷிகள் மந்திராகுதிகளால் ஓமத்திரவியங்களை ஔபாசனாக்கி னியிற் சொரிய பார்வதி பரமரை வலஞ்செய்வதை நிகர்த்து ஓமத்தீ வலஞ்சுழித்தோங்க வீணைவேணு சங்கதாள மிரு தங்க மங்களவாத்தியங்கள் கடலென ஒலிக்க கலைமகள் திரு மகள் இந்திராணி அருந்ததி முதலிய சுமங்கலிய தேவ மாதர் மங்கல வாழ்த்துப்பாட ஆடையாபரணங்களால் அலங் கரித்துக்கொண்ட இமவானும் மேனகையும் குறித்த லக்கி னத்தில் பார்வதி தேவியின் வலக்கரத்தைப்பற்றி முக்கட் கடவுளரின் வலக்கரத்தில் வைத்து எங்கள் குலதீபமாகிய இந்தக் கன்னியை அக்னி தேவர் ரிஷிகள் சுற்றத்தவர் யாவ ரும் காண தமக்கு அர்ப்பிக்கின்றோம்; தாம் சகசாரியாகக் கொண்டு இல்லறத்தை நடத்தியருளல் வேண்டுமென்று வேண்டலும் இசைந்த உள்ளத்தாய் கௌரிதேவியின் பைங்குவளையை நிகர்த்த அங்குலிக்கரத்தைத் தனது செங் கமலக்கரத்தாற் பற்றி ஆமோதித்தருளினர். தேவர் மலர் மாரி பொழிந்தனர்; நால்வகை வாத்தியங்களும் கார்கால மேகமென ஒலித்தன; முனிவர்கள் புஷ்பாக்ஷதைகளைப் பொழிந்து வாழ்த்துக் கூறினர்; இமவான் நாவலர் முனிவர் யாசகர்களுக்கும் மற்றுமுள்ள யாவர்க்கும் புட்கலாவர்த்த மேகமெனப் பொன்மாரியுடன் கனிமாரியும் கலந்துபொழிந் தனன்; தேவராஜன் வாசமலர்மாலைகளையும், கதலி கமுகு வெள்ளிலைகளையும், யாவர்க்கும் வழங்கச்செய்தனன்; அசு

வினிதேவர் அமுதம்வழங்கினர். இளவரசன்மைனுகன் யாவரையும் உபசரித்து வழி அனுப்பினன். வந்தவர்யாவரும் இமவானிடம் விடைபெற்று பார்வதிபரமருடன் திருக்கைலைக்குச் சென்று அம்மையப்பரின் வாரிசமலர்ப்பாதங்களில் வணங்கி விடைபெற்றுத் தத்தம் பதிகளுக்கேகினர்.

கணேசஸ்கந்தாவதாரம்:-‡ "நாராயணரும் நான்முகரும் நான் பரமென்றகங்கரித்த முந்திய பிழையை சுத்தி செய்துகொள்ள ஆனைமுகரும் ஆறுமுகருமாக தேவியினிடத்துதித்து" தேவர்களுக்கு இடரிழைத்துவந்த கஜமுகாசுரனையும் தாரகாசுரனையும் மாய்த்து இந்திரனுக் கரசளித்தனர். குமாரக்கடவுள் மான்மகள் வள்ளியையும் இந்திரகுமாரி தேவசேனையையும் மணமாலைசூட்டி தேவசேனாபதியானர்.

திருக்கண்புதைத்தல்:—திருக்கைலாயத்தில் கனக மணி மண்டபத்தில் கிரிராஜகுமாரியும், கிரீசரும் ஏகாந்தத் திருக்கையில் விசுவவிராட்டுருவத்தில் சோமசூரியாக்நி முச்சுடரும் பரமாது மூன்று நேத்திரங்கள் என்பதை உலகிற்கு

சுலோகம்.

‡ கஜாநநஞ்ச ஹேரம்பம் ஸேநாந்யஞ்ச ஷடாநநம்
தெளசாகம வித: ப்ராஹுர் நாராயண சதுர்முகௌ||
பூர்வாபராத சுத்யர்த்தம் தேவீகர்ப்ப ஸமுத்பவௌ.

(ஸ்காந்தம்-மாகே-கண்டம்-அரு-மாகா-உத்தரார்த்தம், 17-ம் அத்தி--22, 23-வது சுலோகங்கள்.)

(இ—ள்) முந்தி அருணாசலத்தில் நான்பரம் நான்பரம் என்றகங்கரித்த அபராதத்தைப் போக்கிக்கொள்வதற்காக நாராயண நான்முகர் இருவரும் கஜாநநஷண்முகராய் தேவி கர்ப்பத்துதித்தனரென்று ஆகமத்தை அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

விளக்கக்கருதி தேவிதனது செந்தாமரைக்கைகளால் அகிலநாயகரின் இரண்டுகண்களையும் மறைத்தனள். உடனே மூவுலகும் மையிருள் சூழ்ந்தது. சூரிய சந்திரர் காணப்படவில்லை; அதனால் தேவர் முனிவர் நெடுங்காலம் வருந்தியவர்களாய் முக்கட்கடவுளைத் துதித்தலும் தமது நுதல்விழியைத்திறந்து உலகனைத்தையும் ஒளிர்விக்கக்கண்டு அகிலகாரணி தனதிரண்டுகைகளையும் வாங்கிநின்றனள். பரமர் பகவதியை நோக்கி தேவி! என்னகாரியம் செய்தனை? நமக்கு அரைக்கணமாயினும், உயிர்கள் நீண்டகாலம் இருளால் இடர்ப்பட்டன என்றனர். அதுகேட்ட அம்பிகை இப்பாவம் நீங்க தவம்புரிவதற்கு விடையளித்தல்வேண்டுமென நாயகரைவேண்டிநின்றனள். தேவதேவர் எல்லாத் தவங்களினுடைய ஆதாரமாகவும் முடிவாகவும் உள்ள உனக்கும் ஒரு தவம்வேண்டுமோ? ஆயினும் தவத்தால் அறத்தை நிலைநாட்டி உன்னிடத்தில் உதித்த ஜீவலோகத்தின் பாவத்தைப்போக்கி புனிதமாக்கக்கடவாய்; தெற்கில் முக்தி நகரங்களில் முதன்மையான காஞ்சிபுரத்தில் பாவங்களைக் கம்பிக்கச்செய்கின்ற கம்பாநதிக்கரையில் எக்காலத்திலும் தளிர்த்து கொம்பிலரும்பி பூத்துக்காய்த்துப்பழுந்தரும் ஒற்றை மாவடியில் தவம்புரிக என்றருளினர்.

தேவி மாகாத்மியம்.

இரண்டாம் பிரகரணம் முற்றிற்று.

தேவிமாகாத்மியம்.

மூன்றும் பிரகரணம்.

தேவி தவத்திற்கேகல்:— கலாவதி, மால்யவதி, மாலினி, விஜயை, ஜயை முதலிய சேடியர் புடைசூழ யோகினிகணங்களுடன் தேவி விமானத்திலேறி வாரணாசியை அடைந்து அன்னபூரணியாகி விசாலநேத்திரங்கொண்டு விசுவேசரை தரிசித்து காஞ்சியம்பதிக்குவந்து வேகவதிநதியில்மூழ்கி ஒற்றைமாவடியில் நாலெட்டறம்வளர்த்தநாயகி காமாக்ஷியாகி மணற்றிட்டில் ஆத்மலிங்கத்தை ப்ரதிஷ்டித்து தியான முறையில் பூஜிக்கையில் லிங்கமத்தியில் மகேசரைக்கண்டு ஆனந்தத் தழுந்தியிருந்தனள். பரமருடையஆணையால் வேகவதிநதியில் கதித்தெழுந்து மலைபுரண்டாலெனக் கரைபுரண்டு வரும் வெள்ளப்பெருக்கைக்கண்டு சேடியர் அம்பிகைக்கறிவிக்க தனக்குவரும் ஆபத்தைக்கண்டஞ்சாமல் லிங்கத்திற்குப் பங்கம் வருமெனப்பயந்து தனது உத்துங்கபயோதரம் படர்ந்த மார்பகத்தில் வைத்து இறுகப்புல்லலும் வேகவதியின் வெள்ளம் அருணாசலத்தை ஒருதரம் நினைத்தவர் இருவினைபோலப் பிரிந்து வற்றிப்போயிற்று. உள்ளமுருகி உயிருருகி உமையுடன் ஒன்றாக்கலந்து ஆனந்தத்தழுந்திய பரமர் எதிர் நின்று தேவியைநோக்கி "காமாக்ஷி! அன்பிற் சிறந்த பக்தியின் தன்மையை உன்வழியாக உலகறியவே இப்படிச்செய்தோம். அயனரி அறியாச் சுயம்புலிங்கமாய் ஒளிரும் நமதருணாசலத்திற்கு வந்து அர்த்தாங்கம் பெறுவாயாக" வென்றருளி லிங்கத்துள் மறைந்து, வண்டுகள் நீங்காதொலிக்கின்ற கொன்றை மாலையைத் தரித்த காமாக்ஷி பங்கர் ஏகாம்பரேசரா யமர்ந்தனர்.

அருணாசல தபோவன தரிசனம்:— அம்பிகை அதுகேட்டு சந்தோஷித்து காஞ்சிபுரத்தை விட்டு விமானத்திலேறி கணங்களுடன் புறப்பட்டு விண்ணளவு குன்றங்களையும் ஆழ்ந்தபள்ளங்களையும் கடந்து அலையுமனக் கருக்கலுக்கு உதயபானுவெனும் அருணாசலத்தை தூரத்திலேயே கண்டு களித்து முகக்கமலம் விழிக்கமலம் அகக்கமல மலர காகமலங்குவித்து விமானத்தினின்றிறங்கி துணைக்கமலபாதம் வருந்த நடந்து கீழ்த்திசையில் அண்ணாமலையின் பாதமாகிற தபோவனஞ்சூழ்ந்த பவளக்குன்றை யடைந்தனள். அங்கு தவம் புரியும் முனிவர்களுக்குமேல் நின்று சிலந்திப்பூச்சிகள் வலைபின்னி நிழல் செய்வதையும், கவரிமான்கள் தங்கள் அடர்ந்த மயிரையுடைய அழகிய வால்களால் ஆசிரமங்களைப் பெருக்கி சுத்தம் செய்வதையும், வானரங்கள் முனிவர்களுக்கு புஷ்ப பலங்களையும் காடிகள் கிழங்கு தேன்களையும் தந்துதவுவதையும், காட்டானைகள் துதிக்கைகளில் நீரை அள்ளிவந்து கமண்டலங்களில் நிரப்புவதையும், காட்டுப்பன்றிகள் வேதிகைகளுக்கு ஈரமண் சுமந்துதவுவதையும், நரிகள் நீவாரதானியங்களால் மீன்களை வளர்ப்பதையும், கூகையும் காக்கையும், வல்லூறும் கிளியும், புலியும் மானும், மயிலும்பாம்பும், எலியும் பூனையும், யானையும் சிங்கமும், கலந்துறவாடுவதையும்,பசுவின் கன்றுகளைப் பெண்புலிகள் பாலூட்டி வளர்ப்பதையும், ஹோமாக்னியினின்றெழுந்த புரோடாசத்திரவியங் கலந்த பாவனமான சுகந்தப்புகையானது அடர்ந்த மரச்சோலைகளினின்று வெண்மேகம்போன்று வெளிக்கிளம்புவதையும், கிளிகளும் நாகணவாய்ப் புட்களும் சாமகானங்களுடன் சிவஸ்துதி செய்வதையும், அன்புடன் சகலாகம உபதேச மந்திர பஞ்சாக்ஷரப் பொருளை அகத்திலுன்னி பிராணவாயு சலியாவண்ணம் அடிமேல் அடிவைத்து சிலம் குன்றாமல் சிரமேற் குவித்த கையாய்

மெல்லென ஊர்ந்து கிரிவலம் வரும் பக்தர் பலரையும், அவனியே அம்மியாகவும் உடலே உருளையாகவும் அன்புடன் அங்கப்ரதக்ஷிணம் செய்பவர் பலரையும், கன்னெஞ்சுருகி விழியருவியில் மூழ்கி அழுது தொழுது அவனருளைப் பாடியாடி மொழி குழறப் பாமாலை சூட்டி வலம் வரும் அன்பரனேகரையும், பக்தி ஆவேசத்தால் அரகர சப்தம் கடலினுமொலிக்க சிவநாம பாராயணஞ்செய்து ப்ரதக்ஷிணஞ் செய்யும் அடியர் எண்ணிறந்தவரையும், மலைச்சாரலில் ஆங்காங்கு இருளடர்ந்த குகைகளிலும் வாவிக்கரைகளில் குளிர்தரு நீழலிலும் வீதராகிகளாய் துறவின் குறிகொண்டு மானச சரஸில் மூழ்கி அஞ்ஞான அழுக்ககற்றி இருவினை கடிந்து உள்நோக்குக் கொண்டு யோகாசனத்தமர்ந்து அலர்ந்த இதயகமலபீடத்தில் ஆத்மலிங்கத்தை ப்ரதிஷ்டித்து அன்பே அவிச்சின்னதாராபிஷேகமாகவும் உபாம்சு வாசகத்தால் அகமுற ஜபிக்கின்ற பஞ்சாக்ஷர மூலமந்திரமே பஞ்சவர்ண புஷ்பார்ச்சனையாகவும் இந்திரியங்களே நந்தாவிளக்குகளாகவும் ஆவியே நைவேத்யமாகவும் அறிவே கருப்பூர தீபமாகவும் இலங்குகின்ற இறைவன் சேவடியில் இரண்டற நின்று அநவரதம் ஆராதிக்கும் ஞானநெஞ்சினர் பலரையும், பொறிவாயிலைந்தவித்து மௌனிகளாய் வெகுளாமை என்னும் விரதம்பூண்டு பத்மாசனத்திலிருந்து மூலாநிலத்துதித்த இந்துகதிர்க்கலைகளின் சம்யோக கிரணபந்தித்தம்பங்களால் மோதுண்டுவழியும் சந்திரகலாமுதத்தை உண்பதால் உடல் அமிர்தமாய்த் திகழ்கின்ற யோகியர் பலரையும், மனமே வில்லாகவும் இந்திரியங்களே சாணாகவும் அறிவே அம்பாகவும் இறையே லக்ஷ்யமாகவும் வைத்தெய்கின்ற ராஜயோகிகள்பலரையும், பாசவைராக்கியம் கொண்டு ஆறாதாரங்களினடியில் அக்னிமண்டலத்தி லுறங்குகின்ற ஓங்காரகுண்டலி சத்தியை வாயுதாரணைகொண்ட யோகசத்தியா லெழுப்பி மேற்

சென்று சுழி முனைதிறந்து ஊறுயி ருணர்விற்கலந்து துவா தசாந்தத்தொளிர்கின்ற அருண தளஸகஸ்ராரகமலத்தில் மட்டற்றஜோதிப்ரபையு ளழுந்தி ப்ரணவ சரீரிகளாய் இரவு பகலறியாது குருதுரியத் திலங்குகின்ற யோகபரர் பலரையும், பசு பதிபாசத் தியல்பறிந்து அகப்புறப்பற்றொழித்து செய்யப் படுகின்ற கருமபலன்களுடன் மனவாக்கு காயங்களையும் முக் குணங் கடந்த சிவத்தினிடம் ஒப்பித்து புளியம் பழமும் ஓடும்போலவும் தாமரையிலையில் தண்ணீர்போலவும் பற்றற்ற வராய் உலகத்தோ டொத்துநடிக்கும் திறம்வாய்ந்த நிஷ்காம கருமயோகியர் பலரையும், முக்குற்றங்கடிந்து பூததயை கொண்டு கொல்லாவிரதியாகி மகேசரிடத்துண்டான் உல குயி ரத்தனையும் உள்ளமுருகிச் சிவமாகக்கண்டு உயிருடலத் தில் தங்குவதற்குமட்டில் வேண்டிய உணவுகொண்டு விலங்கு பறவைகளுக்கு விருந்தூட்டி அவைகளுடன் விளை யாடிக்களித்து சஞ்சலமற்ற நெஞ்சத்தினராய் தவமுறையில் வழிபடும் சிவானுபவிகளான பக்தியோகியர் பலரையும், காயகற்பங் கொண்டு உயிர்ப்புநிலைகண்டு ஹேமஸித்திபெற்று அமுததாரணையால் ஆயுளை நீடிக்கச்செய்து உடல் நிலை கொண்டு ஊர்த்துவ ரேதஸ்விகளாய் அணிமாதி அஷ்ட சித் திகள் கைவந்து காலனைவென்ற அற்புத சித்தர் கணங்களை யும், கறங்கெனச் சுழல்கின்ற இந்திரிய மனோவியாபாரங்களை அப்பியாசத்தால் இழுத்து வசப்படுத்தி நிறுத்தி ஒருப்பட்ட சித்தவிருத்தி யுடையவராய் நடுநிலைநின்று இதாகிதங்களை உபேக்ஷித்து கோபத்தைக் கோபித்து சாந்தியென்னும் ஆப ரணமணிந்து உலகைக் கானல்நீரெனக்கண்டு உண்ணுேக் கங்கொண்டு நான் யாரென உசாவிச் சென்று சென்றணு வாய் தேய்ந்துதேய்ந்தொன்றாய் எங்கணுந்தானாக நின்ற மனோவாசாமகோசரத் திரண்டறக்களிக்கின்ற ஞானயோகி யர் பலரையும்கண்டு கைரவலோசன கடாக்ஷ வீக்ஷணத்

தால் அநுக்ரகித்து, அவர்கள்மத்தியில் ஏழிலைப்பாலை மரத்தடியில் புலித்தோலை விரித்து தர்ப்பைப் புற்களைப் பரப்பி அதன் மீது வளர்ந்து சரிந்த செந்நெற்கதிர்கள்போல் பொன்மை கலந்த பிங்களச் சடைகளும் விபூதி பூசி வெளுத்த மேனியும் மூக்கு நுனியில் வைத்த அசைவற்ற பார்வையும் சமமாக அசைகின்ற உதடுகளின்மேல் ஒளிவீசுகின்ற தந்தபந்திகளுடன்கமலக்கையின் நுனிவிரல்களால்அக்கமாலையைஉருட்டிக் கொண்டும் பனிமலை மத்தியில் காணப்படுகின்ற செவ்வானம் போல இடையில் மாவுரி யிலங்க தோளினின்றும் வயிற்றிடையில் விழுகின்ற வெள்ளருவிபோல முப்புரிநூ லொளிர யாக வேதிகையின் மீது ஆஜ்யதாரையால் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போல வீராசனத்தமர்ந்திருக்கும் கௌதம முனிவரைக் கண்டாள். சேடியரால் லோகமாதாவென்றறிந்த கௌதம முனிவர் எழுந்து அம்மையின் பாதங்களில் வந்தித்து துதித்து மூல பலங்களை நிவேதித்து நின்றனர்.

தேவி:— முனிபுங்கவ! நீ யார்? இந்த மலை எத்தகையது? க்ஷேத்ரம் எப்படிப்பட்டது? நீ எதற்காக இங்கு தவமியற்றுகின்றாய்? ஆதியோடந்தமாய் உரைக்கவேண்டும்.

கௌதமர் தேவிக்கு கிரிமகிமை உரைத்தல்:- கடலுலகையும் வான்பொருளனைத்தையும் தன்னுள்ளடக்கிய அருளமுதக்கடலாம் பராசக்தி அம்மையே! உன்னையும் தன்னுளடக்கி நிற்கும் பெருமைபெற்ற இந்த அருணாசல மகிமையைச் சொல்லுகிறேன் இளைப்பாறுக; என்று தர்ப்பாசனத்தில் அமர்வித்து உபசரித்து கௌதம முனிவர் உரைக்கலுற்றார். நான் கைலயங்கிரியில் தவம்புரிந்திருந்தேன்; எனது இதயத்தானமாம் அருணாசலத்திற்கு வருவாயாக என்று முக்கட் கடவுள் இட்ட கட்டளைப்படி இங்கு வந்து.

தவம்புரிந்திருக்கின்றேன். என் பெயர் கௌதமன் என்பர். இந்த கிரிக்குக் கீழ்புறம் ஸ்தலேச்வரம்என்று ப்ரஸித்திபெற்ற அருணபுரி நகரமத்தியில் சுயம்பு ஜோதி லிங்கத்தையுடைய சிவாலயம் இருக்கிறது; தேவர் சித்தர் மானவர்கள் நெருங்கி எக்காலத்திலும் கடலென ஒலித்துத் துதிக்கின்றார்களாகை யால் அங்கு தனித்திருந்து தவம்புரிய முடியாமல் இந்த அருணாசலபாதமாகிற பவளக்குன்றில் ஆத்ம லிங்கத்தை ப்ரதிஷ்டித்து ஆராதித்து வந்தேன்; என் பக்திக்கு உளம கிழ்ந்த அருணகிரீசர் காட்சிதந்தருளைத்தபடி சொல்லுகி றேன் என்று தொடங்கினர்:-அரிபிரமர்களுக்கு மோகத்தை ப்போக்கி ஞானமருளியது அருணாசலம் என்பது முதலிய மூர்த்தி தலம் தீர்த்தமகிமைகளையும் கிரிவலப்பெருமையையும் முறையாய் உரைத்து பின்னும் சொல்லுவார்; உலகும் உட லும் நிலையில் பொருளென உணர்ந்து உள்திருப்பிய மனத் தால் இதயத்தை ஆச்ரயித்த யோகிகள் முக்தியின்பொருட்டு எந்த ஜோதிர் மயமான ஒன்றைத் தேடுகிறார்களோ அதுவே இந்த ஜோதிலிங்கம். மாயை வசப்பட்டவர்க்கு தம்மையே மெய்ப்பொருள்களாகக்காட்டும் இந்திரிய விஷயங்களில் மயக்கமுறாமல் தன்னை நாடுமவர்க்குத் தானே உள்ளதாய் ஒளிர்வது அருணாசலம். உடலுக்குற்ற நோய்களை அகற்றும் மூலிகைகளைத் தம்மிடத்தில் வைத்திருக்கும் மலைகளெல்லாம் வெட்கும்படி உட்கொள்ளுமவர் பவமாம் பிறப்பென்னும் மயக்கநோய்க்கே அருமருந்தாய் நிற்பது அருணகிரி. அகல், நெய், திரி, நெருப்புடன்கூடி ஏற்றுபவர் புறத்திருளைப் போக்கும் அலைவிளக்கைப்போலன்றி, நினைத்தாலும் பெய ரைச்சொன்னாலும் அகத்திருளை அநவரதம் போக்கும் நிலை விளக்கு இந்த அர்க்கமலை. இக்கிரி காண்பவர்க்கு தரிசன வேதியும், உளத்தால் வாக்கால் உடலால் ஒருக்கால் தன்னைத் தீண்டுமவர்க்கு பரிசனவேதியுமாம். சுமத்தற்கரிய மந்தரகிரி

யைச் சுமந்துவந்து வார்கடலிலிட்டு மத்தாக்கி, வாசுகி என்னும் கொடுவிடப் பாம்பை நாணாகப்பூட்டி கைகள் சோவக் கடைந்து, ஆலாலமென்னும் நஞ்சால் நலிவுற்று, தமக்கென வாதிட்ட தானவரால் தாக்குண்டு உண்டாலன்றி முதுமையை போக்காத கடலமுதைப்பெற்ற தேவர்கள் கண்டாலும், நினைத்தாலும், ஒருக்கால் சொன்னாலும் மரணபவத்தை மாற்றி பேரானந்த நித்திய வாழ்வை அளிக்கும் இந்த மலையமுதம் தானாக மானிடர்க்குக் கிட்டியதைக் கண்டு பொறாமை அடைகின்றனர்.

அன்னதானமகிமை உரைத்தது:—கௌதமர் ஜகதம்ப! ஸிம்மத்வஜன் என்னும் திராவிட தேசத்தரசன் அன்னதானம் தவிர எல்லாதானங்களையும் செய்து சுவர்க்க சுகங்களை அடைந்தும் அமுதம் கிட்டாமல் பசியால் வருந்தினான். அவனிடம் நாரதமுனிவர் வந்து மன்னவ! எதை இகத்தில் கொடுத்தாயோ அதையே பரத்தில் அடைந்தாய். எதை தானம் செய்தாயில்லையோ அதை அடையவில்லை. ஆயினும் உன் குமாரன் மூலமாய் உன்னுடைய பசிதணியச் செய்கிறேன் அஞ்சற்க; என வாக்குறுதி தந்து இளவரசன் சித்ரகேதுவிடம் வந்து ராஜகுமார! நின் தந்தை அன்னதானம் செய்யாமையால் சுவர்க்கத்தில் பசித்திருக்கிறான்; பசியுடையவனுக்கு எந்த சுவர்க்கபோகந்தான் ருசிக்கும்? அன்னத்தில் பிராணனும், பிராணனில் பரமும் ப்ரதிஷ்டிக்கப்பட்டிருப்பதால் பராவமுதம் பெறவேண்டியவர் அன்னதானம் செய்யக்கடவர்; அன்னதானம் செய்தவன் ப்ராணதானம் செய்தவனாவான்; ப்ராணதானத்தால் ஞானரூபரான அருணேசர் திருப்தி அடைகின்றார். எந்த ஞானமுடையவன் புசித்த அன்னமானது அருணாசல ஸ்தலத்தில் சிவத்தியான ஸ்தோத்திர ஜபங்களாலும், உயர் மறைகளை ஓதுவதாலும்

ஜீர்ணமாகின்றதோ அதனை அளித்தவன் ஒவ்வொரு சோற் றுமணிக்கும் கற்பகாலம் சுவர்க்கத்தில் அமுதம் புசித்தி ருப்பன். இதத்தில் எவன் எதைக்கொடுக்காமல் தனக்கென ஒளித்துவைத்துக்கொள்ளுகிருனே அதை சுவர்க்கத்திலும் மறு ஜன்மத்திலும் அடையமாட்டான். எனவே தன்னு டைய லாபத்திற்காகவே அமுதம் இச்சிப்பவன் அண்ணு மலையில் அன்னதானம் செய்யவேண்டும். மற்றைய தலங்க ளைக்காட்டிலும் காசியில் நூறு பங்கதிகம்; அதிலும் அருணு சல க்ஷேத்திரத்தில் சிவஞானிகளுக்கும் மறையவர்க்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்தல் கோடிபங்கதிகம். ஆகை யால் அங்குசென்று அன்னதானம் செய்து உன் தந்தையை திருப்தி செய்விப்பாயாக என்றருளிப்போனர். அவனும் அப்படியே செய்து தந்தைக்கு பலனைத்தந்து தர்ப்பணம் செய்து பசியைத்தீர்த்து மகிழ்வித்தனன். அதனல் இத்த லத்தில் அன்னதானம் மிகச்சிறந்தது.

தீபோத்ஸவ மகிமை உரைத்தது:— முனிவர், ஜகத்ப்ராணரூபி! என் ஆச்ரம சமீபத்திலிருக்கும் இந்த பவ ளக்குன்றில் பர்ணசாலை அமைத்து அதில் தவமியற்றி உலகைப் புனிதமாக்கி, ஒரு மண்டலமாகிலும் அன்றேல் குறைந்தது கார்த்திகை மாதம் உத்திராட நக்ஷத்திரமுதல் பத்தொன்று நாட்களாவது திருவிழாக்கண்டு கார்த்திகைமீ பௌர்ணமி கூடிய உக்ரமான கிருத்திகையன்று விடியற் காலத்தில் பரணிதீபத்தால் சுயம்புலிங்கத்தை ஆராதித்து மலை உச்சியில் அகன்றுயர்ந்த கொப்பரையில் நெய்வர்த்தி கர்ப்பூரங்களைச் சேர்த்து, மாலை ப்ரதோஷ சமயத்தில் ஆலய மெங்கிலும் கோபுர சிகரங்களிலும் அருணகிரி முடியினும் தீபமேற்றி தரிசித்து அம்மையே! பசும்பொன்னைச்சேர்ந்த பச்சைமணியென அருணேசரின் அர்த்தாங்கத்தை அடைந்து

விண்ணுலகத்தவர்க்கும் மண்ணுலகத்தவர்க்கும் காட்சி தந்து இங்கு எக்காலத்திலும் அமர்ந்தருளல் வேண்டும். சுருங்கச்சொல்லின் கார்த்திகை தீப மகிமையை மானிடர் அறியார்; ஆனால் ஏகாதசருத்திரர் அறிவர். அருணாசல தீபத்தை தரிசித்தவரின் திருஷ்டிகோசரத்துக் குட்பட்ட சராசர மனைத்தும் ஞானவொளிபெறும். இத்தீபத்திற்கு நெய் வர்த்தி கர்ப்பூரம் உதவியவரும் நித்திய சூரியராவர்.

உமாதேவியின் தவம்:— தேவி இவைகளைக் கேட்டு உளமகிழ்ந்தவளாய் இருளடர்ந்த சோலைகள் சூழ்ந்த பவளக்குன்றில் பர்ணசாலை அமைத்து நாற்புறத்திற்கும் சத்யவதி, கானனவாஸினி, சுபகை, துந்துமாரி என்னும் வனதேவதைகளைக் காவலாக்கி துர்க்கா தேவியை எல்லா தபோவனங்களையும் காக்கும்படி ஆணைதந்து தினந்தோறும் பாவனமான கமலை நதியில்மூழ்கி ஒளிர்கின்ற அஷ்டமி சந்திரன் போன்ற திருநுதலில் வெண்ணீறணிந்து அக்கமாலை பூண்டு மாவுரி உடுத்து கடுந்தவமியற்றும் காத்தியாயனி யாகி பலமூலசாகாசனியாய் பதுமாசனத்தமர்ந்து உண்ணின் றியங்குயிர் ஓடாதடக்கி ஒருபொருளன்னி இருமை களைந்து முக்திக் கிடர்செய்யும் ஐயம் திரிபு அறியாமை என்னும் மூன்றையு மகற்றி நாற்கரண மடக்கி ஐங்கோசங் கடந்து அறுபகை காய்ந்து எழுபூமிகளில் இனிதுறவேறி அட்டாங்கயோகத்தமர்ந்து அன்பினா லிறைவனை அகமுறப் பிணித்து செயல்மாண் டுரைமாண்டுளமாண் டுணர்வுமாண்டு இந்தீவரத்தைவென்ற இருவிழி நாட்டமும் இமையா மனக்கண்ணுடன் ஒன்றாக அமுதாருக்கையுள் தன் தலைவர் அருணாசலேசரின் ககனமேனியை இதயத்தில் கண்டு களித்து இரவும் பகலும் ஏகமாக தவத்தால் பஞ் சாக்னி மத்தியில் பத்தரை மாற்றுப் பசும்பொற்கொடி

யெனத் திகழ்ந்தனள். அம்பிகையின் தவப்பெருமையால் காலங்களில் மழை பெய்தது. மரங்கள் எக்காலத்திலும் பூத்துக் காய்த்துக் கனிகளைத் தந்தன. தேவியின் தவச்சாலை ஜந்துக்களுக்கு அடைக்கல ஸ்தானமாயிருந்தது.

மகிடாசுர வதம்:—இரணியகசிபு வம்சத்திற் பிறந்த மகிடாசுரன் பிரமனிடம் மும்மூர்த்தி முதல் ஆடவரால் இறவா வரம்பெற்று, இந்திராதி தேவர்களைச் சண்டையிட்டு சுவர்க்கத்திலிருந்து துரத்தி அமராவதியை ஆண்டுவந்தான். மூவர்களுடைய சூலம் திகிரி தண்டென்னும் படைக்கலங்களும் முனிவரர்களுடைய கொடிய சாபங்களும் அவனை அணுகியும் பயன்படாதன வாயின. ஒரு தினம் விமானத்திலிருந்து நிலைத்த மின்னற்கொடியென அருணசலத்தில் தவத்தினால் ஜ்வலிக்கின்ற தேவியைக்கண்ட மகிடாசுரன் செழுஞ்சுடர் தீபத்தை விழைந்த விட்டிலென அறிவழிந்து அம்பிகையை மயக்கித் தன்னிடம் அழைத்துவர சில அசுர கன்னிகைகளை அனுப்பினன். அவர்கள் தபஸ்வினிகள் வேடந்தரித்து தேவியிடம் வந்து சிலநாள் தொண்டு பூண்டிருந்து ஒருதினம் தேவியை நோக்கி மான்போன்ற கண்களையுடையவளே! எதற்காக இக்கொடிய கானகத்தில் வசிக்கிறாய்? எதன்பொருட்டு அழகிய யௌவன பருவத்தில் உன்னுடைய சித்தமானது சுகபோகத்தை வெறுத்து தேவராலும் செயற்கரிய தவத்தில் ப்ரவர்த்தித்திருக்கிறது? முத்துமணிகளாலான விதானத்தால் அலங்கரிக்கப்பெற்ற ஹம்சதூலிகாதல்பத்தில் சயனிப்பதைவிட்டு இந்த முரம்பில் உருத்துகின்ற தர்ப்பைப் புல்லின்மீது எப்படி கணவனில்லாமல் தனித்துப் படுத்துறங்குகின்றனை? மண்டையோட்டி லிரந்துண்ணுகிற அந்த ஜடனை ம்ருடனை நீ முந்தியே

தள்ளிவிட்டாய்; உன்னழகிற்குப் பொருத்தமான கணவன் தெய்வலோகத்திலுமில்லை. ஆனல், மூவுலகிற்கும் அதிபனன எங்கள் மகிடமன்னர் இருக்கிருர். அழகியபுருவங்களை உடையவளே! ஒருதரம் அவரை தரிசித்தாயாகில் உடனே இந்த தவத்தை விட்டுவிடுவாய். கபட வார்த்தைகளால் என்ன பயன்? உன்னுடைய வரலாறனைத்தையும் அறிந்து உன்னைக் கண்ட மகிடேந்திரப்பு மன்மத பாணத்தால் அடிக்கப்பட்டவராகி மூன்றுலகத்தையும் உனக்கே பட்டங்கட்டி சிங்காதனத்திருத்தி தான் உன் பொன்னடித் தொண்டுசெய்துகொண்டிருக்கக்கருதி உன்னை அழைத்துவர எங்களை அனுப்பினர் என்று பலவாறு பிதற்றினர். இவ்விதமான பொருத்தமற்ற வார்த்தைகளைக் கேட்ட தேவியின் சினக்குறிப்பை இங்கிதத்தாலறிந்த சேடி விஜயை அவர்களை அவமானப்படுத்தித் துரத்திவிட்டாள். அவர்கள் ஆச்ரமத்திற்கு வெளியில் சுயரூபத்துடன் நின்று சபதவார்த்தைகள் பலபேசி, நடந்த வரலாறுகளை தைத்யேந்திரனை மகிடனுக் கறிவித்தனர். அதுகேட்ட மகிடன், கராளவதனத்தில் கோபத்தால் கண்கள் கனலெனச் சிவந்துருள, தீச்சிகைபோன்ற செம்பட்டைமயிரசைய, அடிவைப்புதோறும் எண்ணற்ற வாவி கூபங்களை உண்டாக்கிக்கொண்டும், கொம்புகளால் மேகஜாலங்களைப்பிளந்து கொண்டும், காரலன், துர்த்தரன், விசக்ஷணன், விகாலன், துர்முகன், சண்டன், ப்ரசண்டன், விகடேக்ஷணன் முதலிய சேனபதிகள் பூமியை அதிரச்செய்துகொண்டு முன் செல்ல, வில், அம்பு, வேல், வாள் முதலிய படைக்கலங்கள் மின்னல்கள்போன் றிடையிலொளிரும் அறுபத்துநாலு கோடி அசுரர்களுடனும் நால்வகைச்சேனைகளுடனும் வந்து தேவியின் ஆச்ரமத்தைச் சூழ்ந்தனன். மூவர் தேவர்களுடன் இந்திரன் வந்து தேவியை வணங்கி "பராசக்தியே! நீ ப்ரம்ம விஷ்ணு ருத்ர மகேசுவர சதாசிவர்களின் உடலின்மேல்

ப்ராணசக்தியாகி விளங்குகின்றாய் யாதலின் 'பஞ்சப்ரேதா ஸநாஸீநா' (ஐந்து சவங்களின்மேல் வீற்றிருப்பவள்) என்றுன்னை ஆகமங்கள் ஓலமிடுகின்றன; ஸூத்ரதாரிணியாய் நின்று ப்ரபஞ்ச நாடகமேடையில் அவ்வைவரையும் நாடகம் ஆட்டுவித்து ஆட்டங்கண்டு களிக்கின்றாய்; அக்னி ஒன்றே எண்ணற்ற தீபங்களாய் ஒளிர்வதுபோல எல்லா ஜந்துக்களிலும் ஜீவரூபியாய் நீயே ப்ரகாசிக்கின்றனை; உமா தேவியே! முன்னொருக்கால் உன்னால் இடப்பட்ட சிறு துரும்பொன்றை அக்னி தேவனால் எரிக்கக்கூடவில்லை; வாயுதேவன் அசைக்க முடியாமல் அவமான மடைந்தான்; உபநிடத உத்தியானத்தில் ஓங்காரபஞ்சரத்துள் வசிக்கும் அஞ்சுகமே!" என்று துதித்து தங்கள் ப்ராணபலத்துடன் படைக்கல மனைத்தையும் தேவியினிடம் தந்து "பழிக்கஞ்சாப் பாதகனான மகிடாசுரனை வதைத்து எங்களை ரக்ஷித்தருள வேண்டும் பால் நினைந்தூட்டும் தாயினும் தயைகொண்ட அன்னையே!" என்று வேண்டி வரம்பெற்றுப்போயினன். அசுரர்களின் கோலாகல சப்தத்தைக்கேட்ட தேவி தவ நியமம் தடையுற்றதெனச் சிந்தித்து, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனமும் தவமே எனத்தேறி, துர்க்கையிடம் சம்மார சக்தியுடன் படைக்கலங்களையும் தந்து தைத்யர்களை வதைத்துவர ஏவினள். துர்க்காதேவி, இடிபோன்று கர்ஜிக்கின்ற கராளவதனச் சிங்கவாகனத்தி லாரோகணித்து திக்குகளின் இருளைப்போக்குகின்ற தந்தங்களொளிரும் உக்ரகோபச் சிரிப்புடன் தன்னுடைய அங்கங்களி லிருந்து எண்ணற்ற யோகினி கணங்களை சிருஷ்டித்தனள். பலர் கோபத்தால் துடிக்கின்ற இதழ்களுடன் கூடிய நான்கு முகமுடையவராய் பருத்த தண்டாயுத மேந்தி அன்னவாகனத்தில் வெளிவந்தார்கள்; பலர் நீண்ட ஒளிபொருந்திய வேலாயுதந்தாங்கி ஆறுமுகங்களுடன் மயில்வாகனத்தில் வெளி

வந்தனர்; சந்திர சூரியருடன் கூடிய ஆகாயமென சங்க சக்ரங்களைத்தாங்கிய நீலமேனியுடன் கருடவாகனத்தில் வெளிவந்தவர் எண்ணிறந்தவர்; உலக்கை கலப்பைகளைக் கைகளிலேந்தி வராகமுகத்துடன் கணக்கற்றவர் உற்பவித்தனர்; ஆயிரங்கண்களுடைய எண்ணற்றவர் வச்சிராயுதந் தாங்கி வெள்ளையானைப் பிடரியிலேறி வெளிவந்தனர்; சந்திரனை முடியிலணிந்து ஜ்வலிக்கின்ற சூலாயுதந்தரித்து மூன்று கண்களுடன் வெள்விடையின் மேலேறி வெளிவந்தவர் கணக்கற்றவர்; மின்னல்போன்ற கத்திகளை ஏந்தி வரிப்புலியின் மீதேறி வெளிவந்த யோகினிகள் எண்ணற்றவர்;வான்புரவிகளிலேறி கட்ககேடகங்களைக் கைக்கொண்டு கோபத்தாற் சிவந்த முகங்களுடன் மின்னல்கள் போல் வெளிவந்தவர் கோடா கோடிபேர்; இவரனைவரும் அறுபத்துநாலுகோடி அசுரசைன்யங்களையும் ஆச்ரமத்திற்கு வெளியில், சூரிய கிரணங்கள் இருட்கூட்டங்களை எதிர்த்தது போல எதிர்த்தனர். இருபடைகளிலும் பயங்கரமான யுத்தம் ஆரம்பமாயிற்று; சிங்கநாதங்களும் ரணபேரி அதிர்ச்சியும் ஆகாயத்தைப் பிளந்தன; யோகினிகளுடைய மின்னல் போன்ற அம்புகளால் முடிகள் துணிக்கப்பட்டு அசுரகளேபரங்கள் வெட்டுண்டமரங்கள்போல் பூமியில்வீழ்ந்து ரணகளத்தை மறைத்தன. மயிர்ப்பாசியின் மீதோடும் ரத்தவெள்ளத்தில் அசுரசிரங்களாகிற மகரமீன்கள் நீந்தின; காளி கூளி பைசாசங்கள் ஆனைகளின் வெட்டுண்ட தலைகளின் மீதேறி ரத்தமாகிற மதுவைக்குடித்து அசுரசிரங்களாகிற உடுக்கைககளுடன் தேவியின் புகழைப் பாடியாடின; காக்கை பருந்து கழுகுகள் வானத்தை அடைத்து வட்டமிட்டுப் பறந்து ரணகளமெங்கும் நிழல்செய்தன; நரி நாய்கள் குடர்களைப் பிடுங்கித் தின்று களித்து ஊளையிட்டுக் குரைத்தன, யுத்தகளத்தில் சேனைத்தலைவர் தவிர அசுர

சைனியம் யாவும் தேவி சைனியத்தின் வீராவேசக்கனலி டைப்பட்ட இந்தனங்களாயின. தண்டாயுதத்தால் ப்ராம்மி காாவலனைக் கொன்ருள். சுபிரனை மாகேசுவரி சூலத்தால் மாய்த்தனள். வேலாயுதத்தால் ஆசுரனை கௌமாரி வாட்டினள். வைஷ்ணவி சக்ராயுதத்தால் விகராளன் தலையைத் துணித்தாள். பாஷ்களனை வாராகி உலக்கையால் முடித்தனள். மாகேந்திரி துர்முகனை வச்சிராயுதத்தால் வானுல கேற்றினள், சாமுண்டி சண்டமுண்டர்களை கட்கத்தால் துணித்தனள். பிறகு மகிடாசுரன், வடவையும் குளிரக்கோபித்து உக்ரன், விகடாக்ஷன், காலநேமி என்னும் கணத்தலைவருடன் தேவியை நஞ்செனச் சீறி வந்தெதிர்த்தனன். தன்னுடன் வந்த சைனியங்களுடன் கணத்தலைவர் யாவரும் கணத்தில் தேவியின் அம்புகளால் அழிக்கப்பட, கோபத்தால் கருமேகம்போன்ற புகைமுகத்தில் தழல் விழி சுழல, மலைமுழைபோன்ற வாயில் எரிகின்ற அக்னி ஜ்வாலைபோன்ற நாவினுல் மலைப்பிளவுபோன்ற கடைவாயை நக்கிச்சுழற்றி, காலனை சக்ரமாகவும், காலதூதரே குதிரைகளாகவும், மிருத்யு தேவதையே சாரதியாகவும் உள்ள உயர்ந்த தேரிலேறி வில்லை எடுத்து குணத்வனி பண்ணி அம்பு மழையால் தேவியின் அங்கத்தை மறைத்தான். அதுகண்ட தேவி அர்த்தசந்திர பாணங்களால் அவைகளை அறுத்துத்தள்ளி பத்து பாணங்களை மகிடன் முகத்தில் அழுத்தினள். அவன் மலையருவி போன்று முகத்திலிருந்து பெருகிய உதிரவெள்ளத்துடன் கூடிய உடலை விட்டு ஐராவதம் போன்ற யானையாகி வந்தெதிர்க்க, தேவியின் சிங்க வாகனம் கர்ஜித்து அறைந்து வீழ்த்தியது; அதனுல் மாளாதவனுகி மீண்டு மீண்டும் பல மாயவடிவங்கொண்டெதிர்த்து கடைசியில் மகிடமுகத்துடன் வரக்கண்ட தேவி சூலத்தால் குத்தித்தள்ளி ஓங்கிய வாள்கொண்டு மைத்தடங்

குன்று போன்ற அவனுடைய உன்னத சிரத்தைக் கொய்து தன்னுடைய ஞானயோகிகள் இதயத்தை நிரப்பிய புனிதமான பாதத்தால் மிதித்து நிற்றலும், மாயை ஒழிந்து ஆவி யழிந்தனன் மகிடாசுரன். தேவர்கள் ஆரவாரித்துப் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. முனிவர்கள் வணங்கித்துதித்தனர். துர்க்காதேவி மகிடாசுரனுடைய கண்டத்தில் தங்கி யிருந்த லிங்கத்தை எடுத்தலும் அது அம்பிகையின் கரத்தை விடாதிருத்தலைக் கண்டு அதிசயித்து இது யாது காரணமென்று கௌதம முனிவரை வினவ "தேவர்களை அழிக்கத் தவம் புரிந்திருந்த அசுர குமாரி மாயைக்கு காலவரிஷியிடத்தில் இவ்வசுரன் மகிட முகத்துடன் உதித்து அரிய தவத்தால் பெண்கள் தவிர தேவர் மூவர் யாவராலும் சாவாவரம்பெற்று உயிர்களை வதைத்து உலாவித்திரிகையில் ஒரு தினம் பெரும்பசியால் விந்தியகிரியில் சிவபூஜை பண்ணிக்கொண்டிருந்த முனிவரொருவரை லிங்கத்துடன் விழுங்கிப்போனான்; அந்த சிவலிங்கமே அவன் கண்டத்தில் தங்கிநின்று உன் கரத்தைப் பற்றியது; உனது கட்கத்தால் ஒரு தீர்த்த முண்டாக்கி அதில் முழுகினால் அதுஉன் கையைவிட்டு நீங்கும்" என்றனர். அப்படியே ‡ தீர்த்த முண்டாக்கி முழுகி அந்த தீர்த்தக்கரையில் அவ்விலிங்கத்தைவைத்து பூஜித்தமர்ந்தனள் துர்க்கை.

தேவி வாமபாகம்பெற்றது:-உமாதேவி கௌதம முனிவர் உரைத்தபடி தவச்சாலையை விடுத்து ஆலயத்துட் சென்று ஆனந்தக்கடலாடி காணுங்காணங்களெல்லாம் இன்

---

‡ கட்க தீர்த்தமும் பாபநாசரென்னும் அந்த லிங்கமும் துர்க்காம்பா ஆலயமும் கௌரி ஆச்ரமத்தருகில் பவழக்குன்றடியில் விளங்குகின்றது.


பமுற அருணாசலேசரை தரிசித்து திருவிழாக்கண்டு அருந் தவசிகட் கன்னமளித்து கார்த்திகைமீ பௌர்ணமியோடு கூடிய கிருத்திகை ப்ரதோஷ சமயத்தில் மாசற்ற மணிமொழி களால், "எண்ணுவார் பிறவிநோய்கற்றும் சஞ்சீவியே! என் சிந்தையே மந்திரமாகக்கொண்டவரே! முக்கண் முதல்வரே! உம்மையன்றி மற்றொன்று மறியேன் காணங்களுடன் என் னுயிரையும் அமுதாக்கொண்ட எம்மானே!" என்று துதித்து நின்று, அருணாசலத்தின் முடியில் மின்னற்பிழம்பு போன்ற ஜோதி சூழ்ந்த சுடரொளியை கமலத்தைவென்ற கண்க ளால் தரிசித்து அதிசயித்து அடங்கா மகிழ்ச்சிகொண்டு, திருமகள் மதிக்க கலைமகள் துதிக்க சேடியர் புடைசூழ, யோகினிகணங்களுடன், தன்னொளியால் அருணகிரியை நீல கிரியாக்கி அடிக்கடி வணங்கி அச்சோதியில் வைத்த லக்ஷ்ய முடையவளாய் செங்கழுநீர்ப் பாதங்கள் மிகவும் சிவப்பேற மெல்லென ஊர்ந்து கிரிப்ரதக்ஷிணம் செய்தனள். மேற் றிசையில் உள்ளத்தொளிர்கின்ற பரமரை இடபவாகனத் தில் தரிசித்து, வடதிசைகடந்து கீழ்த்திசைவந்து கிரிமுகம் நோக்கி அஞ்சலிசெய்து இன்பம் பெருக செந்தேன் சிந் தும் பண்கலந்த மொழிகளால் துதித்து நின்றனள். அத்துதி களை செவிக்கமுதெனக்கொண்ட தேவதேவர் சிந்தை மகி ழ்ந்து பவளக்குன்றுச்சியில் வெள்ளியங்கிரிபோன்ற வெள் விடைமீது, செச்சைமலர் நிகர்த்த திருமேனியும் கச்சணி அரவமும் பொன்னை வென்ற புரிசடையும் மூன்று கண்க ளும் முடியணி மதியும் கொண்ட செழுஞ்சுடர் மூர்த்தி யாய்த் தோன்றினர். அம்பிகை தனது உடலிடங்கொண் டாரின் அவ்வற்புத கோலத்தை தரிசித்து அழலிடை மெழுகாய் அகநெக உருகி, அழிவிலா ஆனந்தவெள்ளம் உள்ளத்திலு முயிரிலு முணர்விலும் புகுந்து ஒழிவற நிறைந்து கரைபுரண்டோட பண்ணிய தவத்தின் பயனெய்

தப்பெற்றவளாய் தன்னை மறந்திருந்தனள். அதுகண்ட கருணை வள்ளலாகிய அருணேசர் இரக்கமுற்று தேவியின் தளிர்க்கரத்தை தமது பங்கயக்கரத்தாற்பற்றி வாமபாகத்தில் அமர்த்தி இனிய மொழிகளால் தேற்றி, "தேவி! முன்னம் கிரியாசக்தியா யிருந்த தாக்ஷாயணி உருவத்தை மறைத்து இமாசலத்தில் ஞானசக்தியாய் உதித்து உலகிற்கு தவத்தின் பெருமையை உணர்த்தி எம்மை அடைந்தனை; பிறகு நமதுவிராட் ரூபத்தை முனிவர்க்கு உணர்த்தவேண்டி எம்முடைய கண்களை உன் மலர்க்கரத்தால் மூடி சந்தேகம் தெளிவித்தனை; பின்னும் உன்னிடத்துதித்த அகில உலகங்களும் உஜ்ஜீவிக்கவேண்டி பால்கினைந்தூட்டும் தாயினும் பரிந்து காஞ்சியில் பக்தியின் மகிமையையும், அருணையில் ஞானத்தவத்தின் பெருமையையும் ஜீவர்களுக்கு உணர்த்தினை; நானே முக்குணங்களை ஆச்ரயித்து ருத்திர விஷ்ணு ப்ரம்மர்களென்னும் மூர்த்திகளாகவும் நீயே துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி என்கிற சக்திகளாகவும் நின்று முத்தொழிலையும் நடத்துகின்றோம்; இன்னும் உலகில் ஒளிர்கின்ற எல்லா மூர்த்தங்களும் நானே; அவற்றின் சக்திகளனைத்தும் நீயே; பூவும் மணமும் போலவும், கரும்பும் ருசியும்போலவும், பண்ணும் இசையும்போலவும் நாமிருவரும் எக்காலத்திலும் பிரிவதில்லை. இவ்வுண்மையை உணர்த்தி நீ என்னுடன் கலந்து நிற்கும் நம்முடைய விக்ரகத்தை விஷ்ணுப்ரம்மேந்திராதி தேவர்கள் எக்காலத்திலும் போற்றிப் பூசித்து வணங்கி இஷ்டசித்திகளை அடையக்கடவர்" என்று அம்பிகையை அணைத்தலும் மரகதப் பச்சையும் மாணிக்க மணியும் இடத்திலும் வலத்திலும் வைத்தமைத்தது நிகர்த்த திருமேனியும், கார்மேகமும் மின்னற்கொடியும் போன்ற கூந்தற் சடையும், அவற்றின் இடையில் மணமரு மந்தாரமாலையும் மதிநதி அரவமும் அணிந்து, கல

வைச் சாந்தும் கனல்விழி நீறும் கொண்டொளிர்கின்ற நெற்றியும், நவமணித்தோடும் சர்ப்பகுண்டலமும் கொண்ட திருச்செவிகளும், அலர்ந்த பைங்குவளையையும் பங்கயத்தையும் ஒத்த சந்திர சூரிய நேத்திரங்களும், நாஸாபரணம் விளங்குவதும் நன்குமிழும் போன்ற நாசியும், தந்தபந்திகளின் நிலவொளி செவ்விய இதழ்களின்மேல் தவழ அன்பர்மனத்தைக் கொள்ளை கொள்கின்ற இளநகையும், களபக்கழுத்தும் காளகண்டமும், கரும்பைமாலையைக் காட்டியதோள்களும், பொன்மணிப் பூண்களும் சர்ப்ப கங்கணமும் தரித்துஅபயவரதங்கொண்ட இருமலர்க்கரங்களும், கச்சணி பயோதரமும் கவாட மார்பும், இந்தீவரமும் எழிற்கொன்றைமாலையும், அகிலமும் வைத்தும் அதையிடம்வைத்ததுமான மணிவயிறும், சித்திரப்பட் டாடையும் செழும்புலித்தோலும் உடுத்திய இடையும், பைம்பொற் சதங்கை பரிபுரமும் விடநாக வீரகண்டையும் தரித்த கணைக்கால்களும், தன்னை நினைந்தவர்க்கு அணிமாதி அஷ்டசித்தி போகங்களையும் இடையறுப் பூரணவானந்த முக்தி பதத்தையும் தந்தருளும் செந்தளிர்ப் பொற்பாதங்களும் கொண்டு உயிரும் உள்ளமும் ஒரு பாகத்தியது மற்றொரு பாகத்தில் நிலைத்துநிற்க ப்ரஜ்ஞானத்தால் ஒன்றுபட் டொளிரும் முழுதுமானர் மலைமகள் பாதியராய் உடையாளும் உடையவரும் ஒருருவமாகி "பசுங்கிரணம் சூழ்ந்த பால மார்த்தாண்ட,"ரென அர்த்தநாரீச்வரராய் அமர்ந்தனர். அந்தர துந்துமி மேகமென முழங்க தும்புருநாரதர் வீணையில் சாமகானம் செய்ய, தேவர்கள் தேன்சொரியும் மலர்மாரி பொழிந்து முனிவர்களுடன் தரிசித்து ஆனந்தமடைந்தனர். அருணாசல மாகாத்மியத்தை இவ்விதம் நந்தீசரிடமிருந்து கேட்ட மார்க்கண்டேயர் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருக பேரானந்தக் கடலுள் மூழ்கினர்.

வாழ்த்து.

வாழி சோபன மாதுமை யாமரு
ளாழி சூழரு ணாசல மான்மிய
மூழி வாழவு ணர்வுற வோதுவா
ரேழி வீடுல கின்புற சோபனம்.



அருணாசல மாகாத்மியம்.

ஸம்பூர்ணம்.

க்ஷேத்திரக் காட்சிகள்.


நகரம்:— திருவண்ணுமலை என்னும் பட்டணமானது தொண்டை மண்டலத்தின் திலகம் போன்றதும் மலைவளம் மலிந்ததுமானதோ ரழகிய குறிஞ்சி நிலப்பேரூர். இவ்வூரை ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்குமுன் வல்லாளராஜனும், கி—பி 1450ல் ப்ரபுடதேவராஜனும், 1529ல் கிருஷ்ணதேவராயனும், பின்னர் சுப்பாஜிராவ் முதலிய அரசரும் ஆண்டு வந்தனர். வெறுவெளியில் உயர்ந்த பீடபூமியில் விண்ணளவு குடுமிக் குன்றமும், அதனை யடுத்து கிழக்கில் குழவிக்குன்றுகளென வான்வைத்த மேனிலைக் கோபுரங்களையும் புறமதில்களையுமுடைய சிவாலயமும், ஆலஞ்சூழ்ந்த ஆகாயத்தை அடைத்துயர்ந்த மாளிகை வீதிகளும் ஒன்றினுக்கொன்று அணியென அமைந்து இந்நகரை அலங்கரிக்கின்றன. இந்நகரிடையில் பற்றற்ற தன்மை வாய்ந்த சேஷாத்ரி ஸ்வாமிகளென்னும் பெரியார் வசிக்கின்றார்.

சேஷாத்ரி ஸ்வாமிகள் சரிதம்:— பூமண்டலத்தில் முத்திநகரங்களுக்குள் முதன்மையானதும், வேகவதி நதி தீரத்திலுள்ளதும், தொண்டைமண்டல ராஜதானியுமாகிய காஞ்சிமாநகரில் அந்தணர் மரபின் பௌரகுத்ஸ கோத்ரதிலகரான சேஷாத்ரி ஜோஸ்யர் குமாரர் புரோகிதம் வரதராஜ ஜோஸ்யருக்கும், வித்வான் காமகோடி சாஸ்திரிகள் குமாரி கற்பிற்சிறந்த மரகதாம்பாவுக்கும் கலி 4970 சுக்கில௵ தைமீ ஹஸ்த நக்ஷத்ரம் தனுர் லக்னத்தில் ஸீமந்தபுத்ரரா யுதித்து சேஷாத்ரி என்னும் திருநாமம் பூண்டு வளர்ந்து வருங்கால் பெற்றோர்கள் அன்னாரின் இளம்பருவத்திலேயே காலகதி யடைய சிறிய தந்தை ராமஸ்வாமி ஜோஸ்யரும் சிறிய தாயார் கல்யாணியம்மாவும் ஆத

ரவாய் வளர்த்து வந்தனர். வித்யாப்யாச முதலிய சுபச் சடங்குகள் நடந்தேறியதும் வேதாத்யயனம் செய்து காஞ்சிபுரம் வரதராஜபெருமாள் ஆலயத்திலுள்ள சாஸ்த்ர பாடசாலையில் படித்து காவியம், நாடகம், தர்க்கம், மீமாம்ஸை, ஜோதிஷம், வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களில் இருபது வயதிற்குள்ளாகவே வல்லவரானார். பிறகு அருணாசலத்தின் சித்திரபடமொன்றைத் தாமாகவே எழுதி அமைத்து வீட்டில் பரம்பரையாய்ப் பூஜித்துவந்த காமகோடி பீடத்தின்மேல்வைத்து நாடோறும் ஆராதித்து வந்தார். இரவில் காமாக்ஷி அம்மையின் ஆலயத்திற்குட்சென்று மூக பஞ்சசதி ஸ்தோத்ரத்துடன் நூற்றுக்கணக்காக வலம் வந்து நடுநிசியில் வீடுவந்து சேர்வர். இருபத்திரண்டாம் வயதுவர கர௵ ஆடி௴ கடைசி வெள்ளிக்கிழமையன்று அவ்வூர் சர்வதீர்த்தக்கரையில் தீர்த்தேச்வரஸ்வாமி சன்னிதியில் உத்தரதேசத்திலிருந்து வந்திருந்த கௌடஸன்யாஸி அவதூத பாலாஜி ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று மூன்று மாதங்களுக்குப் பிறகு சிறிய தந்தை விவாகத்திற்கு எத்தனித்தகாலையில் வீட்டைவிட்டுப்போய் பெரிய காஞ்சிபுரம் கங்கை கொண்டான் மண்டபத்தின் ஆஞ்சநேய ராலயத்தில் ஒரு மண்டலமும், ஏகாம்பரேசர் ஆலயத்துள் ஆயிரக்கால் மண்டபத்தில் மூன்று மாத காலமும் புத்தி சுவாதீன மற்ற உன்மத்தர்போல் அருணாசலத்தை தியானித்திருந்தனர். அக்காலையில் சிறிய தந்தை முதலிய சுற்றத்தார் சென்று வருந்தி யழைத்தும் வீடு திரும்பாதவராய், சேலம் ஜில்லா காவேரிப்பாக்கத்திலுள்ள பந்துக்கள் வீட்டில் சிலநாளிருந்து திருப்பத்தூர் சென்று ஜவ்வாது மலை வழியாய் திருவண்ணாமலைக்குக் கால்நடையாக வந்துவிட்டார். இவருடைய சிறியதாய், தந்தை, தம்பி முதலிய பந்துக்கள் சிலநாள் கழித்து இருப்பிடமறிந்து வந்து அழுது

வருந்தி ஊருக்கு வரும்படி அழைத்து,உடன்செல்ல மறுத்து விடவே ஆசையற்றவராய் ஊர் திரும்பினர். வந்தவர் மாயா காரியமான பொருட்சார்பு,உடற்சார்பு,உயிர்ச்சார்பென்னும் புறச்சார்பு அகச்சார்புகளையகற்றி, இரவு பகல், சுத்தமசுத்தம், உறவு பகை, செல்வம் வறுமை, கீர்த்தி நிந்தை, வீடு கானகம், ஆண் பெண், நல்வினை தீவினை என்கின்ற த்வந்த்வங்களற்று, ஓடும் பொன்னும் ஒப்பக்கண்டு, ஜாதி பேதம், குணம் குறி, விதி விலக்ககன்ற ஐயமற்ற அதிவர்ணாச்ரமிகளாகி மாசற்ற நெஞ்சினராய், பித்தன், பேயன், பாலன் போலத் தெருக்கள்தோறும் திரிந்து ஆடிக்களித்து நியமமற்று கிட்டியவற்றைக் காட்டுத்தீப்போற்புசித்துஜீவன்முக்தராய் இன்றும் ப்ரகாசிக்கின்றார். திருவண்ணாமலை நகரத்தில் மகாமாரி (ப்ளேக்) பாவி ஊர் காலியாயிருந்த காலத்தில் அரசாங்கத்தார் ஊரினுள் ஒருவரும் நுழைந்துலாவக் கூடாதென கட்டளையிட்டிருந்தார்கள், உடலும் உயிரும் துரும்பென மதித்து பற்றொன்றில்லாப் பரமயோகியாய் உலகை மறந்த இத்தவப் பெருந்தகை அக்கட்டளையை மதியாது ஊருக்குள் உலாவித்திரிவதைக்கண்ட அதிகாரிகள் இவரைச் சிறைச்சாலையிலடைத்து ஒரு மாதம் வைத்திருந்தனர். சிறைச்சாலையே தவச்சாலையாக ஆனந்தத்திற்கொரு குறைவுமின்றி வைதாரையும் வாழ்த்தினாரையு மொன்றாய்க்கண்டு வசிக்கும் இப்பேதமற்றஞானியின் பெருமையை உணர்ந்த அரசாங்கத்தார் இவரை விடுவித்து இஷ்டப்படி இருக்க இசைந்து வாளாவிருந்தனர். பிறகு, கீணாற்றூர் சென்று சிலகாலம் வசித்து நகரத்தில் ஜனங்கள் குடிபுகுந்ததும் திருவண்ணாமலைக்கு வந்து அதுமுதல் முன்போல் இன்றுமிருந்து வருகின்றார்.

ஆலய அமைப்பு:—அருணாசலேச ராலயத்தின் முதல் ப்ராகாரமானது திரிவிக்கிரமனென மண்ணையும் விண்



ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்.

திருவண்ணாமலை

லேயும் அளந்து உயர்நிலே சித்திர கோபுரங்களேயும் புற மதிற் சுவர்களேயும் நாற்புறமும் உடையது. இதன் உத்தர கோபுரம் மாத்திரம் இருநூறு ஆண்டுகளுக்கு முந்தி இருந்த அம்மணி அம்மாள் என்னும் யோகினியால் கட்டப்பட்டது. மற்றவையும், ஆயிரக்கால் மண்டபமும், இன்னும் பலவும் இந்நகரை ஆண்ட கிருஷ்ணதேவ ராயரால் கட்டப்பட்டன. இதனுட்புறம் சிவகங்கையும், சித்திவிநாயகர் ஆலயமும் அழகுற அமைந்துள்ளன. இத்தீர்த்தக்கரையிலுள்ள கம்பத்திளேயனர் என்னும் குமரக்கடவுள் ஆலயம் ப்ரபுடதேவ ராஜனல் கட்டப்பட்டது. இதன் வரலாற்றை கீழ்க்கண்ட சரிதத்திற் காணலாம்.

அருணகிரி நாதர் சரிதம்.

கம்பத்திளேயனர் துதி.

சந்த விருத்தம்.

செம்பொற் சிலேயென மயிலென வுருதிக
  ழஞ்சப் பெடையென பிடியென நடைபயில்
  செஞ்சொற் கிளிமொழி அமுதென கழையெனு-மிசைமானர்-
சிந்தைக் களவொடு மவர்தரு கலவியி
  னண்புற் றுடல்பிணி யுறமிகு மிடிவர
  சிங்கக் கவியுய ரருணகி ரிசிகரி—மிசையேறி;

கும்பிட் டுளநெகிழ் வுறசிவ குருபர
  இந்தச் சகமதி லினியொரு கதியிலே
  கொண்டிப் புலேயனே குறிகொள வெனபுவி—விழுபோழ்தின்-
கொண்டற் கணமின லெனவொளி பளிரென
  முந்திட் டவனுடல் சிதைவற வருள்தரு
  குன்றைத் துளேயிடு குமரனே துதிபுகழ்—பலபாட;

சம்பத் திடைவளர் பிரபுட நரபதி
மன்றத் துயர்கவி சமணனு மொருவிசை
சந்தக் கவிகொடு முருகனை யெதிர்தரு—கெனவோத-
தங்கச் சிகரம துயரரு ணையில்சிவ
கங்கைக் கரைவட திசைவளர் சபைதனில்
தம்பத் திடையெழு நரஹரி யெனபுவி—நரர்தேவர்;


கம்பித் துமைசுத குகஜய ஜயவென
தண்டைப் பரிபுர மொலிகவிர் கவிரென
கஞ்சத் துடிசல ரிகல்டிமி டிமியென—நடமாடி-
கண்டொத் திடுமொழி குறமக ளிபமக
ளின்பப் புயமயில் கொளமயில் மிசைவரு
கம்பத் திளையவ சமசர வணபவ—பெருமானே.

அருணகிரி நாதர்:— உதயகமலமென அலர்ந்த ஞானிகள் இதய கமலத்தில் ஆதியந்தமில்லா அளப் பருஞ்ஜோதியாய் நின்றொளிரும் ஈசன் கருணையார் மலையா யெழுந்திலங்கும் திருவண்ணுமலை நகரத்தில், சத்திவேற் குமரனை நித்தியம் பத்திசெயயும் முத்து என்னும் ருத்திர கணிகையின் குலவிளக்கென பண்டைய தவத்தின் பயனாக கலி நாற்பத்தாரும் நூற்றுண்டில் கொற்றவேற் குமரன் தொண்டர்தம் மணியாம் அருணகிரி நாதர் அவதரித்தனர். இவருக்கு ஆதி என்னும் ஒரு தமக்கையும் உண்டு. இவருடைய இளம் பருவத்திலேயே குமரக்கடவுளருளால் பிறந்த இக்குமரனை மனங்கோணுமல் வேண்டியவை யளித்துக் காக்கும்படி ஆதியம்மையினிடம் ஒப்புவித்து தாய் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினள். தாய்க்குத் தந்த உறுதி மொழி தவருமல் தமக்கையும் அருணகிரியாரைப் பள்ளியில் வைத்து அன்னையினும் பரிவொடு ஆதரித்து வந்தனள். பாலப் பருவங்கடந்தவுடன் கணிகைமாத

ருறவு கொண்டு அன்னாரின் மாயா மோகன மதன ஜால விநோத வித்தைகளில் கட்டுண்டு மோகாந்தகாரத்திற் படிந்து அன்னார் அமளியில் இரவு பகலாய் கூடிக் களித்து அன்னை ஈட்டிய பொருள்கள் யாவையுந்தந்து அதற்கீடாக தொழுநோயைக் கொண்டனர். தமக்கை வறுமையால் வருந்துவதையும் தான் பெருநோய் கொண்டதையும் கண்டு மனந்தளராமல் மீண்டும் உடன் பிறந்தாளை அணுகி விலை மாதருக்குத் தர பொருள் கேட்டலும் அவ்வம்மை இல் லாமைக்கு மெத்த வருந்தி தம்பியைநோக்கி, "நானே வறுமை யால் வாடுகின்றேன்; அன்னையோ உன் மனங்கோணாமல் நடந்து கொள்ளும்படி ஆணை தந்து போயினள்; உன்னு டைய காமநோயைத் தணிப்பதற்கு என்னையே மருந்தா கக் கொள்ளக்கடவை; இதுவே இச்சமயத்திற் கேற்றயுக்தி" என்றனள். உள்ளபடியே காமநோயை முற்றிலும் துரத்த வல்ல கொடுங்காமுகரும் விரும்பத்தகாத அவ்வார்த்தை செவியிற் புகுந்து உள்ளத்தைச் சுட தம்முடைய தவறுகளை உணர்ந்து கணமும் முன் நில்லாது ஓடிப் போய் குன்றென உயர்ந்த வல்லாளராஜன் கோபுரத்துச்சியிலேறி மனங் கரைந்து கண்ணீர்சோர சரவணபவனை நியானித்துக் கூப்பிய கையராய் இதுகாறும் இயற்றிய தம்முடைய தவ றுகளை விண்ணப்பித்து என்னை ஆட்கொண்டருளும் கருணை வள்ளலே! என்றிரந்து ஆர்வமிகக் கூவி பூமியிற் குதித் திட்டார். குதித்தவர் முன்னிலையில் மேகக்கூட்டங்களின் இடையில் நின்றெழுந்த மின்னற்பிழப்பென ஓர் ஒளி உண் டாக அதினின்றும் அருள்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும் பொருள்கிடந்த சொற்பொலிவுங் கொண்டு முருக பிரான் முன்னின்று அன்பனைக் கரத்திலேந்தி பூமியில் விடுத்து திருநீறணிவித்து சட்சு தீக்ஷைசெய்து ஷடாக்ஷ முப தேசித்து ஜபமாலை தந்து தாயாகிய முத்தம்மையின்பெயரை

முதலாகவுடைய "முத்தைத்தரு" எனத்தொடங்கி நம் புகழை நித்தலும்பத்தியுடன்பாடி சித்திபெறுக என்றனுக்ரகித்து கோபுரத்தைஅடுத்து வடபாலுள்ள கோலமிகும் வேலாயுதக்கடவுளின் முன்பாக ஒரு ஜோதி தோன்ற பிம்பத்துள் மறைந்தனர். அதுமுதலாக கௌபீனதாரியாய் முருகவேள் தடுத்தாட் கொண்ட விந்தையையும் கருணைத்திறத்தையும் எண்ணி எண்ணி அகமகிழ்ந்துஆர்வங்கொண்டு மோகமின்றுருறவு கொண்டு தான் பன்முறை பட்ட கஷ்டங்களையும் அன்னாரின் தீச்செயல்களையும் பிரபஞ்ச மாயா விநோத மனோதுக்கங்களையும் முற்பகுதியில் வைத்து குமாரக்கடவுள் கொற்றவேல் கொண்ட தோள் திறத்தையும், மறைமுடி-விளங்கும் தாள் திறத்தையும் ஞானவமுதக்கடல் மடை திறந்தாலென அற்றவர் நற்றவர் பாவலர் நாவலர் முதல் யாவரும் இன்ப ரஸத்தை செவியென்னும் வாயாற் பருகி இன்புற தேனூறு செந்தமிழ்ச் சந்தப் பனுவல்களால் துதிப்பாராயினர். இதையறிந்த தமக்கையார் வந்து துக்கித்து எதன்பொருட்டு இவ்வேடங்கொண்டனை? "என் விடத்தினுங் கொடிய சொல் உன்னிதயத்தைச் சுட்டது போலும்" என்று கதறிப்பதறி கண்ணீரருவி சோர துக்கக் கடலுள் மூழ்கினள். அடிகள், "நீயே என்னுடைய குல தெய்வம்; வேறு விதமாய் நினைத்தேனே யாகில் மீளா நரகிடைவீழ்வேன்; எனக்குக் கிடைக்கும் குமரக்கடவுள் அனுக்ரகத்தில் உனக்கும் பங்குண்டு; எய்தவனிருக்க அம்பென் செய்யும்" எனத்தேற்றி அனுப்பினர். அவ்வம்மையும் அக்கட்டுரையைக் கேட்டு, உற்றவாறெல்லாம் உணர்ந்து தாய் சொல்லை நினைத்து நம் தம்பி தீச்செயலனைத்தையும் விடுத்து நன்னெறிச்செல்லாம் நாயகமணி யாகினனே என்று சந்தோஷங்கொண்டு இல்லமேகினள். குமரனருளால் அடி-களைப்பற்றி யிருந்த குட்டநோயும் எட்டி விலகியது. முன்





அருணகிரியாருக்கு உபதேசம்

னட்புகொண்ட கணிகையர் வந்து மீண்டும் சுவாமிகளை மயக்க, முருகவேளருளால் மனம் உரம்பெற்று வசப்பட்டிலர். விஜய நகரத்து அரசவம்சத்திற் பிறந்த பிரபுட தேவ ராயன் திருவண்ணாமலையை அந்நாளில் ஆண்டுவந்தான். அவ்வரசனது ஆஸ்தான பண்டிதனான சம்பந்தாண்டான் என்னும் சமணகவி தேவியினருளென்னும் உயர்பதம் அடைந்தும் அடக்கமின்றி கல்விச்செருக்கால் அருங்கவிப் புலவர்சிகாமணியாம் அருணகிரிநாதரை அவமதித்து அழுக்காறுகொண்டு அரசனை வற்புறுத்தியேவி குமாரக்கடவுளை காட்சிதரும்படி அருணகிரி அடிகள் செய்வதென்றும் தான் தேவியைக் காட்சிதரச் செய்வதாயும், முடியாதவர் ஊரைவிட்டு ஓடவேண்டியதென்றும் சூளுரைத்து ஒரு நாளும் குறிப்பிடச்செய்தான். குறித்தநாளில் தான் கற்ற மந்திரங்களின் இயக்கத்தால் தேவியை அரசனுக்குக் காட்சி தரும்படி வேண்டியன செய்து வேண்டியும் பயனில்லா தொழிந்தது. அது கண்ட சமணகவி அரசனை நோக்கி, "நீரே தேவியை உபாசித்தாலன்றி அம்பிகையின் காட்சி உமக்குக் கிட்டுவதரிது" எனக்கூறி வாளாவிருந்தான். இதுகேட்ட அரசன் அருணகிரி நாதரென்னும் அருட்புலவரை வேண்டலும் அடிகள் அருணாசலேச ராலயத்தின் சிவகங்கைக்கு வடபுறமிருக்கும் மண்டபத்தின் வடகீழ்த்தம்பத்தில் முருக வேளைக்காட்சி யளிக்கும்படி வேண்டி "அதல சேட னாராட" என்னும் பாடலைப் பாடியவுடன் "ப்ரஹ்லாதாழ்வாரின்வார்த்தையை மெய்ப்பிக்கத் தம்பத்திடை தோன்றிய நரசிங்கம்" போல வெற்றிவேல் தாங்கிய கொற்றமுருகர் மயில்மீதாரோகணித்தவண்ணம் பிரபுடதேவராயனுக்குத் தூணிடை தோன்றி காட்சி யளித்தனர். அது கண்ட அரசன் மிகக்களித்து அவ்விக்ரகத்தின் முன்னணியில் விசித்திரமான ஆலயங்கட்டி வழிபட்டனன். [இந்த கம்பத்திளையனார் என்னும் மூர்த்தி

யின் ஆலயமே இங்குள்ளது]. சம்பந்தாண்டான் அரசனால் நாடு கடத்தப்பட்டான். அக்கால் பெண்ணைநதி தவழும் நடுநாட்டில் சனியூர் வைணவ பிராமணகுலத்தில் ஜனித்து, சங்கத்தமிழ் நூல்களிலும் வடமொழியிலும் சிறிய ஆராய்ச்சியுடைய ஒப்பற்ற பாவலராய் விளங்கிய வில்லிபுத்தூராழ்வார், சேர நாட்டை பரிபாலித்து வந்த "வரபதி யாட்கொண்டான்" என்னும் அரசனின் ஆஸ்தான வித்வானாய் அமர்ந்து அவ்வரசன் விருப்பத்தின்படி மகாபாரத காவியத்தை தென்மொழியில் மொழி பெயர்த்து வடமொழித் தொடர்களையும் இனிய ஓசைதரும்படி விரவியமைத்து விருத்தப்பாக்களினால் அழகாகப்பாடிக்கொடுக்க அவன் களிப்படைந்து வேண்டிய ஆடையாபரணங்கள் தந்து கட்டாரி ஒன்று விருதளித்து அஞ்சாப்பட்டயமுந்தந்தான். அவ்வாளைப்பெற்று தமக்கெதிரில் சந்தம் பாடித் தோற்றவர்களின் காதைக்கொய்து தமிழ் நாடெங்குஞ்சுற்றி வாதப்போரில் வெற்றிபெற்று ஈடற்ற கவி குஞ்சரமாய் மதங்கொண்டுலாவினர். நமது அருட்புலமை வாய்ந்த சந்தக்கவிச் சிங்கமாகிய அருணகிரிநாதர் அந்தமிகு சந்தப்பாவினால் கந்தப்பனைப்பாடும் விந்தைப் புகழைக்கேட்டு மாச்சரியங்கொண்டு இவரோடு வாதப்போர் நிகழ்த்த ஆவல் கொண்டு அருணையம்பதிக்கு வந்த வில்லிபுத்தூரார், சிந்தைக்கினிய செவிக்கமுதச் சந்தங்களைக்கேட்டு வியந்தனரேனும் பொறாமை கொண்டு அரசனை மத்தியஸ்தனாக வைத்து வாதப்போர் தொடர்ந்தார். இருவரும் ஒருவர் கூறிய பாடலுக்கு மற்றவர் பொருளுரைத்து வருங்கால் பேரறிவாளராம் அருணகிரியார் பாடிய "கந்தரந்தாதி" யின் 54-ம் பாடலாகிய "திதத்தத்தத்" என்ற தகரவர்க்கத்தில் ஒரு மெய்யால் கலந்து வரும் பாடலுக்குப் பொருள் தோன்றாது விழிக்கப் பின்னர் அருணகிரிநாதரே பொருளுரைத்து வாதப்போரில் வெற்றி பெற்று வாகை சூடினர். வில்லிபுத்தூரார்


வெட்கி தமது வாளை யெடுத்து அருணகிரிநாதர் பால் வைத்து, "நானே தோற்றேன்; இனி உமதிஷ்டப்படி செய்துகொள்ளலா" மென்றார். அடிகள் அவர்பா லிரங்கி வாளுடன் அவர் செவியையும் அவருக்கே தான மீந்து, இனி யாரையும் செவியைக் கொய்யாது விடும்படி ஆக்ஞை தந்தனுப்பினர். இச்செய்கையால் அடிகளின் புகழொளி குன்றிலேற்றிய விளக்கென எங்கும்பிரகாசித்தது.

பின்னர் திருவருணையிலிருந்து சுப்பிரமணிய ஸ்தலங்கள் தோறுஞ் சென்று திருப்புகழ்பாடி ஆங்காங்கு பற்பல விசேஷ காட்சிகளும் அனுக்ரகமும் அடைந்து மீண்டும் திருவருணைக்கு வந்து முருகன் திருவருளால் மணற்கேணி ஊற்றெனப் பற்பல திருப்புகழ்களும் கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலிய அரிய பலநூல்களும் பாடி பாசமயகோளரியாய் கௌமாரசமயத்தை நிலைநாட்டி அமர்ந்தனர். முன் அருணகிரியாரிடத்தில் அசூயை கொண்டு சூளுரையிற் றோற்று நகரை விட்டோடிய சம்பந்தாண்டான் பொறாமை மேற்கொண்டு மீண்டும் அரசனை அடுத்து உறவு கொண்டு அருணகிரி நாதரை பாரிஜாதமலர் கொண்டுவந்து தரும்படி வேண்டிக்கொள்ளத் தூண்டினன் என்றும், அடிகள் உடலை கோபுரத்து மேல்நிலையில் ஓரிடத்தில் வைத்து பரகாயப்ரவேச மென்னும் சித்தி கொண்டு கிளியுடல் தாங்கி புஷ்பங் கொணரச் சென்றிருந்த காலையில் சம்பந்தாண்டான் உடலைத்தேடிக் கண்டு பிடித்து எரியிலிட்டன னென்றும், புஷ்பங் கொணர்ந்து ஆலய வாயிற் கோபுரத்தில் கிளி யுருவத்துடன் அமர்ந்ததால் அதற்கு கிளிகோபுரமென்று பெயர் வந்த தென்றும், அரசனிடத்தில் புஷ்பத்தைக் கொடுத்து தமதுடலம் எரிவாய்ப்பட்டதை எளிதிலுணர்ந்து கிளியுருவ மாகவே முருகக்கடவுள்பால் அமர்ந்தன ரென்று சிலரும், திரிபுர சுந்

தரி தேவியின் கரத்தமர்ந்தன வென்று சிலரும் கூறி "துகளில்சா யுச்சியக் கநியையி றற்றசொற் சுகசொரூ பத்தைபுற் றடைவேனே" என்கின்ற அன்னரியற்றிய திருப்புகழையே ஆதாரங் காட்டுகின்றனர். அருணசலே சராலயத்தின் மூலஸ்தானத்திற்கு மேற்புறத்தில் சிறிய பிம் பத்துடன் அருணகிரி நாதரின் சமாதி இன்றும் விளங் குகின்றது.


நான்கு கோபுரங்களையுடைய இரண்டாவது ப்ராகார மும் அதனுட்புறத்தில் புரவி மண்டபமும் இந்நகரை ஆண் டுவந்த சிவபத்தியிற் சிறந்த வல்லாளனென்னும் அரசனல் கட்டப்பட்டன. மற்ற மூன்று ப்ராகாரங்களுடன்கூடிய உண்ணமுலை பங்கர் அண்ணமலையார் ஆலயமானது, "ஒரு சித்தபுருஷனுடைய அவயவ அமைப்பைப்"போல நவநிலை களை ஒன்பது கோபுரங்களாகவும், பஞ்சகோசங்களை ஐந்து ப்ராகாரங்களாகவும், ஸஹஸ்ரார சந்திரபுஷ்கரிணிகளை ஆயிரக்கால் மண்டபம் சிவகங்கைகளாகவும், இதயகமலத் தில் பஞ்சகோசாந்தர்கத ஆத்மாவே சிவலிங்கமாகவும்,ப்ராண சத்தியே அபீதகுசநாயகியாகவும் தத்துவார்த்தத்திற்குப் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

தீபோத்ஸவ தரிசனம்:— கார்த்திகை தீப ப்ரம் மோத்ஸவமானது கார்த்திகைமீ உத்திராடத்திற் கொடி யேறி கிருத்திகை நக்ஷத்திரத்தோடு முடிவுபெறும். த்வ ஜாரோகணம் முதலாக ஒன்று: அதிகார நந்தி பஞ்சமூர்த்தி களும், இரண்டு: சூரியப்பிரபை வெள்ளி இந்திர விமானமும், மூன்று:பூதவாகனமும், நான்கு: வெள்ளி காமதேனு கற்பக விருக்ஷங்களும், ஐந்து: வெள்ளி ரிஷப வாகனமும், ஆறு: வெள்ளித்தேரும், ஏழு: மகாரதமும், எட்டு: பிக்ஷாடனரும் ஒன்பது: கைலாசவாகனமும் கொண்ட அருணேசரின் வீதி



ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்.

திருவண்ணாமலை



ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்.

திருவண்ணாமலை

வல உத்ஸவங்கள் முறையாக நடந்து பத்தாவது தினம் விடியற் காலையில் அருணாசலேசுவரர் ஆலய மூலஸ்தானத்தில் பரணி தீபதரிசனமும், மாலை ப்ரதோஷ சமயத்தில் பஞ்ச மூர்த்திகளும் பரணி தீபத்துடன் ஆலய வாசலில் வந்து காக்ஷி கொடுக்கும் தருணத்தில் மலை உச்சியில் "க்ருத்திகை தீப" தரிசனமுமாகும்.


கிரிவலத்தோற்றம்:— அருணாசலேசர் ஆலயம், அதனுள் ப்ரம்மதீர்த்த சிவகங்கைகள், சன்னிதியில் சக்ர தீர்த்தம், கிழக்கில் இந்திர தீர்த்தம் (ஐயன்குளம்) லிங்கம், அக்னி தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பாலி தீர்த்தம், இவை வரிசையாய் அமைந்துள்ளன.

ஸ்ரீ ரமணாச்ரமம்:—ஸ்ரீ ரமண மகர்ஷிகளென்னும் இப்பெரியார் பாண்டிய நாட்டின் திருச்சுழியல் என்னும் தலத்தில் வக்கில் சுந்தரமையர் என்கிற அந்தணகுல திலகருக்கும் சதி அழகம்மைக்கும் அருந்தவப்புதல்வராய் கலி 4980 பிரமாதி ஸம்வத்ஸரம் மார்கழி௴ புனர்பூச நக்ஷத்திரத்தில் உதித்து அருணாசல ஸ்மரணையுடன் வளர்ந்து மதுரை ஆங்கில கலாசாலையில் ஆறுவது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது பதினேழாவது வயதில் தந்தையின் தாலை நாடிச்செல்வதாய் ஒரு சீட்டெழுதி வைத்து வீட்டில் ஒருவருடனும் சொல்லாமல் ரயில்வண்டியேறி திருவண்ணாமலைக்கு வந்து துறவுகோலம் பூண்டு ஆன்ம நிஷ்டராய் இருபத்தாறு வருடங்களாய் இத்தலத்தில் பல இடங்களிலிருந்து, ஆறு ஆண்டுகளாய் இங்கு தாயார் சமாதி யருகில் வீற்றிருக்கின்றனர். மகர்ஷி ரமண சரிதம் என்னும் தனிநூலில் இம்மகானுடைய வரலாறு விரித்துரைக்கப்பட்டிருக்கிறது.


இதற்கப்பால் பலாக்கொத்து தீர்த்தம், யமதீர்த்தம், இதன் தென்புறம் அகஸ்திய தீர்த்தம். துருவாசாச்ரமம், ஸ்தலநதி சோண தீர்த்தம், நிருதி தீர்த்தம், உண்ணாமுலையம்மன் தீர்த்தம், திலோத்தமைக்கு அபயந் தந்த வேடப்பர் ஆலயம், திரிமூர்த்தி தரிசனம், கௌதமாச்ரமம், சூரிய லிங்கம், வருணதீர்த்தம், அடியண்ணாமலை என்னும் சிற்றூரின் இடையிலுள்ளதும் அழகிய ஆலயத் திருப்பணியால் சிறப்புற்றதுமான ப்ரம்மாவால் பூஜிக்கப் பெற்ற அருணாசலேசலிங்கம், வாயு தீர்த்தம், குபேர தீர்த்தம், இதன் வடக்கிலுள்ள வசிஷ்ட தீர்த்தம், பஞ்சமுக தரிசனம், அழகிய சோலை சூழ்ந்த தீர்த்தக்கரையிலுள்ள பச்சையம்மன் கோவில், ஈசான தீர்த்தம் இவைகள் முறையாய் உள்ளன.

ஈசானியஞான தேசிகர் சமாதியும் மடாலயமும்:— இம்மகான் கலி நாற்பத்தெட்டாம் நூற்றாண்டில் வட ஆர்க்காடு ஜில்லா ராயவேலூரில் வேளாளர் மரபி லுதித்து கந்தப்பதேசிகரென்னும் திருநாமம் பூண்டு இளமையில் துறந்து சிதம்பரம் மவுன சுவாமிகளிடம் உபதேசம்பெற்று திருவண்ணாமலைக்குத் திரும்பிவந்து இந்த இடத்தில் வரிப்புலிகள் காவல் செய்துகொண்டிருக்க ஆத்ம நிஷ்டராய் நெடுங்காலம் வீற்றிருந்து கலி 4930-ம் ௵ மார்கழிமீ மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் விதேக கைவல்யமடைந்தனர். அன்னாரின் சமாதி கோயிலுக்கருகில் மடாலயமொன்று அழகுபெற அமைந்துள்ளது. ஈசான ஞான தேசிகர் சரிதம் என்னும் தனி நூலில் இவ்வரலாற்றை விரிவாய்க் காணலாம்.

மகிடாசுரமர்த்தனி துர்க்கம்பா ஆலயமும், அறுபத்து மூவர்மடமும், அழகிய சமாதி ஆலயமுடைய பவழக்குன்று



திருவண்ணாமலை-ஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர்



ஸ்ரீமதி ஷண்முக யோகினி.

திருவண்ணாமலை.

மடமும், ப்ரவாளகிரிநாதர் அர்த்தநாரீசர் ஆலயத்தை தனது முடியில் வைத்த பவழக்குன்றமும், சாதுசத்திரமும், தேசாந்தரிகளான அந்தணர்களுக்குஅன்னமளிக்கும் மெ.க. அன்னசத்திரமும் இவைகள் யாவும் கிரிவலத்தில் வரிசையாகக் காணப்படுகின்றன.

ஜடிதி ஷண்முக யோகிநி:—இப்பெயர் புனைந்த அம்மையார் பாண்டிய நாட்டின் சிவகிரி என்னும் தலத்தில் குடிநலமிக்க தொண்டைமண்டலத்து சைவ வேளாளர் மரபில் "அரணிக்கட்டையில் அக்னி"போலுதித்து, ஷண்முகம் என்னும் பெயருடன் ப்ரம்மசாரிணியாய் வளர்ந்து வர 24-ம் வயதில் அருணேசர் ஜங்கமர் வடிவாய்க் கனவில் தோன்றி 'நீ அண்ணாமலைக்கு வருவாயாக' என்றருளி மறைந்தனர். மறுதினம் தலையின் கூந்தல் சடைமுடியாக மாறியதைக்கண்டு ஆச்சரியங்கொண்டு திருவண்ணாமலைக்கு வந்து மன வாக்குக் காயமென்னும் முக்கரணங்களாலும் ஈசருக்குத் தொண்டாற்ற முற்பட்டவராய் குரு லிங்க ஜங்கமங்களைத் தமது திருமேனியாகக்கொண்ட அருணாசலேசரை தியானத்தாலும், பஞ்சாக்ஷர ஜபத்தாலும், சிவனடியார்க் கமுதளிக்கும் வாகீசர் முதலிய நால்வர் குருபூஜைகளாலும், தினந்தோறும் கிரிவலஞ் செய்தல் தக்ஷிணாமூர்த்தி அண்ணாமலையார் அம்பா முதலிய பிம்பங்களுக்கு பாலபிஷேகம் செய்வித்தல் தும்பை மாலை அணிவித்தல் கர்ப்பூரஜோதிகாட்டுவித்தல் என்னும் நியமங்களைக்கைவிடாது அனுஷ்டித்தலாலும் ஆராதித்து, "வேள்வித் தீ" யெனப் பருத்து நீண்ட ஒற்றைச்சடையுடன் 48 வருடங்களாக இத்தலத்தில் தவத்தால் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றனர்.

மலைமேல் நிலை:— மலை அடிவாரத்தில் கீழ்க்குகையும், அதை அடுத்து குகை நமச்சிவாயர் குகையும் உண்டு.

குகை நமச்சிவாயர்:— இப்பெரியார் கன்னட தேசத்து வீரசைவ மரபினர்; கலி நாற்பத்துநான்காம் நூற்றாண்டில் இத்தலத்திற்கு வந்து குருநமச்சிவாயர் என்னும் சீடருடன் இக்குகையில் தவம்புரிந்திருந்ததால் இவர்க்கு இப்பெயர் வந்தது. இம்மகானிடத்தில் சில சித்திகள் இருந்ததாகச் சொல்லுகின்றனர். அருணகிரியந்தாதி முதலிய சில நூல்கள் இயற்றி நெடுங்கால மிருந்து இக்குகையின் அகத்து சமாதி சித்தரானார். இதன் வடபுறம் திருமுலைப்பால் தீர்த்தமும் ஆச்ரமங்களும், மேல்புறம் அருவிக்கரையில் பாத தீர்த்தமும், விரூபாக்ஷ குகையும் அமைந்திருக்கின்றன.

விரூபாக்ஷதேவர்:— இவர் மல்லிகார்ஜுனத்தில் அவதரித்த வீரசைவ மரபினர். நமச்சிவாயர் காலத்தில் இக்குகையுள் தவமியற்றி விபூதி லிங்காகாரமாய் சித்தியடைந்தனர். இதன்மேற்புறத்தில் ஸ்கந்தாச்ரமமும், மலையின் பாதி உயரத்தில் ஏழுசுனையும் அழகிய குகையும் இயற்கையாய் அமைந்துள்ள குளிர்ச்சிதங்கிய மண்டபமும் உண்டு.

மலையுச்சி:— இங்கு அண்ணாமலை உச்சியில் முப்பதடி சதுரமுள்ள பாறையில் அகன்று உயர்ந்த தாமிரக் கொப்பரையில் கார்த்திகைக் கிருத்திகையன்று நெய் கர்ப்பூரம் வர்த்திகளை நிரப்பி மாலை சூரியாஸ்தமன சமயத்தில் பஞ்சமூர்த்திகள் தரிசனமானவுடன் தீபம் ஏற்றுவார்கள். தீபம் ஆறிய பின்பு இதிலிருந்து மை எடுத்துப்போய் பக்தர்கள் ரக்ஷையாக அணிகின்றனர். இங்கு அண்ணாமலையார் உண்ணாமுலை அம்மை பாதங்கள் கற்பாறையின்மீது காணப்படுகின்றன.

க்ஷேத்திரக் காட்சிகள்

முற்றிற்று.

சுபம்.

வேண்டியவர்கள் இப்புத்தகங்களை அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீரமண மஹர்ஷிகள் அருளிச்செய்தவை.

ரமணகீதை மூலம் (நாகரம்).	0	4	0
ஷை (தமிழ் உரையுடன்) ஸாதா பைண்ட்	0	12	0
ஷை ஷை காலிகோ பைண்ட்	1	0	0
ஷை தெலுங்கு லிபி (உரையுடன்).	0	12	0
விவேகசூடாமணி வசனம் (தக்ஷிணாமூர்த்தி தோத்ரம், திருக்கு திருசிய விவேகம், அத்தாமலகம், குருஸ்துதிகளுடன்).	0	7	0
அருணாசல ஸ்துதி பஞ்சகம் (அக்ஷரமணமாலை, பஞ்சரத்னம், பதிகம், அஷ்டகம், பஞ்சகம் அடங்கியது).	0	2	0
தேவிகாலோத்தரம் (ஞானசாரவிசார படலம்).	0	2	0
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்).	0	1	0
உபதேச ஸாரம் (ஸம்ஸ்க்ருதவியாக்யானத்துடன்).	0	1	0
ஷை (தமிழ் உரையுடன்).	0	1	0
ஷை (தெலுங்கு உரையுடன்).	0	1	0
ஷை (மலையாளம் மூலம்).	0	0	6
ஸ்ரீரமண சரித அகவல் [M. சிவப்ரகாசம் பிள்ளை அவர்கள் B. A.]	0	4	0
ஹம்ப்ரீஸ் இயற்றிய அங்கில ரமணசரிதச் சுருக்கம்	0	3	0

அருணாசல நிவாஸ
ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள் அருளியவை.

திருவண்ணாமலை க்ஷேத்ரபடம் (பஞ்சமூர்த்திகள்கிரிவலக்காட்சியுடன் 23 × 18)	0 2 0
ஸ்ரீமஹர்ஷி ரமண சரிதம் (உபதேச மொழிகள்:— நானார்? உபதேச உந்தியார், ஆன்ம வித்தை அடங்கியது).	0 5 0
ஸ்ரீ அருணாசல மாஹாத்மிய வசனம் (தத்வார்த்தம், க்ஷேத்ரபடம், இங்குள்ள மகான்களின் சரித்ரபடங்களும் அடங்கியது).	0 12 0

ரமணதாசர், கா. சு. சேஷகிரி அய்யரவர்கள் B.A.
எழுதியவை.

உத்தம பக்தர்கள்.	0 2 0
உத்தம பத்தினிகள்.	0 2 0
உதயணன் கதை.	0 5 0
இகபரசுகம்.	0 8 0
ஈச்வரலீலை.	0 8 0
டஜன் வெபன்ஸ் (இங்கிலீஷ்).	0 8 0
மகா பாரத வசனம் (முதற்பாதி).	1 0 0
ஷை (Part I) இங்கிலீஷ்.	0 12 0

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்.
திருவண்ணாமலை.